# திருமாவளவன்



## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# திருமாவளவன்

கா. கோவிந்தன்

கழக வெளியீடு: ௫௮௮.

# திருமாவளவன்

ஆசிரியர் :
கா. கோவிந்தன்

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி, :: சென்னை-1.

First Edition : June. 1951.

[All Rights Reserved]

*Published by:*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

# பதிப்புரை

முற்காலத்து மன்னர்கள் தம் குடிகட்கு நலஞ் செய்வதுவே தம் கண்ணுங்கருத்துமாகக் கொண்டிருந்தனர். அம்மன்னர்கள் அறிவும் இரக்கமும் அன்பும் அணிகலனாகக்கொண்டு வாழ்ந்துவந்தனர்.

அவர்கள் ஆட்சியின்கீழ் வாழ்ந்துவந்த நாட்டு மக்களின் நிலையை 'வான வில்லையன்றிக் கொலை வில்லைக் கண்டறியார்; கலப்பை யென்னும் உழு கருவியை அல்லாமல் கொலைக்கருவிகளைக் கண்டறியார் உன் குடிகள்,' என்று ஒரு புலவர் ஓர் மன்னனை வாழ்த்துங்கால் குறிப்பிடுகின்றார்.

ஓர் அரசனும் தன்னைக்குறித்து வஞ்சினங் கூறுங்கால் 'எம் அரசன் கொடியவன் என்று குடிகள் என்னைப் பழிதூற்றுகின்ற கொடுங்கோலனாகுக; கல்வி கேள்விகளையுடைய மாங்குடிமருதனார் போன்ற புலவர்கள், என் நாட்டையும் என்னையும்பற்றிப் புகழ்ந்து பாடாமல் இருக்கக்கடவாராக,' என்று கூறுகின்றான்.

ஆகவே, அக்கால வேந்தர்கள் தம் நலங்கருதாது குடிகள் நலமொன்றே கருதி வாழ்ந்தனரென்று பழங் கால உண்மை வரலாறுகளால் காணக்கிடக்கின்றது. இம்மன்னர்போன்ற செங்கோல்வேந்தர் தம் உண்மை வரலாறுகளை ஆராய்ந்து கண்டறிவது நாட்டுக்கும் மக்கட்கும் நலம்பல பயப்பதாகும். ஆதலால் மேற் கூறிய செங்கோல் வேந்தர்கள்போன்ற சீரிய கொள்கையுடையவனே 'திருமாவளவன்' என்னும்

கரிகாற் சோழமன்னன். அம்மன்னனின் வரலாற்றை தமிழர்கள் யாவரும் நன்கறியவேண்டுவது முதற் பெருங் கடமையாகும்.

இந்த நன்முறையில் திருமாவளவன் வரலாற்றை நம்நாட்டு இலக்கிய அகச்சான்று புறச்சான்று; மேல் நாட்டு ஆசிரியர்கள், கீழ்நாட்டு ஆசிரியர்கள் குறித்துள்ள குறிப்புகள்; கல்வெட்டு; நாட்டுவரலாறு முதலிய பல்வகை ஆராய்ச்சிமுறைகளால் நன்கு ஆராய்ந்து 'திருமாவளவன்' என்னும் பெயரால், திருவத்திபுரம் திரு. கோவிந்தனவர்கள் நன்முறையில் ஆக்கி உதவியுள்ளார்கள். அவர்கட்கு எம் உளமார் நன்றி.

இதில் கரிகாலன் பிறப்பு, வளர்ச்சி, வெற்றி, ஆட்சிமுறை, கொடைத்திறம் முதலிய அவன் அரும் பெரும் சிறப்புக்கள் குறித்து நன்கு விளக்கப் பெற்றுள்ளன. அவன் காலத்துப் புலவர்கள் வரலாறுகளும் அவர்களின் திறங்களும் நயம்பட எடுத்துக்காட்டி விளக்கப் பெற்றிருக்கின்றன.

இத்தகைத்தாம் இந்நூல் கண்கவர் வனப்பிற்றாய் முதன்முதல் வெளிவருகின்றது. இதனை நம் தமிழ்மக்கள் வாங்கிக்கற்று நற்பயன் எய்துவார்களாக; இத்தகைய நற்பணிக்கு எங்களையும் மேன்மேல் ஊக்கி ஆக்கமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

திருவாளர். மு. இராகவையங்காரவர்கள் எழுதிய சேரன் செங்குட்டுவன் என்ற நூலைப் படிக்க நேர்ந்தகாலை, அதில், செங்குட்டுவன் தாய் நற்சோணை என்பதைக் கொண்டு, அவனுக்கும் சோழர்குடிக்கும் உள்ள தொடர்பு குறித்து, அவர்கூறிய கருத்துக்கள் முரண்படுகின்றன என்ற எண்ணம் எழுந்தது; அவ்வெண்ணம் எழுந்த அன்றே, சங்கநூல்களில் புலவர் பலராலும் பாராட்டப் பெறும் சேர, சோழ, பாண்டிய அரசர்களைக் காலமுறைப்படி வரிசைப்படுத்தி, அவ்வரசர்களிடையே நிலவிய உறவுமுறையை விளக்கி எழுதுதல்வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. இவ்வெண்ணமே நோக்கமாக, சங்கநூல்களை ஊன்றிப் பயின்றுவருங்கால், கரிகாலன் வரலாறு பற்றிய சில உண்மைகள் வெளியாயின. பின்னர், வரலாற்றுப் பேராசிரியர், நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் எழுதிய நூல்களைப் படிக்கவேண்டிய ஒருநிலை உண்டாயிற்று; Studies in Chola History and Administration என்ற அவருடைய நூலில் அவர் கரிகாலனைப்பற்றி எழுதியுள்ள கட்டுரையைப் படித்தபொழுது பழைய எண்ணம் மீண்டும் தலைதூக்கலாயிற்று. அதில், திருவாளர் சாஸ்திரியார் அவர்கள், கரிகாலன் வடநாட்டுச் செலவுபற்றியும், அவன் காவிரிக்கரை அமைப்புப்பற்றியும் கொண்டுள்ள முடிவுகள் நன்கு ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டன அல்ல என்பதும் புலனாயிற்று; ஆகவே, தமிழ்அரசர்கள் அனைவர் வரலாற்றையும் ஆராய்ந்து வெளியிடுவதற்குமுன் கரிகாலன் வரலாற்றைமட்டும் ஆராய்ந்து முதற்கண் வெளியிடுதல், பின்னூல்களுக்கும் வழிகாட்டியாக அமையும்

என்று எண்ணி, கரிகாலன் வரலாறு குறித்து, அறிஞர் பெருமக்கள் இதுவரை எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் எல்லாவற்றையும் ஒருங்கு கொணர்ந்து ஒப்புநோக்கிப் படித்ததில், அவர்கள் அனைவரும், கரிகாலன் வரலாற்றில் ஒரு பகுதியை உண்மை என ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளனர் எனில், மற்றையோர் ஒப்புக்கொள்ளாது மாறுபட்டுள்ளனர் என்ற நிலைமையையே மேற்கொண்டுள்ளனர் என்பது புலனாயிற்று. ஆகவே, அவர்கள் ஒவ்வொருவரும்கூறும் கருத்துக்கள் அனைத்தையும் நடுநிலைமைக்கண் நின்று ஆராய்ந்து, கரிகாலன் வரலாற்றை முடிவுசெய்தல் நலம் என்றே இப்பணியை மேற்கொண்டேன்; எனினும், அப்பணியை மேற்கொண்ட யானும் அவன் வரலாற்றை அறுதியிட்டு முடிவு செய்யாமலே விட்டுச் செல்ல வேண்டியவனாயினேன்; இந்நூலுள், யான் செய்துள்ளதெல்லாம் அவன் வரலாற்றோடு இயைபுடையதாக ஏற்றுக் கொண்டு சிலர் வெளியிடும் கருத்துக்களை, ஒப்புக் கொள்ளாதார், ஒப்புக் கொள்ளாமைக்குத் தாம் காட்டும் காரணங்கள் எத்துணை வலியுடையன என்பதையும், அவ்விருவர் கருத்துக்களுள் ஏற்பன எவை, ஏலாதன எவை என்பதையும், கிடைத்த சிலபல சான்றுகளைக் கொண்டு ஆராய்ந்து முடிவு கூறியதேயாம். இதுபோன்ற முயற்சியில் தொடர்ந்து பணியாற்ற, தமிழ்ப் பெருமக்களின் அன்பும், ஆதரவும் தேவை என்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இச் சிறுநூலை ஏற்று வெளியிட்ட தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு என் நன்றி; எல்லோர்க்கும் என் வணக்கம்.

திருவத்திபுரம்,<br>14—3—1951. } கோவிந்தன்.

# இந்நூல் எழுதத் துணைபுரிந்த
# மேற்கோள் நூல்கள்

1. அகநானூறு
2. கரிகாற் பெருவளத்தான் —L. உலகநாத பிள்ளை
3. கலிங்கத்துப்பரணி
4. கலைமகள்
5. குலோத்துங்கச் சோழன் உலா
6. குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ்
7. குறுந்தொகை
8. சிலப்பதிகாரம்
9. சிறுபாணாற்றுப்படை
10. செந்தமிழ்
11. சேரன் செங்குட்டுவன் —மு. இராகவையங்கார்
12. தமிழ்ப்பொழில்
13. தமிழ்விடு தூது
14. தேவாரம் —சம்பந்தர்
15. தொல்காப்பியம் - சொல்லதிகாரம்
16. ,, பொருளதிகாரம்
17. நற்றிணை
18. நன்னூல்
19. பட்டினப்பாலை
20. பதிற்றுப்பத்து
21. பரணர் —வேங்கடராஜுலு ரெட்டியார்
22. பழமொழி
23. புறநானூறு
24. பெரிய புராணம்
25. பொருநராற்றுப்படை

26. மணிமேகலை
27. யாப்பருங்கலக்காரிகை
28. விக்கிரமசோழன் உலா
29. Ancient India —Dr. S. K. Ayangar
30. Coldwell's Comparative Grammar
31. Early History of India —V. A. Smith
32. Epigraphia India
33. History of the Tamils—P. T. Srinivasa Ayangar
34. Pallavas of Kanchi —R. Gopalan
35. The Pandyan Kingdom —K. A. Nilakanta Sastri
36. Studies in Chola History and Administration —K. A. Nilakanta Sastri
37. Cholas ,,
38. The Tamils 1800 years ago —Kanakasabhai Pillai
39. The Kaveri, the Maukharis & the Sangam age —T. G. Aravamuthan
40. Upham's Maha-Vamsam
41. Indian Antiquary
42. History of India —Sathyanathan

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | சோழநாடும் நகரமும் | 8 |
| 3. | பெற்றோரும் உற்றோரும் | 21 |
| 4. | கரிகாலன் பெயர்க்காரணம் | 39 |
| 5. | அரச உரிமை | 48 |
| 6. | கரிகாலன் பெற்ற வெற்றிகள் | 56 |
| 7. | காஞ்சிநாடும் கரிகாலனும் | 65 |
| 8. | கரிகாலனும் காவிரியும் | 81 |
| 9. | புலவர் வரலாறு | 94 |
| 10. | கரிகாலன் பண்புடைமை | 107 |
| 11. | காலம் | 115 |

# திருமாவளவன்

## 1. தோற்றுவாய்

இமயம்முதல் குமரிவரை பரவியுள்ள இந்தியப் பெருநிலப்பரப்பில், மிகப் பழங்காலத்தே தோன்றிய அரசுகள் பலவற்றுள், தெற்கே வேங்கடம் குமரிகட்கு இடைப்பட்ட சேர, சோழ, பாண்டிய அரசுகளே மிகச் சிறந்த அரசுகளாம் என்பது, வரலாற்று ஆசிரியர் பலரானும் ஒப்புக்கொள்ளப்பெற்ற உண்மையாகும். இப்பேர் அரசுகள் மூன்றும், மேற்கே உரோமானியப் பேர்அரசும், கிழக்கே சீனப் பேர்அரசும் சிறந்து விளங்கிய அக்காலத்திலேயே, அவற்றோடு ஒப்பச்சிறந்து விளங்கிய பழமையும் பெருமையும் உடையனவாகும். இவ்வரசுகள் இன்ன காலத்தே தோன்றின என்றோ, இன்னரால் தோற்றுவிக்கப்பட்டன என்றோ, அறுதியிட்டுக் கூறமாட்டாப் பழமை வாய்ந்தன. இவ்வரசுகளின் பழமை பற்றிக் கூற வந்த ஆசிரியர் பலரும், "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே மூத்தகுடி," "படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வரும் குடிகள்," என்றே கூறி அமைவாராயினர். வடமொழி இராமாயண ஆசிரியர் வான்மீகியாராலும், அம்மொழிப் பேரிலக்கணப் பேராசிரியர் காத்தியாயனராலும், தங்கள் நூல்களில், சீரும், சிறப்பும் பெற்ற நாடுகளாக, இந்நாடுகள் கூறப்பட்டுள்ளமையாலும், இந்திய நாட்டின் பெரும்பகுதியினை வென்று ஒரு குடைக்கீழ் வைத்து உலகாண்ட மவுரியப் பேர்அரசன் அசோகனால்,

தன்னோடு ஒத்த, தன் ஆட்சிக்கு உட்படாப் பேரரசுகளாக மதிக்கப்பெற்று, அவ்வாறே, இரண்டாவது, பதின் மூன்றாவது கல்வெட்டுக்களில்[1] கூறப்பட்டுள்ளமையாலும், இவ்வரசுகளின் பழமையும், பெருமையும், மேலும் சிறந்து விளங்குவது அறியலாம்.

மூவேந்தர் ஆட்சிக்குட்பட்ட இப்பெருநிலப் பரப்பிற்கு "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு"[2] என்றே ஆசிரியர் தொல்காப்பியனார் பெயரிட்டு அழைப்பாராயினர். புறமும், சிலம்பும், மேகலையும் இந்நாட்டைத் "தமிழகம்" என்றே அழைத்துள்ளன. அவை: "வையக வரப்பில் தமிழகம்"[3] "இமிழ்கடல் வரைப்பில் தமிழகம்"[4] "சம்புத் தீவினுள் தமிழகம்"[5] என்பன.

இச் சேர சோழ பாண்டியர் மூவரும், ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் எனவும், அவர்கள் தென்னாட்டில் நாகரிக வளர்ச்சிக்குத் தோன்றுமிடமாகிய தாம்பிரபர்ணி ஆற்றின் கரையில், கொற்கையைத் தலைநகராகக்கொண்டு வாழ்ந்து வந்தனர் எனவும், பின்னர் யாதுகாரணத்தாலோ அவர்கள், தம்முள் பிரிந்தனர் எனவும், அவருள் பாண்டியர் ஆங்கேயே தங்கிவிட்டனர்[6] எனவும், ஏனை இருவரும் முறையே மேற்கினும், வடக்கினும் சென்று, தங்கள் தங்கள் பெயரால் தனியரசு அமைத்துக்கொண்டனர்

---

1. Edicts of Asoka.

2. தொல்காப்பியம் பொருள். செய்யுள். 79.

3. புறநானூறு 168.

4. சிலப்பதிகாரம் 3 : 37. 5. மணிமேகலை 17 : 62.

6. மூவேந்தரைக் குறிப்பிடும்போதெல்லாம், சேர, சோழ, பாண்டியர் என, பாண்டியர் ஈற்றில் கூறப்படுவதால், அவர் மூவருள் இளையராக இருத்தல்வேண்டும். ஆகவே, இளையராகிய அவர் இருந்த இடத்திலேயே இருந்துவிட்டனர் போலும்.

எனவும் பழைய வரலாறுகள் கூறுவதாகக் கூறுவர் பெரியார் கால்டுவெல் அவர்கள்.[1]

இங்ஙனம் பழமையும், பெருமையும் பெற்று விளங்கிய சேர, சோழ, பாண்டியருள் நடுவண் உள்ளவரே திருமாவளவனின் முன்னோராவர். இச்சோழ அரசர்கள், கிள்ளி, வளவன், செம்பியன் என்ற பிற சொற்களாலும் அழைக்கப்பெறுவர்; இப்பெயர்களுள், கிள்ளி என்பது தோண்டுதல் என்று பொருள்படும் "கிள்" (உ-ம். கிண்டினான்) என்ற சொல்லடியாகப் பிறந்ததாகக் கூறுவர் சிலர்;[2] வளவன் என்பது, "காடு கொன்று நாடாக்கிக், குளம் தொட்டு வளம்பெருக்கி"யோர். அல்லது வளம் மிக்க நாட்டை ஆள்வோர் என்ற பொருளில் வழங்குவதாகும்; செம்பியன் என்பது தன்பால் அடைக்கலம் புகுந்த புறாவின் பொருட்டுத் துலைபுக்க சிபி மன்னன் மரபினர் என்ற பொருளில் வழங்குவதாகும்.

சோழ அரசின் தோற்றமும், தொன்மையும் எவ்வாறு அறியக்கூடாதனவாக உள்ளனவோ, அவ்வாறே அவர் பெயரின் தோற்றக் காரணமும் அறியக்கூடாததாகவே உளது. ஆரியர்க்குமுன் தென்னாட்டில் வாழ்ந்த கருப்பு மனிதர் என்ற பொருளில் வழங்கும். "கால" (Kála) அல்லது "கோல" (Kôla) என்ற வடமொழிச் சொற்களினின்று வந்தது எனச் சிலரும், சோளம் (Millet) விளையும் நாடு "சோள நாடு"; அது சோழநாடு ஆயிற்று எனப் பிறரும், திருடன் என்ற பொருளில் வழங்கும் "சோரன்" (Côra) என்ற சொல்லிலிருந்து வந்தது என வேறு சிலரும் கூறுவர்.[3] அதன் தோற்றம் எதுவாயினும், "சோழ"

1. கால்டுவெல் ஒப்பிலக்கணம் பக். 14.

2. 3. K. A. நீலகண்ட சாஸ்திரியார் "சோழர்" பக். 25, 24.

என்ற சொல், அந்நாட்டையும், அந்நாட்டில் வாழ்ந்த மக்களையும் குறிப்பதாக மிகப் பழைய காலத்திலிருந்தே வழங்கப்பட்டுள்ளது என்பது தெளிவு.

செந்தமிழ் வளர்த்தவர் என்ற சிறப்பு பாண்டியர்க்கே உரியது என்ற பழைய வழக்குளதெனினும், பாடினோர், பாடப்பட்டோர் வரிசையில் பல சோழ மன்னர்களும் இடம் பெற்றுள்ளனர் ஆதலாலும், சோழர் தலைநகருள் மிகப் பழையதாகிய உறையூர், புலவர்பலர் தோன்றித் தொழிலாற்றிய இடமாக இருத்தலாலும், தமிழ்வளர்த்த பெருமை, ஏனைச் சேர, பாண்டியரைப்போலவே, சோழர்க்கும் உரித்து என்பது தெளிவாம்.

வடவேங்கடம் தென்குமரிகட்கு இடைப்பட்ட தமிழகம், தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குடகு நாடு, கற்கா நாடு, வேணாடு, பூழி நாடு, பன்றி நாடு, அருவா நாடு, அருவாவடதலை நாடு, சீத நாடு, மலை நாடு, புனல்நாடு எனச் செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலமாக வகுக்கப்பட்டிருப்பவும், "தென்பாண்டி நாட்டார், ஆவினைப்பெற்றமென்றும், சோற்றைச் சொன்றி என்றும்; குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என்றும்; குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும்; கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என்றும்; வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும்; பூழி நாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும்; அருவா நாட்டார் செய்யைச் செறு என்றும், சிறுகுளத்தைக் கேணி என்றும்; அருவாவடதலையார் புளியை எகின் என்றும்; சீத நாட்டார் தோழனை எலுவன் என்றும், தோழியை இகுளை என்றும் வழங்குவர்"[1] என, அந்நாடுகளில் வழங்கும் தமிழ்ச்சொற்கள், தமிழின் திசைச் சொற்

1. நன்னூல் சொல்லதிகாரம் சூ. 16. (விருத்தியுரை)

கள் எனக் கொள்ளப்படுவதையும், சேனாவரையர் போன்ற உரையாசிரியர் பலரும், "செந்தமிழ் நிலமாவன வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம்"[1] எனக் கூறுவதையும்

"முன்னூறுந் தென்பாண்டி முதற்புனனாடுரன
பன்னிரண்டு நாடும்அப் பால்நாடே—அந்நாட்டுள்
வையை, கருவை, மருதாறு, மருவூர் நடுவே
ஐய, நீ வாழும் அரண்மனையோ?"

எனத் தமிழ்விடு தூதும்,[2]

"மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்தமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியில்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவ மாதவரும் தழைத்தினி திருக்கும்
மையறு சோழ வளநா டென்ப"

என யாப்பருங்கலக் காரிகை மேற்கோட் செய்யுளும்[3] கூறுவதையும் நோக்குங்கால், தமிழ்ச்சங்கம் தழைத்து வாழ்ந்த பாண்டிநாடே செந்தமிழ் நாடாகும் என்ற பொதுக் கொள்கைக்கு இடையில், சோழ நாடுஞ் செந்தமிழ் நாடாகும் என்ற கொள்கையும் நிலவியிருந்தது என்பதும் தெளிவாகும்.

இச் சோழரும், அவர்தம் நாடும், பண்டைய தமிழ் நூல்களில் பாராட்டப் பெற்றிருப்பதோடு, பிறநாட்டுப் பேர் அறிஞர் பலராலும் பெருமைபடுத்தப் பெற்றுள்ளன. கி. பி. 81-96-ல் எழுதப்பெற்ற 'பெரிபுளூஸ் மாரிஸ் எரித்ரியா' (Periplus Maris Erythraei)[4] என்ற

1. தொல். சொல். 398. உரை. 2. தமிழ்விடு தூது.
3. யாப்பருங் கலக்காரிகை.
4. இந்நூல் பிளினி (Pliny) என்ற நிலநூல் பேராசிரியர் அளித்த குறிப்புக்களைக்கொண்டு எழுதப்பெற்றது.

நூலில், கொற்கையை அடுத்து, கடலைச் சார்ந்து, "கடற்கரை நாடு" என ஒன்றும், "அர்கரு" (Argaru) என்ற உள்நாடு ஒன்றும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இவையிரண்டும் முறையே, கடலைச் சார்ந்து விளங்கிய புகாரையும், உள்நாட்டு ஊர் உறையூரையும் தலைநகர்களாகக் கொண்டு அமைக்கப்பெற்ற இரு சோழ அரசுகளையே குறிக்கின்றன என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. மேலும், அரை நூற்றாண்டு கழித்து வாழ்ந்த மற்றொரு நிலநூல் பேராசிரியர் "தாலமி" (Ptolemy) என்பார், காவிரி கடலோடு கலக்குமிடத்தில் இருக்கும் காவிரிப்பூம்பட்டினத்தைக் "கபெரீஸ்" (Khabieris) எனவும், நாகப்பட்டினத்தை "நிகாமா" (Nikama) எனவும், சோழநாட்டு நகர் உறையூரை "ஓர்துரா ரெகியா சோரநடி" (Orthura Regia-Sornati) எனவும் அறிந்து தம் நூலில் குறித்துள்ளார். கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்ட "மிலிந்தா அரசனுடைய கேள்விகள்" (The Questions of King Milinda) என்ற புத்த நூல் ஒன்று, அக்கால கடற்கரைப் பட்டினங்களுள், சிறந்தனவற்றுள் ஒன்றாகக் "கோளபட்டினம்" என்ற ஒன்றைக் குறிப்பிடுகிறது. பாலி மொழியில் எழுதப்பெற்ற புத்த இலக்கியங்களுள் குறிப்பிடப் பெற்றுள்ள "காவேரிப்பட்டினமும்," இக் "கோள பட்டினமும்" ஒன்றே ஆகும். பாலி மொழியில் எழுதப்பெற்றதும், இலங்கை வரலாற்றை விரித்துரைப்பதும் ஆகிய "மகாவம்சம்" (Mahavamsam) என்ற நூல், கி. மு. இரண்டாம் நூற்றாண்டில், உயர் தமிழ்க் குடியில் வந்த "எளாரன்" (Elara) என்பவன், சோழ நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து இலங்கை அரசன் "அசேலன்" (Asela) என்பவனை வென்று அந்நாட்டை நாற்பத்தி நான்கு ஆண்டுகள் நீதியும், நேர்மையும் விளங்க

ஆண்டு வந்தான். பின்னர், அசேனன் மகன் "துட்டகாமணி" (Dutthagamani) என்பவன், இலங்கையின் ஒற்றுமையை உண்டாக்கவும், புத்தமதத்தை நிலைநாட்டவும், எளாரன்மீது படையெடுத்துச் சென்று, அனுராதபுரத்தில் அவனை வென்று, அவனுக்கு இறுதிக் கடன் செய்தான் என்ற வரலாற்றைக் குறிப்பிடுகிறது. இந்த வரலாறு "மகாநாமன்" (Mahanaman) என்பவரால் கி. பி. ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது என்பர்.[1]

இவ்வாறு, பழந்தமிழ் இலக்கியங்களாலும், பிறநாட்டு அறிஞர்களாலும் பாராட்டப்பெற்ற சோழ அரசர் தம்முள், கடைச்சங்க நூல்களால் பாராட்டப்பெற்றோருள் தலைசிறந்தோன் கரிகால் பெருவளத்தான் என வழங்கப் பெறும் திருமாவளவன் ஆவன். இவனுடைய வரலாறு, புறநானூறு, அகநானூறு போன்ற எட்டுத்தொகையினும், பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை போன்ற பத்துப் பாட்டினும், சிலப்பதிகாரம், மணிமேகலைபோன்ற ஐம் பெருங் காப்பியங்களினும், பழமொழி போன்ற பதினெண் கீழ்க்கணக்கினும், கலிங்கத்துப் பரணி, விக்கிரமசோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் போன்ற பின் நூல்களிலும், மகாவம்சம் போன்ற பாலி மொழி நூல்களினும், விஜயாலயன் வழி வந்த சோழர், தெலுங்குச் சோழர் கல்வெட்டுக்கள் பல வற்றினும் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் கூறப் பட்டுளது. இவற்றின் துணை கொண்டு, நடுநின்று ஆராய்ந்து, திருமாவளவன் வரலாற்றை இயன்ற அளவு விரித்து உரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

---

1. K. A. நீலகண்ட சாஸ்திரியார், "சோழர்" பக். 35.

# 2. சோழநாடும் நகரமும்

தமிழகம் மிகப் பழைய காலத்திலிருந்தே சேர, சோழ, பாண்டிய மரபினரால் ஆளப்பட்டு வந்தது என்பது "வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்ற தொல்காப்பியர் கூற்ருன் தெளிவாகும். மூவேந்தர் நாடுகளும், சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என வழங்கியதோடு, அவை முறையே "குடபுலம்," "குணபுலம்," "தென்புலம்" என அவை அமைந்துள்ள திசையானும் அழைக்கப் பட்டன என்பது, "குடபுலம் காவலர் மருமான்," "குணபுலம் காவலர் மருமான்," தென்புலம் காவலர் மருமான்"[1] என்ற சிறுபாணுற்றுப்படை அடிகளான் தெளிவாம். இவற்றுள், குடபுலம் என்பது, கொல்லிமலையை உள் அடக்கிய தமிழகத்தின் மேல்பால் நிலப்பகுதியும், குணபுலம் என்பது, அம்மலைக்கும், அம்மலையில் உண்டாகும் கரை போட்டாறுற்றிற்கும் கீழ்ப்பாலுள்ள நிலப்பகுதியும், தென்புலம் என்பது பழனிமலைத் தொடர்க்குத் தெற்கணுள்ள நிலப் பகுதியுமாகும். செந்தமிழ் நாட்டினைச் சேர்ந்த நிலங்களாகப் பண்டைக்காலத்துக் கருதப்பட்ட பன்னிரு நிலங்களில், புனல்நாடு பன்றிநாடு அருவாநாடு என்பவை சோழநாட்டைச் சார்ந்தனவாம். அது இக் காலை, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களும், வட, தென் ஆற்காடு மாவட்டங்களின் பகுதியும் உள் ளடங்கிய நிலப்பகுதியாகும்.

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள்வெள் ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையும்—வடதிசையில்
ஏணாட்டு வெள்ளாற் றிருபத்து நாற்காதம்
சோணாட்டிற் கெல்லையெனச் சொல்"

---

1. சிறுபாணாற்றுப்படை: 47, 79, 63.

என்ற பழைய வெண்பா ஒன்றினாலும் சோணாட்டெல்லை அறியக்கிடக்கிறது.

"சோழவளநாடு சோறுடைத்து," என்ற சிறப்பிற்குக் காரணமாய் இருப்பது, தன் போக்கின் பெரும்பகுதியைச் சோழநாட்டில் பெற்றிருக்கும் காவிரிப் பேராறே ஆதலின், அச்சோழநாடு, "காவிரிநாடு," "காவிரிசூழ்நாடு" "காவிரிபுரக்கும் நாடு" என இலக்கியங்களில் வழங்கப்பட்டுள்ளது. காவிரியே அன்றி, அதற்குத் துணையாகவும் அமைந்த மற்றப் பேர் ஆறுகள் பலவும் பாய்ந்து அந்நாட்டை வளமாக்குவதால், நீர்வளம் நிரம்பியது சோழநாடு என்ற கருத்தில் அந்நாடு, பொதுவாக, "நீர்நாடு" எனவும் "புனல் நாடு" எனவும், அழைக்கப்பெறும்.

சோழ நாடு, "தென்னாட்டு நெற்களஞ்சியம்" என்ற சிறப்புப் பெயரினை இன்று பெற்றிருப்பதேபோல் அன்றும் பெற்றிருந்தது என்பது,

> "சாலி நெல்லின் சிறைகொள் வேலி
> ஆயிரம் விளையுட் டாகக்
> காவிரி புரக்கும் நாடு."[1]

என்ற பத்துப் பாட்டடிகளான் விளங்கும்.

நாட்டைப்பற்றிக் கூறவந்த வள்ளுவர், 'தள்ளாவிளையுள், தக்கார், தாழ்விலாச் செல்வர்' முதலியோர் உண்மையே நல்ல நாட்டிற்குப் பண்பாகும், என்று கூறியவர், 'இருபுனலும், வாய்ந்த மலையும், வருபுனலும் நாட்டிற்கு உறுப்பாகும்' என்றும் கூறியது, முன்னவற்றை எய்துதற்கு இவையே துணைபுரிவன ஆம் என்ற கருத்தானே ஆகும். சோழ நாடு, காவிரி புரக்கும் நாடு; அக்காவிரி, வான் பொய்ப்பினும் தான் பொய்யாப் பெருமலை

1. பொருநராற்றுப்படை : 246-48.

யைத் தனக்குப் பிறப்பிடமாக உடையது; ஆகவே, பெரு வறன் ஆகிய பண்பில் காலையும், நுரைத்த தலையுடன் எங்கும் பரந்து பாய்ந்து, அந்நாட்டில் பொன்னைக் கொழிக்கும் காவிரி, வற்றாது பாய்வதால், அந்நாட்டு உழவர் ஏற்றம் முதலாயின கொண்டு நீர் இறைக்கவேண்டிய இன்றியமையாமை அற்றவர் என்பர் இளங்கோவடிகள்.[1]

இவ்வாறு நீர்வளம் மிக்கமையால், சோழநாட்டுக் கழனிகளில் என்றும் விளைவறு; விளைவு அருமையாலும், வேலி ஆயிரமாக விளைவதாலும், விளைந்த நெற்கூடுகள் நாடெங்கும் மலைக்குன்றுகளைப்போலக் காட்சியளிக்கும்; விளைந்து நிற்கும் செந்நெற் கதிர்களைத்தின்ற எருமைக் கன்றுகள், உண்ட இளைப்புத்தீர அந்நெற் கூடுகளின் நிழலிலே துயில்கொள்ளும்; சேற்றில் புரண்டும் தம் உடற்றினவு நீங்கப்பெறாத எருமைகள், அந்நெற் கூடுகளில் தம் உடலை உராய்வதால், அக்கூடுகளின் புரிநெகிழ்ந்து, உள் கிடக்கும் உணவுப் பொருள்கள் கீழே சொரியும். ஆலையில் இட்டுப் பிழிந்தெடுத்த கருப்பஞ்சாற்றைப் பாகு ஆக்கக் கொளுவிய தீயால், அண்மையில் உள்ள கழனிகளில் மலர்ந்திருக்கும் நெய்தற் பூக்கள் வாடித் தம் கவின் இழக்கும். கடலைச்சார்ந்த சிற்றூர்களைச் சூழஉள்ள கழிகளில், கடற்பொருளாகிய உப்பை உள்நாட்டிற்குக் கொண்டு சென்று விற்று, அதற்கு விலையாகப்பெற்ற நெல்லொடுவந்த படகுகள் பல வரிசையாகக் கட்டப் பட்டிருக்கும்.

---

1. "காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓவிறந் தொலிக்கும் ஒலியே அல்லது
ஆம்பியும், கிழாரும், வீங்கிசை யேத்தமும்,
ஓங்குநீர்ப் பிழாவும் ஒலித்தல் செல்லா." சிலம்பு : 10 : 108-111.
ஆம்பி, கிழார், பிழா முதலாயின நீர் எடுக்கும் கருவி வகைகள்.

வீட்டின் வாயில்தோறும், உணவுப்பொருள்களை உலர்த்திவிட்டுக் காவல்புரியும் மகளிர், அப்பொருளை உண்ணவரும் கோழி முதலாயவற்றைத் தம் காதணிகளைக் கழற்றி அவற்றின்மீது எறிந்து ஓட்டுவர். அவ்வாறு அவர்கள் எறிந்த அக்குழைகள், நடைபயில் சிறுவர், அவ் வழியாக ஓட்டிவரும் முக்கால் சிறு தேரைப் போக வொட்டாமல் தடைசெய்யும். சிற்றூர்வாழ் ஆடவர், தம் தொழில் முடிந்த ஓய்வுக்காலங்களில் இருவின் சூட்டை யும், ஆமைப் புழுக்கலையும் உண்டு, ஊர்மன்றங்களில் ஒன்றுகூடித் தம்தம் ஆற்றல் தோன்ற ஒருவர் மெய், ஒருவர் மெய்யோடு பொருந்த விளையாட்டுப் போர்செய்தும், ஆட்டுக்கிடாய்ச் சண்டை, கோழிச் சண்டை முதலாயின கண்டும் களித்து வாழ்வர். இத்தகைய வளம்மிக்க குடிகள் வாழும் சிற்றூர்கள் பல நிறைந்தது சோழநாடு.

தங்களைப்பற்றிப் பிறர் கூறும் புகழ் உரைகள் மேன் மேலும் வளர்வதை விரும்புவோர் அமைத்த அறக்கூழ்ச் சாலைகளில், சோறு ஆக்கிய கொழுங்கஞ்சி, ஆறுபோலப் பரந்து ஒழுகும்; அதன்மீது ஏறுகள் பொருவதால் அக் கஞ்சி சேறுபடும்; அச்சேற்றின்மீது தேர்பல ஓடுவதால் சேறு புலர்ந்து வெண்ணிறத் துகள்கள் அந்நாடெங்கும் பறக்கும். அந்நாட்டு ஆடவரும், மகளிரும் தம் உடற் பிணிபோகக் கடல் நீரில் குளித்தும், பின்னர்க் கடல் நீர் பட்டதால் உண்டாகிய உப்பு போன்ற மாசுபோகுமாறு, கடற்கரையைச் சார்ந்துள்ள நல்ல நீர்நிலைகளில் படிந்து ஆடியும் வருவர். அந்நாட்டு மக்கள், மாலைவேளையில் பாடல் ஓர்ந்தும், நாடகம் நயந்தும், வெண்ணிலவின் பயன் துய்ப்பதற்காக மாகாவிரி மணலினும் கடற்கரைச் சோலைகளினும் தங்கித் துயில் கொள்வர். சோழநாட்டு மக்கள் பகலில் உடுத்த பட்டாடையை நீக்கிவிட்டு, இரவிற்

கான மெல்லிய துகில் உடுத்தும் அளவு உயர்ந்த நாகரிகம் பெற்று விளங்கினர்.

சோழநாட்டு நகரங்களாகப் பண்டைக்காலத்தில் விளங்கியவை என, புகார், உறையூர், அழுந்தூர், ஆலூர், வெண்ணில், இடையாறு, குடந்தை முதலாயின சிறப்பாகக் கூறப்பட்டாலும், அவற்றுள் புகாரும், உறையூருமே திருமாவளவன் காலத்தில், சோழநாட்டுத் தலைநகர்களாகச் சிறப்புற்றிருந்தன.

புகார் :—சோழர் தம் பழைய ஊர் புகார். "சோழன் மூதூர்ப் பேராச் சிறப்பின் புகார்" என இதன் பழைமையும் சிறப்பும் தோன்றப் பாராட்டுவர் இளங்கோவடிகள்.[1] இந்நகர் "பதியெழுவறியாப் பழங்குடிகளையும், பொதுவறு சிறப்பினையும்" உடையது என்ப.[2] இது காவிரிப்பூம் பட்டினம் எனவும் அழைக்கப்பெறும். காவிரிப்பூம் பட்டினம், காவிரியாறு கடலொடு கலக்குமிடத்தில், அமைந்திருப்பதால், கடல் வாணிபம் சிறந்து விளங்கப் பெருந்துணையாம் என்று கொண்ட திருமாவளவன் காலத்தேதான் இது சோழர் தலைநகராக ஆக்கப்பெற்றது. "ககந்தன்" என்ற மன்னன் இருந்து ஆண்டதால் இந்நகர் "காகந்தி" என்றும் அழைக்கப்பெறும்.[3] இந்நகர்க்குச் "சம்பாபதி" என்ற பெயரும் உண்டு. "கமாரம்" (Kamâram) எனப் பெரிப்புளுஸ் அவர்களாலும், "கபேரிஸ்" (Kaberis) எனத் தாலமி அவர்களாலும் அழைக்கப்பெற்றது இந்நகரே என்பர்.[4] இது புறநகர், அகநகர் என இருகூறாக

1. சிலப்பதிகாரம் : பதிகம்: 12.
2. ,, மங்கலம்: 15-16.
3. மணிமேகலை : 22 : 37.
4. L. உலகநாத பிள்ளை : "கரிகாலன் :" பக். 50.

விளங்கும். அவற்றுள் புறநகர் மருவூர்ப்பாக்கம் எனவும் அகநகர் பட்டினப்பாக்கம் எனவும் வழங்கப்பெறும். இவ்விரு பகுதிகளுக்கு மிடையில் மரங்கள் செறிந்த சோலையில், அம்மரங்களின் கால்களே தூண்களாகக்கொண்டு கட்டப்பெற்ற கடைகளை உடைய நாளங்காடி விளங்கும். ஆங்குப் பொருளைக் கொடுப்போர் ஓதையும், அவற்றைக் கொள்வோர் ஓதையும் எப்போதும் ஓயாது நிலைபெற்று ஒலிக்கும்.

இவற்றுள் மருவூர்ப்பாக்கம் கடலைச் சாரவுள்ளது. ஆங்கே கடலிற்செல்லும் கலங்களுக்கு இரவில் வழிகாட்டியாக விளங்கும் கலங்கரை விளக்கமும் (Light House), கலங்களில் வந்த பொருள்களுக்கும், கடலிற் செல்ல இருக்கும் பொருள்களுக்கும் உரிய தீர்வையை வரையறுத்துக் கடமை கொள்ளும் ஆயத்துறைகளும் (Custom House), சுங்கம் இறுத்த பின்னர் சோழமன்னரின் இலச்சினையாகிய புலி பொறிக்கப்பெற்ற பண்டப் பொதிகளைச் சேர்த்துவைக்கும் பண்டசாலைகளும் (Ware House), கிடங்குகளும் (Godowns), உயர்ந்த மேடைகளும் (Docks and Piers) அமைந்துள்ளன. இவற்றையடுத்து, பொருள் ஈட்டும் முயற்சி மேற்கொண்டு கடல் கடந்துவந்த யவனர் முதலாய பிற நாட்டு மக்கள் தம்முள் பகை சிறிதும் இன்றிக் கலந்து உறவாடி வாழும் இடங்கள் அமைந்துள்ளன. வண்ணம், சுண்ணம் முதலாய வாசனைப் பொருள்களைச் செய்து விற்போரும், பட்டாலும், மயிராலும், பருத்திநூலாலும் ஆடை முதலாயின நெய்யும் சாலியரும், முதிரை முதலாய கூலங்களைக் குவித்து விற்கும் கூலவணிகரும், பிட்டு, அப்பம், கள், மீன், கடல் உப்பு, வெற்றிலை, இறைச்சி ஆக இவற்றை விற்போரும், கருங்கைக் கொல்லர், செம்பு செய்குநர்,

வெண்கலக் கன்னார், பொன்செய் கொல்லர், மண்ணால் பாவை முதலாயின செய்வோர், ஓவியக்காரர், தையல் தொழிலாளர் முதலாய தொழிலாளரும், பாணர், குழலர் முதலாய இசைகாரரும், பிறர் ஏவலை ஏற்றுச் செய்யும் பணி செய்வோரும் தனித்தனியே வாழும் தெருவுகள் பல நிறைந்து விளங்கும். பொதுவாக நோக்கின் வாணிபம் முதலாயின செய்து பொருள் ஈட்டும் மத்திய வகுப்பு மக்களும் (Middle class peoples) உடல் வருத்தித் தொழிலாற்றி வயிறு வளர்க்கும் தாழ்ந்த வகுப்பு மக்களும் (Backward and the Depressed) வாழும் இடம் மருவூர்ப்பாக்கம் என்பது விளங்கும்.

கடற்கரையைச் சார்ந்த, அணுகுதற்கரிய காவல் அமைந்த பெரிய பண்டசாலையின் கண், நிலத்திலே இருந்து கலங்களில் ஏற்றுவதற்காகக் கொணர்ந்த உள் நாட்டுப் பொருள்களும், கலத்திலிருந்து நிலத்தில் இறக்கப் பட்ட வெளிநாட்டுப் பொருள்களும், வரம்பறியாமல் வந்து குவிந்துள்ளன. அவ்வாறு வந்து குவிந்துள்ள அப் பொருள்கள், அரசன்பொருளைப் பிறர்கொள்ளாமல் காக்கும் புகழ் நிறைந்த சுங்கம் கொள்வோர் ஒருபொழுதும் மடிந்திராது, நாடோறும் இளைப்பின்றி, உரிய சுங்கத்தில் குறைவு நேராமல் கொள்வதற்காக, மதிப்பிடப் பெற்று, அரச இலாஞ்சனையாகிய புலி பொறிக்கப்பெற்று மலைபோல அடுக்கப் பெற்றுள்ளன.

கடல் வழியாகக் காற்றின் இயக்கத்தால் வந்த கலங்கள் கொணர்ந்த, விரைந்த செலவினை உடைய குதிரைகளும், கரியமிளகுப் பொதிகளும், மேருமலையில் தோன்றிய மணியும், பொன்னும், பொதிய மலையில் தோன்றிய அகிலும் சந்தனமும், தென்கடலில் பிறந்த முத்தும், கீழ்க்கடலில்

பிறந்த பவளமும், கங்கை பாயும் வடநாட்டிலிருந்து வந்த யானை முதலாயினவும், காவிரியாற்றால் விளைந்த பல பொருள்களும், கடாரமாகிய பர்மாவிலிருந்து வந்த பொருள்களும், ஆகிய அரிய பெரிய பொருள்கள் எல்லாம் அளவு தெரியாமல் நிறைந்து வளம் மிகுந்த கடைவீதி களில், அப்பொருள்களை விற்போர், பழியஞ்சும் பண்பினர் ஆகவே, பொருள்களை வாங்குவோர்பால் அப்பொருள் களின் தன்மை, விலை, தமக்கு வரும் ஆக்கம் இவற்றை உண்மையாகக் கூறியும், பொருள்களைக் கொள்ளும்போது தாம் கொடுக்கும் பொருளுக்கு உரிய விலைக்கு மேலே கொள்ளாமலும், பொருளைப் பிறர்க்கு விற்கும்போது அப்பொருளிற்கு விலையாகப் பெற்றதற்குக் குறைவாகக் கொடுக்காமலும், தம் பொருளையும், பிறர் பொருளையும் ஒன்றாகவே மதித்து விற்பர்.

மகதச் சிற்பரும், மராட்டக் கொல்லரும், யவனத் தச்சரும் கூடிக் கண்ணைக் கவரும் வனப்புடன் அமைத்த அரசன் கோயில் பட்டினப்பாக்கத்தே விளங்கும். அவ் வரண்மனையைச்சூழ கடும்பரி கடவுநர், களிற்றின்பாகர், நெடுந்தேர் ஊருநர், கடுங்கண் மறவர் முதலாய நால்வகைப் படையாளர் வாழும் தெருவுகள் அமைந்துள்ளன. தேரோடும் தெருவும், பெரிய கடைத்தெருவும் இருப்பது இங்கேதான். மறையோர், வீழ்குடிஉழவர், மருத்துவர், காலக்கணிதர் முதலியோர் தனித்தனியே வாழும் தெருவு களும் உண்டு. முத்துக்கோப்போர், வளையல் அறுப் போர், நாழிகைக் கணக்கர், காவற்கணிகையர், ஆடல் கூத்தியர், நகைவேழம்பர் முதலியோர் வாழும் இடங்களும் இங்கேதான். ஆக, பட்டினப்பாக்கம் அரசனும், அவன் குழுவும், அரசனால் மதிக்கத்தக்க பெரும்பொருள் உடை யாரும், அவர்க்கு இன்பம் ஊட்ட ஏற்றன செய்வோரும்

ஆகிய உயர் வகுப்பு மக்கள் (High class peoples) வாழும் இடம் எனல் பொருந்தும்.

அந்நகருள் வேனிற்காலத்தே அரசன் இருந்து பயன் துய்க்கும் இலவந்திகைச் சோலையும், கரிகாற் பெருவளத்தான் வடநாடு சென்றபோது கொணர்ந்த வச்சிரநாட்டுக் கோன் இறையாகத் தந்த கொற்றப் பந்தலும், மகதநாட்டு மன்னன் கொடுத்த பட்டிமண்டபமும், அவந்தி வேந்தன் உவந்துகொடுத்த தோரணவாயிலும், இது இன்னபொருள்; இன்னாருடையது; இன்ன நிறையது; என்று எழுதப் பெற்றுக் குவித்துவைக்கப்பட்டுள்ள பொதிமூட்டைகளைக் காவல் கடிந்து களவாடுவோர் உண்டானால், அக் கள்வர் தலைமீதே அப்பொருளை வைத்து ஊரைச் சுற்றிவந்து அப் பொருளை மீட்டுக்கொள்வதாகிய தண்டம் அளிக்கும் தன்மைவாய்ந்த வெள்ளிடை மன்றமும்; கூனும், குறளும், ஊமையும், செவிடும், தொழுநோயாளரும், நீராடி வலம் வர, அவர்தம் நோயைப்போக்கும் இலஞ்சி மன்றமும்; மருந்துண்டு பித்தேறினாரும், நஞ்சுண்டு துயர் உற்றோரும், பாம்புகோட்பட்டாரும், சூர்கோட்பட்டாரும் சூழவருதலானே அவர்தம் துயர்போக்குதற்குக் காரணமான ஒளியைக் கக்கும் கல்நின்ற மன்றமும்; தவமறைந்து அவமே செய்வார், தீயொழுக்கமுடையோர், அறைபோகு அமைச்சர், பொய்க்கரியாளர், புறங்கூற்றாளர் இவரைத் தன் கைக்கொள் பாசத்துக் கைப்படுத்துப் புடைத்துண்ணும் பூதம் நிற்கும் மன்றமும்; அரசுகோடினும், அறங்கூர் அவையத்தார் முறை பிறழினும் அதை நாவால் கூறாதே, கண்ணீர் உகுத்து அழுது அறிவிக்கும் பாவை மன்றமும் சிறப்புடைய இடங்களாகும்.

நகரில் நடைபெறும் பல்வேறு விழாக்கள் குறித்து ஏற்றப்பெற்ற கொடிகளும், தம்மோடு வாதிட விரும்பு

வோர் வரலாம் எனக் கற்றுத்துறைபோகிய நல்லாசிரியர்கள் எடுத்த கொடியும், இன்ன இடத்தே இன்ன பொருள் விற்கப்படும் என விளக்கம் அளிக்க எடுத்த கொடிகளும், புகார்த் துறைமுகத்தே காற்றின் அசைவிற்கேற்பக் கம்பத்தில் கட்டப்பெற்ற யானைகள் அசைவதேபோன்று அசைந்துகொண்டே இருக்கும் கலங்களின் கூம்புகளில் கட்டப்பெற்ற கொடிகளும் அந்நகர் முற்றும் நிறைந்து நிழல் செய்யும். கீழே வீழ்ந்துகிடக்கும் வெண்சிறு கடுகும் விளக்கமாகத் தெரியும் அளவு பேரொளிவீசும் விளக்குகள் பல அந்நகரெங்கும் நின்று சுடர்விட்டுக் கொண்டே இருக்கும்.[1]

ஆண்டுதோறும், சித்திரைத்திங்கள் முழுநிலாக் காலந் தொடங்கி, ஒரு திங்கள் வரை இந்திர விழா நடைபெறும் என்று சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கூறும். அவ் விழாவின் காரணத்தையும், நடைமுறைச் சிறப்பையும் ஆண்டுக்[2] கண்டுகொள்க. ஈண்டு விரிப்பின் பெருகும்.

உறையூர் :—"வென்றெறி முரசின் விறற்போர்ச் சோழர் இன்கடுங்கள்ளின் உறந்தை"[3] என்ற உறையூரில் பிறந்த புலவர் முதுகூத்தனார் பாட்டினால் உறந்தை என வழங்கும் உறையூர் சோழர்க்கு உரிமை உடைத்தென்பது தெளிவாகும். இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் காலத்தில் சோழர்க்குத் தலைநகராக விளங்கியது உறந்தை ஒன்றே; அவர் மூவேந்தர் தலைநகரைக் குறிப்பிடும்பொழுது "வஞ்சியும் வறிதே,"[4] "மதுரையும் வறிதே,"[5] "உறந்தையும் வறிதே"[6] எனச் சோழர் தலைநகராக உறந்தை

1. சிலப்பதிகாரம் : 6 : 134-147.
2. சிலப்பதிகாரம்: இந்திரவிழா; மணிமேகலை: விழாவறைகாதை.
3. அகநானூறு : 137.
4, 5, 6. சிறுபாணாற்றுப்படை : 50, 67, 83.

ஒன்றையே குறிப்பிடுதல் காண்க. ஆனால் சிலப்பதிகாரம் பாடிய ஆசிரியர் இளங்கோவடிகள் காலத்தே சோழர் தலைநகர் இரண்டாக விளங்கிற்று என்பது "மாடமதுரையும் (பாண்டியர்), பீடார் உறந்தையும் (சோழர்), கலிகெழு வஞ்சியும் (சேரர்), ஒலிபுனல் புகாரும் (சோழர்)"[1] எனச் சோழர் தலைநகர் இரண்டு குறிப்பிடப்பட்டமையால் உணரலாம். கரிகாலன் தன் காலத்தே உறந்தையைப் புதுப்பித்துப் பகைவர் கிட்டுதற்கரிய பெரிய அரண் அமைந்த நகராக ஆக்கினான் என்பதை,

"பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ,
வாயிலொடு புழை அமைத்து
ஞாயில் தொறும் புதை நிறீஇ"[2]

என்ற பட்டினப்பாலை அடிகளான் அறியலாம்.

உறந்தைக்குக் கோழி என்ற வேறு பெயர் உண்டு என்பதையும், அப்பெயர்க் காரணத்தையும், "முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய புறஞ்சிறை வாரணம்"[3] என்ற சிலப்பதிகாரப் பகுதியும், அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய, "முற்காலத்து ஒரு கோழி யானையைப் போர் தொலைத்தலான், அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி என்பது பெயராயிற்று," என்ற விளக்க உரையும் விளக்குவது காண்க. உறந்தையின்கண் ஓர் அறங்கூர் அவை உண்டென்றும் அதில் அறம் நின்று நிலைபெறும் என்றும் மாரோக்கத்து நப்பசலையாரும்,[4] காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனாரும்[5] கூறுவர். உறந்தையினும்,

1. சிலப்பதிகாரம் 8 : 3 - 4. 2. பட்டினப்பாலை: 285-88.
3. சிலப்பதிகாரம் 10: 247-48.
4. "மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம் நின்று நிலையிற்று" —புறநானூறு : 39.
5. "அறம் துஞ்சு உறந்தை" —புறநானூறு : 58.

புகாரில் நடைபெறுவதைப் போன்றதொரு விழா, காவிரி யாற்றில் பங்குனித் திங்களில் நடைபெறும் என்று, அவ்வூரில் பிறந்த முதுகூத்தனாரே அறிவிக்கின்றார்.[1] இவ்விழா, பங்குனித்திங்களில் உத்தரமும், நிறைமதியும் கூடிய நன்னாளில் நடைபெறும் என்பதும், இஃது அக்காலப் பெருவிழாக்களில் ஒன்று என்பதும், "களவினுட் டவிர்ச்சி"[2] என்னும் இறையனார் அகப்பொருட் சூத்திர வுரையில், "இனி ஊர் துஞ்சாமை என்பது, ஊர்கொண்ட பெருவிழாநாளாய்க் கண்பாடில்லையா மாகவும் இடையீடாம் என்பது; அவை, மதுரை ஆவணி யவிட்டமே, உறையூர்ப் பங்குனி யுத்தரமே, கருவூர் உள்ளிவிழாவே என இவையும் இவைபோல்வன பிறவும் எல்லாம் அப்பெற்றியானபொழுது இடையீடாம் என்பது," என வருதலான் அறியப்படும். அவ்வுறையூர் நொச்சிவேலியால் சூழப்பெற்றது என்றும், அது தித்தன் என்பானுக்கு உரிமை உடையது என்றும்,[3] அவனுடைய நாளோலக்கம் மிகச் சிறப்புடையது என்றும், அந் நாளோலக்கச் சிறப்பைக் கேட்டே அவனோடு போரிடவந்த கட்டி என்பவன், அஞ்சிப் பொராதே ஓடிவிட்டான் என்றும் பரணர் கூறுவர்.[4]

---

1. "உறந்தை யாங்கண்
வருபுனல் நெறிதரு மிகுகரைப் பேரியாற்று
உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்
பங்குனி முயக்கம்" —அகநானூறு : 137.

2. இறையனார் அகப்பொருள்: களவியல்: சூத். 16.

3. "நொச்சி வேலி தித்தன் உறந்தை" —அகநானூறு : 122.

4. "தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅ தோடிய ஆர்ப்பு." —அகநானூறு : 226.

இத்தகைய சிறப்புக்களை உடைய உறந்தை, புலவர் பலரைத் தோற்றுவித்ததனாலும் பெரும்புகழ்பெற்று விளங்குவதாயிற்று. அவ்வூரில் பிறந்தோராக, இளம் பொன் வாணிகனார், ஏணிச்சேரி முடமோசியார், மருத்துவன் தாமோதரனார், முதுகண்ணன் சாத்தனார், முதுகூத்தனார், கதுவாய்ச் சாத்தனார் என்ற புலவர்கள் இலக்கியங்களால் அறியப்படுகிறார்கள்.

# 3. பெற்றேரும் உற்றேரும்

"வெல்வேல் உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்"[1] என்ற தொடரானும், "மன்னர் பாங்கிற் பின்னராகுப" என்ற தொல்காப்பியம் அகத்திணையியல் சூத்திர உரையில்[2] "உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி, அழுந்தூர் வேளிடை மகட்கோடலும், அவன் மகன், கரிகாற்பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட் கோடலும்" என வரும் நச்சிஞர்க்கினியர் வாக்கானும், கரிகாலன் தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்பவனே ஆவன் என்பது தெளிவாம்.

ஊன்பொதி பசுங்குடையார் பாராட்டியோராகச் சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்பவனும்,[3] செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்பவனும்[4] ஆக இருவர் உளர். இரண்டாவதாகக் குறிக்கப்பெற்ற இளஞ்சேட் சென்னிக்கு அடைமொழியாகக் கூறப்பட்ட "செருப்பாழி எறிந்த" என்பதற்குப் "போர்க்களமாகிய பாழி என்ற ஊரை அழித்த" என்றே பொருள் கொள்ளுதல் வேண்டும். பாழி, போர் பல நிகழ்ந்த இடமாக இருப்பதால்,[5] செருப்பாழி என்பதற்குப் போர்க்களமாகிய பாழி என்பதே பொருள். பாழி

1. பொருநராற்றுப்படை: 130.

2. தொல்காப்பியம்: அகத்திணையியல்: சூத். 30.

3. புறநானூறு: 10, 203. 4. புறநானூறு: 370, 378.

5. இளஞ்சேட் சென்னி என்பவன் பாழியை எறிந்தான் என்ற வரலாறு புறநானூறு 370, 378 செய்யுட்களானும், இளம்பெரும் சென்னி என்பவன் பாழியை நூறிஞன் என்ற வரலாறு அகம் 375 செய்யுளானும் அறியப்படுவதோடு, பாழிப்பறந்தலையில், மிஞிலி என்பவனேடு பொருது உயிர்துறந்த ஆஅய் எயினன் வரலாறும் பாணரால் அறிவிக்கப்படுகிறது. (அகநானூறு : 208, 396.)

என்பது சேர நாட்டகத்ததோர் ஊராக விளங்குவதா லும், சேரமான் பாமுளூர் எறிந்த இளஞ்சேட் சென்னி யும், சேரநாட்டைச் சேர்ந்த பாமுளூர் என்ற ஊரை வென்றதாகத் தெரிவதாலும், இருவர்க்கும் இளஞ்சேட் சென்னி என்ற பெயர் ஒற்றுமை உண்மையானும், இரு வரையும் பாராட்டிய புலவர் ஒருவராகவே இருப்பதாலும், சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியும், செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி யும் வேறுவேறு அல்லர்; ஒருவரே என்று கொள்ளுதல் பொருந்தும்.

இனி, வம்ப வடுகரை ஓட்டிப் பாழியை அழித்த இளம்பெருஞ் சென்னி என்பவன் ஒருவன் வரலாறு அக நானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.[1] செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியும் வடுகரை வென்றான் எனப் புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளான்.[2] பாழி அழித்தலும், வடுகரை வேறலும் இருவருக்கும் ஏற்றிக் கூறப்பட்டுள்ளமையாலும், இளஞ்சேட் சென்னி, இளம் பெருஞ் சென்னி என்ற பெயர்கள் ஒற்றுமை கொண்டி ருப்பதாலும், அகத்தில் கூறப்பெற்ற இளம்பெரும் சென்னி செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியே ஆவன் என்பது துணிவாம்; ஆகவே, சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, செருப்

1. "எழாஅத் திணிதோள் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிக்கடன் ஆகலின் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானை" —அகநானூறு : 375.

2. "தென் பரதவர் மிடல் சாய
வடவடுகர் வாளோட்டிய" —புறநானூறு : 378.

பாழி எறிந்த இளம்சேட் சென்னி, இளம்பெரும் சென்னி என மூவராகக் கூறப்பட்டோன் ஒருவனே என்பது தெளிவாம்.

இனி, சேரமான் பாமுளூர் எறிந்த இளஞ்சேட் சென்னியைப் பாடும்பொழுது, "இயல்தேர் அண்ணல்"[1] என அவன் தேர் உடைமை பாராட்டப் பெற்றுள்ளமையாலும், இளஞ்சேட் சென்னி என்ற பெயர் ஒற்றுமையாலும், எவ்வித அடைமொழியும் இன்றி "இளம்பெரும் சென்னி" என்றும் அழைக்கப்பட்டுள்ளமையாலும், உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியும் போர் பல செய்தவன் என்று தெரிவதாலும், அவன் மகன் கரிகாலன் பகைவர்களாகப் பாழியில் பெரும்பொருள் சேர்த்துவைத்த வேளிர்களும்,[2] அவர்கள் தலைவன் இருங்கோ வேளும் கூறப்பட்டுள்ளமையாலும், அவர்கள் கரிகாலன்மீது அவன் இளமைக் காலத்திலேயே போர்தொடுத்தது, அவன் தந்தை தங்கள் பாழியை அழித்தமைக்குப் பழி வாங்கும் எண்ணத்தால் இருக்கலாம் ஆதலாலும்[3] பாழிக்

1. புறநானூறு: 203.

2. "நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்" —அகநானூறு : 258.

"பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
அருங்கல வெறுக்கை" —அகநானூறு : 372.

3. பாழியை நூறி வம்பவடுகர் பைந்தலை சவட்டிஞன் இளம்பெருஞ்சென்னி என்று கூறியதோடு அமையாது, "குடிக்கடன் ஆகலின் குறைவினை முடிமார்" என்ற தொடரால், அப்பாழிப்போர், சோழர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், அஃது அவன் காலம்வரை சோழர்க்குக் குறைவினையாகவே இருந்து வந்தது என்பதும் விளக்கவைப்பர் இடையன் சேந்தங்

குரியோன் எனப்பட்ட நன்னன்,[1] களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலோடு வாகைப்பறந்தலையில் பொருதுகளத் தொழிந்தான்;[2] இப்போரில் பெற்ற வெற்றியின் பயனாய்; நார்முடிச் சேரல், இழந்ததன் பூழிநாட்டைப் பெற்றான், [3]என்ற செய்திகளால், பாழியோடு வாகைப் பறந்தலை தொடர்புடையது என்பது பெறப்படும். கரிகாலன் தன்னை வந்தெதிர்த்த ஒன்பது மன்னரை வாகைப்பறந்

கொற்றன். (அகம். 375) கரிகாலனோடு போரிடவந்த ஒன்பது மன்னரும், வாகைப்பறந்தலையில் அவனிடம் தோற்றோடினர் என்பர் பரணர். (அகம். 125) களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், பாழிக்குரிய நன்னனோடு, வாகைப்பறந்தலையில் பொருதுவென்று இழந்த தன் நாட்டைக் கைப்பற்றினான் என்பர் கல்லாடனார். (அகம். 199) இக்குறிப்புக்களால், நன்னன்பாழியைக் கைப்பற்ற, சேரனும், சோழரும் வடுகரும் பெரிது முயன்றனர் என்பதும், அம் முயற்சியில், சோழர் சார்பில் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியும், கரிகாலனும் பெரும் பங்கு கொண்டிருந்தனர் என்பதும் ஈண்டு நினைவு கூரற்பாலது,

1. "சூழியானைச் சுடர்ப்பூண் நன்னன் பாழி"
"கறையடி யானை நன்னன் பாழி"—அகநானூறு : 15,142.

2. "குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருது களத்தொழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன" —அகநானூறு : 199.

3. "பூழி நாட்டைப் படை யெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவி னாற்றலை யறுத்தவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து"
—பதிற்றுப்பத்து : நாலாம்பத்துப் பதிகம்.

தலையில் பொருது வெற்றிகொண்டான்[1] என்று கூறப்படுவதால், கரிகாலனும் அப்பாழியோடு யாதேனும் தொடர்புடையனுதல் வேண்டும் என்று கருத இடமுண்டு ஆதலாலும், உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, சேரமான் பாமுளூர் எறிந்த இளஞ்சேட் சென்னி, செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி, இளம்பெருஞ்சென்னி என்ற நால்வரும் வேறு வேறு அல்லர்; ஒருவரே என்று கொள்ளுதல் நேரிதாம். திருவாளர். K. V. சுப்பிரமண்ய அய்யர் அவர்களும்,'' கரிகாலன்[2] தந்தை நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி ஆகும்'' என்று கூறுவது இக் கொள்கையை மேலும் அரண் செய்வதாகும்.

உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, தேர், யானை, குதிரை, காலாள் என்ற நால்வகைப் படையுடன் அழகிய தேர்மீது சென்று தன் பகைவர் நாடுகள் எல்லாம் தாயில் தூவாக்குழவி போல ஓயாது கூவுமாறு அந்நாடுகளை அழிப்பன். இத்தகைய பெரு வீரனுய் விளங்கிய அவன் தன்பால் வரும் இரவலரைப் பேணிப் புரத்தலினும் சிறந்த விருப்பம் உடையன் ஆவன்.

"உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கோடலும்''[3] என்ற நச்சினார்க்கினியர் கூற்றும், கரிகாலன் வெண்ணிப் பறந்தலையில் பெற்ற வெற்றி குறித்து அழுந்தூரில் விழாக் கொண்டாடப்

1. "கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுஉப்பற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
பீடில் மன்னர்'' —அகநானூறு :125

2. Indian Antiuary Vol 41. P 14. V 7.

3. தொல் பொருள் அகம். சூ. 30. உரை.

பெற்றது எனப் பரணர் கூறும்வரலாறும்[1] கரிகாலன் தாய் அழுந்தூர் வேள்பெற்ற மகளே என்பதை உறுதி செய்கின்றன. அவ்வம்மையார் கணவன் இறந்த பின்னரும் உயிர்வாழ்ந்து கரிகாலனைப் பெற்று பகைவர் கைப்பட்டு அழிந்துபோகாமல் அவனைக் காத்து அவன் பீடும், பெருமையும் பெற்றுவிளங்க வகை செய்தவராவர்.

கரிகாலன் மனைவியார் நாங்கூர்[2] வேள் பெற்ற மகள் ஆவர். இச்செய்தி, "கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட்கோடலும்"[3] என்று நச்சினார்க்கினியர் கூறும் செய்தியானன்றிப் பிறிதொன்றுந் துணியப் பெறவில்லை. இனிக் கரிகாலன் இறந்த பின்னர் அவன் பிரிவாற்றாது வருந்தும் கருங்குழலாதனார் என்ற புலவர்[4] "தகளறு மகளிரொடு வேத வேள்வித் தொழில் முடித்தான்" எனவும், "மகளிரும் இழைகளைந்தனர்" எனவும் மகளிர் எனப் பன்மை வாய்பாட்டான் கூறுவதால், நாங்கூர் வேள்மகளே அன்றி வேறு பல மகளிரும், கரிகாலனுக்கு மனைவியராய் இருந்தனர் என்று எண்ணவேண்டியுளது. பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரும்

---

1. "காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத் தொழியப்
பதினொரு வேளிரோடு வேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே"

—அகநானூறு : 246.

2. வடாற்காடு மாவட்டம் செய்யாறு தாலுக்காவில் வேளாளர் வாழும் வடநாங்கூர் தென்னாங்கூர் என்ற ஊர்கள் இருக்கின்றன.

3. தொல். பொருள், அகம் சூ. 30 உரை.

4. புறநானூறு : 224.

கரிகாலன் மனைவியார் பலராவர் என்ற கருத்துடைய வரே[1]

"பொன்தொடிப் புதல்வர் ஓடி ஆடவும்"[2] என்ற குறிப்பால், கரிகாலனுக்கு மக்கள் பலர் இருந்தனர் என்பதுமட்டும் பெறப்படும். "மணக்கிள்ளி, வேற்பஃற டக்கைப் பெருவிறற்கிள்ளி இருவரையும் கரிகாலன் மக்களாகக் கருதுதற்கு இடமுண்டு" என்றும் "உறையூர் நெடுங்கிள்ளியும், புகார்க்கிள்ளிவளவன், நலங்கிள்ளி, மாவளத்தான்களும் கரிகாலன் மகார்வயிற்றுப் பேரர்கள் ஆதல்வேண்டும்" என்றும் கூறுவர், "சேரன் செங்குட்டு வன்" நூலாசிரியர் திருவாளர் மு. இராகவையங்காரவர்கள்.[3] அவர் அவ்வாறு கொள்வதற்கு ஆதாரமாகக் காட்டும் பகுதி, "செங்குட்டுவனுடைய தாயுடன் பிறந்த அம்மானும், சோழன் மணக்கிள்ளியின் மகனுமாகிய நெடுங்கிள்ளி, உறையூரிலிருந்து ஆண்டுவந்தான். இவ்வுறையூர்ச் சோழர்க்கும், புகார்ச் சோழர்க்கும் பெரும் பகை உண்டு. புகார்ச் சோழர் கிள்ளி வளவனும் அவன் தம்பி நலங்கிள்ளியுமாவர்; கரிகாலன் காலத்தில் ஓராட்சிக்குட்பட்டதாக இருந்த சோணாடு, அவனுக்குப்பின் இரு பகுதிப்பட்டதென்றும், அதனில் உறையூர் மணக்கிள்ளிக்கும், புகார் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்கும் தலைநகரங்களாய் இருந்தன என்றும் தெரியவருவதால் அக்கிள்ளிகள் இருவரையும் கரிகாலன் மக்களாகக் கருது தற்கு இடமுண்டு. இவ்வாறாயின், மேற்கூறிய செங்குட்டுவனுக்கு மாமனான உறையூர் நெடுங்கிள்ளியும், புகார்க் கிள்ளிவளவன், நலங்கிள்ளிகளும் கரிகாலன் மகார் வயிற்றுப் பேரர்கள் ஆதல்வேண்டும்"[4] என்பதுவே ஆகும்.

1, 2. பட்டினப்பாலை : 296, 295

3, 4. "சேரன் செங்குட்டுவன்" பக்கம் : 103

"சேரலாதற்குத் திகழ்ஒளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன்"[1] என்ற இளங்கோவடிகள் உரையால், செங்குட்டுவன் தாய் சோழன் மகள் என்பதுவும், "சேரலாதற்குத் திகழ்ஒளி ஞாயிற்று எழ்பரி நெடுந்தேர்ச் சோழன் தன் மகள் நற்சோணை ஈன்ற மக்கள்"[2] என்ற அடியார்க்கு நல்லார் உரையால் அவள் பெயர் நற்சோணை என்பதும், "சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்"[3] என்ற தொடரால் நற்சோணையைப் பெற்ற சோழன்பெயர் மணக்கிள்ளி என்பதுவும் பெறப்பட்டன. இத்தொடர் எல்லாம் சேர்ந்து செங்குட்டுவன் தாய், சோழன் மணக்கிள்ளி யீன்ற மகள் நற்சோணை என்று மட்டும்தான் பொருள் கொள்ளப் பயன்படுமே ஒழிய, அம் மணக்கிள்ளி, கரி காலன் மகனே என்பதுவோ, அவன் (மணக்கிள்ளி) உறை யூரைத் தலைநகராகக்கொண்டிருந்தான் என்பதுவோ, அவ

1. சிலப்பதிகாரம் : 29 : உரைப்பாட்டு மடை

2. சிலப்பதிகாரம்: பதிகம்:—இது செய்யுளன்றி உரைநடை யாதலின், எழ்பரி நெடுந்தேர் ஞாயிற்றுச் சோழன் என மாற்றிக் கொள்ளாது, கிடந்தாங்குகொண்டு, ஞாயிற்றைப்போல எழ்பரி பூண்ட நெடுந்தேர்ச்சோழன் என்று பொருள்கூறி, இத்தொடர் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியைக் குறிக்கும் என்று கொள்ளுதலும் கூடும்; பல்தேர், பல குதிரைகள் பூட்டியதேர் எனலு மாம் ஆகலின்.

3. பதிற்றுப் பத்து: 5-ம் பத்துப்பதிகம்:-இத்தொடர், "சோழன் மணக்கிள்ளி மகள் ஈன்ற மகன்" என்று இராமல், "சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்" எனத்தெளிவில்லாமல் இருக்கிறது. இதற்குக் கிடந்தாங்குப் பொருள் கொண்டால், மணக்கிள்ளி, செங் குட்டுவன் தாயை ஈன்ற சோழன் என்று பொருள்தாராது, செங் குட்டுவனை ஈன்றசோழன் மணக்கிள்ளி என, அவன் தந்தை எனப் பொருள்படுதல் காண்க.

னுடைய மகனே உறையூரை ஆண்ட நெடுங்கிள்ளி என்பதுவோ அவற்றான் தெளிவாகவில்லை. இவற்றை உறுதி செய்யும் பிற சான்றுகளையும் அவர் காட்டினாரல்லர். நிற்க.

உறையூர் நெடுங்கிள்ளியைப் பற்றி நாம் அறிவதெல்லாம், நலங்கிள்ளி முற்றிருக்க ஆவூரிலும், உறையூரிலும் உள்ளே அடைத்திருந்தான் என்பதுவும்,[1] நலங்கிள்ளியிடமிருந்து உறையூர்ப்புகுந்த இளந்தத்தன் என்ற புலவனை ஒற்றன் எனக் கொல்லப் புகுந்தான் என்பதுவும்,[2] "காரியாற்றுத் துஞ்சிய" என்ற அடைமொழி அவனுக்கு உண்மையால் அவன் காரியாற்றில் இறந்தான் என்பதுவும் ஆக இவையே. நெடுங்கிள்ளி, மணக்கிள்ளியின் மகன் என்பதையோ, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, அந்நெடுங்கிள்ளியின் மகன் என்பதையோ நாட்டவல்ல சான்று ஒன்றும் கிடைத்தின்று.

நெடுங்கிள்ளியைக் காரியாற்றில் கொன்றோன், கிள்ளிவளவன் தம்பி நலங்கிள்ளியே என்பதைக் காட்டும் சான்று ஒன்றும் கிடைக்கவில்லை. "இவ்விரு பிரிவினரான சோழர்க்கும் காரியாற்றங்கரையில் பெரும்போர் மூள, அதனில் செங்குட்டுவன் அம்மானாகிய நெடுங்கிள்ளி இறந்தான் என்பது "காரியாற்றுத்துஞ்சிய" என அவன் விசேடிக்கப்படுவதாலும், அப்போரில் கிள்ளிவளவன் தம்பியே வெற்றிபெற்றவன் என்பது, "ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால், காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை, வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி" எனச் சாத்தனார் மணிமேகலையில் கிள்ளிவளவனைச் சிறப்பித்துக்

1. புறநானூறு : 44, 45. 2. புறநானூறு : 47.

கூறுதலாலும் புலப்படுகின்றன" என்று கூறுவர் திருவாளர் மு. இராகவையங்காரவர்கள்.[1]

நெடுங்கிள்ளி அடைத்திருந்த உறையூரை நலங்கிள்ளி முற்றியிருந்தான் எனக் கூறப்படுதலாலும்,[2] கிள்ளிவளவனும் பகைவரை அழித்து உறையூரில் தங்கியுள்ளான் எனக் கூறப்படுதலாலும்[3] நலங்கிள்ளியும் கிள்ளிவளவனும் நெடுங்கிள்ளியோடு பகைமைகொண்டிருந்தனர் என்பது தெளியப்பட்டாலும், நெடுங்கிள்ளியைக் கொன்றோர் இவர்களே என்று துணிவதற்கில்லை. உறையூர் நெடுங்கிள்ளிக்குக் "காரியாற்றுத் துஞ்சிய" என்ற அடைமொழியிருப்பதால், அவன் காரியாற்றில் இறந்தான் என்பது மட்டும் தான் துணியப்படுமே ஒழிய, காரியாற்றில், நலங்கிள்ளி, கிள்ளிவளவனோடு நடத்திய போரில் உயிர்துறந்தான் என்று கொள்வதற்கில்லை. மணிமேகலை கூறும் காரியாற்றுப்போரில், நலங்கிள்ளி, கிள்ளிவளவன் பகைவராகச், சேரனும், பாண்டியனும்தான் குறிப்பிடப்பட்டுள்ளார்களே ஒழிய, நெடுங்கிள்ளி குறிப்பிடப்படவில்லை.[4]

---

1. "சேரன் செங்குட்டுவன்" : பக். 104.
2. புறநானூறு : 45.
3. " மள்ளர்
   அடுகளி றுயவும் கொடிகொள் பாசறைக்
   குருதிப் பரப்பிற் கோட்டுமா தொலைச்சிப்
   புலாக்களம் செய்த கலாஅத் தானையன்
   பிறங்குநிலை மாடத்து உறந்தை யோனே."
   —புறநானூறு : 69.
4. " சிலைக்கயல் நெடுங்கொடி செருவேல் தடக்கை
   ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்
   காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
   வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி "
   —மணிமேகலை : 19 : 124-27.

முன் காட்டிய பதிற்றுப் பத்துப் பதிகம், சிலப்பதிகாரம் முதலிய எடுத்துக்காட்டுக்களான், சோழன் மணக்கிள்ளி, செங்குட்டுவன் தாய் நற்சோணையைப் பெற்றவன் என்பதும், செங்குட்டுவன், தன் மைத்துனன் வளவன் கிள்ளி என்பவனேடு பொருந்தாது போரிட்டுவந்த ஒன்பது சோழ அரசர்களை அழித்து அவனை அரியணையில் உறுதியாக நிறுத்தினன் என்று சிலப்பதிகாரமும்,[1] பதிற்றுப் பத்தும்[2] கூறுவதால் வளவன் கிள்ளி என்ற சோழன் செங்குட்டுவன் மைத்துனன் என்பதும் பெறப்படுமே ஒழிய, மணக்கிள்ளி, கரிகாலன் மகன் என்பதோ, காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி மணக்கிள்ளியின் மகன் என்பதோ, வளவன் கிள்ளி, நெடுங்கிள்ளியின் மகன் என்பதோ பெறப்படாது. இவ்வளவு எடுத்துக்காட்டுக்களும், செங்குட்டுவனுடைய உறவு முறையை விளக்கத் துணைபுரிகின்றனவே ஒழிய, கரிகாலன் குடிவழிப் பட்டியை விளக்கச் சிறிதும் துணைபுரியவில்லை.

"இவ்வாறு, செங்குட்டுவனுல் உதவிபுரியப்பட்டவனே, பிற்காலத்தில் பெருவீரனுய், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி எனச் சிறப்பிக்கப்பெற்றவன் எனத் தெரி

1. "மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொருஅர் ஏவல் கேளார்
வளநா டழிக்கும் மாண்பின ராதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்து அவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்"
—சிலம்பு : 27 : 118-23.

2. "ஆராச் செருவின் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து"
—பதிற்று : 5-ம்பத்து பதிகம்.

கிறான்."[1] "இவ்விளஞ்சோழன் பெயர் பெருங்கிள்ளி என்பது, சிலப்பதிகாரத்து உரைபெறு கட்டுரையாற் புலப்படும்;" "இவனைப் பெருநற்கிள்ளி என்பர் அடியார்க்கு நல்லார்"[2] என்று மேலும் கூறுவர் திருவாளர் மு. இராகவையங்காரவர்கள்.

செங்குட்டுவனால் உதவி செய்யப்பெற்றவன் கிள்ளி வளவனே; செய்யுளாகவே அது "வளவன் கிள்ளி" என மாற்றிக் கூறப்பட்டுளது என்று நினைக்கும் அளவிலேயே சிலப்பதிகாரத் தொடர் அமைந்திருப்பதாலும், இவனே இராசசூயம் வேட்டவன் என்பதை நாட்டுதற்குரிய சான்று ஒன்றும் காட்டப்பெறவில்லை ஆதலாலும், உரை பெறு கட்டுரையும், அடியார்க்கு நல்லாரும் குறிப்பிடும் பெருங்கிள்ளி,[3] பெருநற்கிள்ளி[4] என்பவனைப் பத்தினிப் படிவம் சமைத்து வழிபட்டவன் இவன் என்று கொள்வதற்குத்தான் அப்பகுதிகள் (சிலப்பதிகாரப் பகுதிகள்) துணைபுரியுமே தவிர, அவனைச் செங்குட்டுவன் மைத்துனன் என்று கொள்வதற்குத் துணைசெய்யா; ஆதலாலும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் நண்பர்களுள் ஒருவன் என்று ஔவையாரால் கூறப்பெற்ற[5] கானப்பேர்

---

1, 2. 'சேரன் செங்குட்டுவன்' பக்கம் 105, 34.

3. "அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தருமிவளோர் பத்தினிக் கடவுளாகுமென்று நங்கைக்குப் பத்தினிக்கோட்டமும் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே."

4. "அதனைக்கேட்டுச் சோழநாட்டு உறையூரிடத்தே பெருநற்கிள்ளி யரசனாகிய வளவன் இவள் பத்தினிக் கடவுளாதலின், எத்திறத்தானும் நமக்கு அரந்தையைக்கெடுத்து வரந்தருமெனக் கருதி நங்கைக்கு அங்ஙனம் கோட்டமுமமைத்து நித்தல்விழவும் நடத்தினானென்க" சிலம்பு : உரைபெறு கட்டுரையும் உரையும்.

5. புறநானூறு : 367.

எயில் கடந்த உக்கிரப்பெருவழுதியை, இவன் (இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி) தலைமுறைக்கு மூன்று தலைமுறை கழிந்தவனாக இவ்வாசிரியரே கொள்கின்றார் ஆதலாலும்,[1] இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்கு நண்பனாக விளங்கும் தேர்வணமலையன்,[2] குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுடைய பகைவனாகத் தோன்றுவதால்,[3] காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியைப்போலவே, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், கிள்ளிவளவன் பகைவன் ஆவன் என்று கொள்வதல்லது, அவ்விராசசூயம் வேட்டவன், நெடுங்கிள்ளியின் மகன் என்று கொள்வதற்கில்லை ஆதலாலும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, மாந்தரஞ்சேரல் இரும்பொறையோடு பொருதான் என்று கூறப்படுகிறான்;[4] இராசசூயம் வேட்டவன், செங்குட்டுவன் மைத்துனனாயின், அம்மாந்தரம் சேரல் இரும்பொறையும் செங்குட்டுவன் பகைவனாதல் வேண்டும்; செங்குட்டுவன் பகைவனாக அப்பெயர் உடையான் ஒருவன் உளனாக அறியப்படவில்லை ஆதலாலும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி செங்குட்டுவன் மைத்துனன் ஆகிய, சிலப்பதிகாரம் கூறும் வளவன் கிள்ளியின் வேறுபட்டவன் என்றே கொள்ளுதல் வேண்டும்.

நலங்கிள்ளியும், கிள்ளிவளவனும் நெடுங்கிள்ளியோடு போர் செய்வதில், தம்முள் ஒத்து இருந்தனர் என்று தெரிவதாலும்,[5] சேரனும், பாண்டியனும் இவ்விருவர் பகைவராவர் என்று கூறுவதில் புறநானூறு,[6] மணிமேகலைக்[7] குறிப்புக்கள் ஒத்துள்ளமையானும், "இளங்கோன் தன்னால் கொண்ட........மாவண்கிள்ளி"[8] என உடன் பிறப்பு

1. 'சேரன் செங்குட்டுவன்' பக்கம் 108. 2. புறம்: 125.
3. புறம்: 46. 4. புறம்: 125. 5. புறம்: 45, 69. 6. புறம்: 32, 39
7, 8. மணிமேகலை: 19: 124-27.

முறைமை எடுத்துக் கூறப்பட்டுள்ளமையானும், இருவரும் உடன் பிறந்தவரே என்பதையும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, குடக்கோநெடுஞ்சேரலாதனோடு போரிட்டு இருவரும் களத்தில் மடிந்தனர் எனக் கூறப்படுவதாலும்,[1] கிள்ளிவளவன் கருவூரை முற்றுகை செய்தான்[2] என்றும்,

"இமயஞ் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டும் நின்"[3]

என்றும் பாராட்டப்பெறுதலாலும், அவன் உடன்பிறந்தோனாகிய நலங்கிள்ளியும் வஞ்சிப்பகைவனே எனக் கோவூர்கிழார் கூறுவதாலும்,[4] கிள்ளிவளவனும், நலங்கிள்ளியும் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியின் மக்களே ஆவர் என்பதையும் ஒருவாறு ஒப்புக்கொண்டாலும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, கரிகாலன் மகன் என்பதைக் காட்டுதற்குரிய சான்று ஒன்றும் கிடைத்தில. ஆகவே, மணக்கிள்ளியும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும், கரிகாலன் மக்கள் என்றும், காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியும், கிள்ளிவளவனும், நலங்கிள்ளியும் கரிகாலன் மகார் வயிற்றுப் பேரர்கள் என்றும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, நெடுங்கிள்ளியின் மகன் என்றும் கூறுவது பொருந்துமாறு இல்லை என்க.

காவிரியாற்றில், கழார்ப் பெருந்துறையின்கண் விழாக் காலத்தில், கரிகால் சோழன் கண்டிருப்ப, ஆட்டனத்தி என்ற ஆடுதல் தொழிலில் தேர்ந்த பொருநன் ஒருவன், காலில் கழல் புரள, அரையில் கட்டிய கச்சையின்மேல்,

1. புறம்: 62, 63, 368.
2. புறம்: 36.
3. புறம்: 39.
4. புறநானூறு: 32.

பொன்னாற் செய்த பாண்டில் மணிகள் ஒலிப்ப அழகுபெற ஆடிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் வெள்ளத்தால் ஈர்க்கப்பட்டு, அதன் வழியே சென்று கடலிற் சேர்ந்தான். [1]வெள்ளிவீதியாராலும் போற்றப்படும் நல்லிசைப் புலமை வாய்ந்த, அவன் மனைவி ஆதிமந்தியார்[2] கணவன் புனலால் இழுக்கப்பட்டதை அறிந்து பலநாடுகளிலும், பல ஊர்களிலும் சென்று அவனைத் தேடிக் காணாளாய்க் கவன்று அலைந்து திரிந்தாள்.[3] அப்பொழுது மருதி என்பவள் கடல் வாய்ப்பட்டிருந்த ஆட்டனத்தியை அவளுக்குக் காட்டிக் கடலுள் புகுந்துவிட்டாள்[4] என்ற வரலாறு பரணர் பாக்களாலும், பிற பாக்களாலும் அறியப்படுகிறது. ஆதிமந்தியார், கரிகாலன் மகள் என்றும்,

---

1. "ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனல் நயந்தாடும் அத்தி அணி நயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு" —அகம். 376.

2. "காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதிமந்தி போலப் பேதுற்று" —அகம். 45.

3. "ஆட்ட னத்தியைக் காணீரோ வென
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
கடல் கொண்டன்று எனப் புனல் ஒளித்தன்று எனக்
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த
ஆதிமந்தி" —அகம். 236.

4. "ஆதிமந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி" —அகம். 222

ஆட்டனத்தி சேரவேந்தன் என்றும், இவள் அவன் மனைவி என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.[1]

"ஆதிமந்தி கரிகாலன் மகளாயின், தன்முன் விழவிலாடிய தன் மருகன் புனலால் இழுக்கப்பட்டுச் சென்றதைக் கண்டும், அவன் வாளா இருப்பானோ? தன் வினையாளரைக்கொண்டு அவனை மீட்டுப் பாதுகாக்கவோ, அல்லது அவனைக் கண்டுபிடிக்கவோ முயலாதிருப்பானோ? அவள் தன் கணவனாகிய சேர வேந்தனைத் தேடிப் பலநாடுகளிலும், பல ஊர்களிலும் தனியளாய் அலைந்து திரிய நேருமோ? இவைபோன்ற பல ஏதுக்களால், இவள் கரிகாற் சோழன் மகள் அல்லள் என்றும், ஆட்டனத்தி சேரவேந்தன் அல்லன் என்றும் துணியலாம்"[2] என்பர் திருவாளர் வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள்.

தன் கண்முன்னால் துன்பப்படுபவர் யாரேயாயினும், அவர் துயர்போக்கித் துணைபுரிவதே மனிதப் பண்புடைமையாகும். இம்மனிதப் பண்பில் மாறுபட்டவன் கரிகாலன் என்று கொள்வது கூடாது. தன் கண்முன் தனக்கு மகிழ்ச்சியூட்டுமாறு, ஆடல்புரிந்த ஆட்டனத்திக்குத் துன்பம் நேர்ந்தது என்றால், அவன் தன் உறவினன் அல்லன், ஆகவே, அவன் துயரைப்போக்க முயலாது வாளா இருந்தான் என்று நினைத்தலும் தவறு. ஆதிமந்தியார் கரிகாலன் மகளே அல்லள் என்று கொண்டா

---

1. "மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக் கோன்
தன்னைப்புனல் கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவில் தோளாயோ! என்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்"

—சிலம்பு: 21; 11-15.

2. பரணர்: பக்கம் 82-83.

னும், அவர் ஒரு சிறந்த புலவர்; புலவராலும் பாராட்டத்தக்க பெரும்புலமை வாய்ந்தவர். கரிகாலன், தன்னைப் பாடியபுலவன் ஒருவனுக்குப் பதினாறுநூறாயிரம் பொன் பரிசு அளிக்கும் பேர் உள்ளம் வாய்ந்தவன். அவ்வியல்புடையான், தன் கண்முன்னே, நல்லிசைப் புலமை மெல்லியலார் ஒருவர், தன் கணவனை இழந்து வருந்துவதைக் கண்டும், அவர் துயர் போக்க ஒன்றும் செய்யாது இருந்தான் என்று கொள்வது நேரிது ஆகாது. ஆட்டனத்தியை மீட்பதற்குரிய முயற்சி பல செய்தே இருப்பான்; என்றாலும், அவையெல்லாம் அவன் மீட்சிக்குத் துணைபுரியாமல்போயிருத்தல்வேண்டும். ஆகவே, கரிகாலன் கண்டிருந்தும் மீட்க முயலவில்லை; தன் மகள்கணவனாயின் முயன்றிருப்பன்; ஆகவே, ஆதிமந்தி அவன் மகள் அல்லள் என்று கூறுவது சரியான வாதமாகாது.

"சிலப்பதிகார அடிகளில் ஆதிமந்தி, ஆட்டனத்தி என்னும் பெயர்கள் குறிக்கப்படவில்லை. அன்றியும் இச் சிலப்பதிகாரம் கூறும்வரலாறும், பரணர் பாட்டுக்கள் கூறும்வரலாறும் முரண்படுகின்றன"[1] என்று வேறு தடைகளைத் தோற்றுவிக்கின்றார் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள். சிலப்பதிகாரம் கூறும் கற்புடை மகளிர் எழுவர் வரலாற்றில், ஆதிமந்தியார் பெயரே அன்றி, மற்றைய மகளிர் பெயரும் கூறப்படவில்லை ஆதலாலும், தான் எழுதப்புக்க நூல் இயல்பு, கால இயல்புகளுக்கு ஏற்ப, தான் கூறப்புக்க வரலாற்று நிகழ்ச்சிகளோடு சிறிது கற்பனையையும், கடவுட்டன்மையையும் ஏற்றிக் கூறுவதல்லது, நடவாத வரலாற்றையோ, நடந்த வரலாற்றினைத் திரித்தோ கூறார் இளங்கோவடிகள் ஆதலாலும், ஆதி

1. பரணர்: பக்கம் 83.

மந்தி கரிகாலன் மகள் அல்லள் என்று கூறுவதற்கு அவை சான்றாக அமையா என்க.

"பரணர் பாட்டுக்களில், ஆதிமந்தி கரிகாலன் மகள் என்றாவது, ஆட்டனத்தி வஞ்சிக்கோன் என்றாவது குறிக்கப்படவில்லை; ஆதிமந்தி கரிகால்வளவன் மகளாயின், வரலாறுகளைக் கூறும் நோக்கமிக்கவராய பரணர், இவ் வரலாற்றைக் கூறிய பாட்டுக்கள் நான்கனுள் எங்கேனும் இதனைக் கூறியிருப்பாரன்றே?"[1] என்று வினவுகிறார் திருவாளர் ரெட்டியாரவர்கள். பரணர், வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறுவதில் காட்டும் ஆர்வத்தைத் தம்மால் பாடப்படுவோர்தம், உறவு முறைகளைக் கூறுவதில் காட்டுவதில்லை என்பதற்குப் பல சான்றுகள் உள; உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியையும், கரிகாலனையும் பாடிய இவர், இவ்விருவரும் இன்ன முறையினர் என்பதைக் கூறினாரல்லர். சேரன்செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்தில் ஒரு பத்தால் பாடிய காலத்தும், அவன் தந்தைபெயரைக் குறித்தாரல்லர். எனவே, கரிகாலன் மகள் ஆதிமந்தி என்று பரணர் கூறவில்லை; ஆகவே அம்முறையை ஏற்றுக்கொள்ளுதல் கூடாது என்று மறுப்பது சரியன்று.

கரிகாலன் அம்மான் இரும்பிடர்த்தலையாராவர் என்பர்; இது குறித்து "அரச உரிமை" என்ற தலைப்பின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்க.

---

1. பரணர்: பக்கம் 83.

# 4. கரிகாலன் பெயர்க்காரணம்

கரிகாற் பெருவளத்தான் இளமைக்காலத்தே, அவனை அழித்தல் கருதிய அவன் பகைவர், அவனைச் சிறைக் கோட்டத்திட்டதோடு அமையாது, அதைச்சூழத் தீயை யும் வைத்தனர். கரிகாலன் சிறைக்கோட்ட மதிலைத் தாண்டி வெளிவர முயன்றகாலையில், அவன் கால்கள் கரிந்துபோயின. கால் கரிந்துபோயினமையின் அவன் கரிகால் என்றே அழைக்கப்பெற்றான்.[1] இதனால் அவன் பெயர் அறிய இயலாமல் போயிற்று. பழந்தமிழ் இலக் கியங்களுள், இவன் பெயர் "அன்" விகுதிபெறாமல் "கரி கால்" என்றே வழங்கி வந்துளது.[2] சிற்சில இடங்களில், அவன் தன் நாட்டை வளம்படுத்திய சிறப்பால் அவனுக்கு அளிக்கப்பெற்ற "வளவன்" என்ற பெயர் தொடர "கரி கால்வளவன்" என்றும் வந்துளது.[3] பின்னர், அவன் கால் கரிந்துபோன நிகழ்ச்சியினும், அவன் தன் நாட்டை

---

1. "முச்சக்கரமும் அளப்பதற்கு நீட்டியகால்
இச்சக்கரமே அளந்ததால்—செய்ச்செய்
அரிகான்மேற் றேன்தொடுக்கும் ஆய்புனனீர் நாடன்
கரிகாலன் கால்நெருப் புற்று." —பொருநராற்றுப்படை.

"சுடப்பட்டு உயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்—கடைக்கால்
செயிராற் செங்கோல் செலீஇயினான் இல்லை
உயிருடையார் எய்தா வினை" —பழமொழி: 105.

2. "காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்"
—அகம்: 246.

"பெருவளக் கரிகால்" —அகம்: 125.
"கலிகொள் சுற்றமொடு கரிகால் காண" —அகம்: 376.

3. "களியியல் யானைக் கரிகால் வளவ!" —புறம்: 66.
"கரிகால் வளவன்" —பொருநராற்றுப்படை: 148.

வளமாக்கிய செயலே பெரிதும் பாராட்டப்பெற்றமையால் அவன் பெயர் "கரிகால்" என்பது தொடராமலே "வளவன்" என்று தனித்தே வழங்கலாயிற்று.[1] நாட்டை வளமாக்கியதோடு, வாணிபத்தை வளர்த்து, தன் நாட்டுச் செல்வத்தையும் சிறக்கச் செய்தான் ஆகவே, அவன் "திருமாவளவன்" என்றும் அழைக்கப்பட்டான்.[2]

கரிகாலன் என்ற பெயர், கால் நெருப்புற்றமையால் உண்டான காரணப்பெயர் என்பதை அறிவிக்கும் சான்று பல இருப்பதையும் நோக்காது. அவன் பெயர், அன் விகுதிபெறாமல் "கரிகால்" என்றே பழந்தமிழ் இலக்கியங்களில் வழங்குவதையும் மதியாது, அவன் பெயரைக் "கரிகாலன்" என்றே கொண்டு, அதை வடமொழித்தொடர் புடையதாக ஆக்கி, கரி+காலன் என்று பிரித்து அவன் யானைகளுக்குக் காலன் என்றும், கரிகாலன் என்பதைக் "கலிகாலன்" என மாற்றி, அவன் கலிப்பகைக்குக் காலன் என்றும் பொருள்கொண்டு மயங்குவர் சிலர்.

சோழமன்னன் ஒருவனைக் குறிக்கும் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்ற ஒரு தொடர்மொழி புறநானூற்றில் காணப்படுகிறது. "இதனைத் திருமாவளவனைக் குறித்ததெனக்கொண்டனர் சுந்தரம்பிள்ளையவர்கள். அவ்வாறு அவர்கள் கொண்டதற்கு ஆதாரம்,

> "அரிமா சுமந்த வமளிமே லானைத்
> திருமா வளவனெனத் தேறேன்—திருமார்பின்
> மானமா லென்றே தொழுதேன் ; தொழுதகைப்
> போனவா பெய்த வளை."[3]

என்னும் செய்யுளேயாம். இதனை அன்றெனை நியாய

1. "இயல்தேர் வளவ"—புறம்: 7.
2. பட்டினப்பாலை: 299.
3. பொருநராற்றுப்படை: ஈற்றுவெண்பா.

வாயிலாகப் பிறர் மறுத்திடுமளவும் பெருந்திருமாவளவனும், திருமாவளவனும் ஒருவனே எனக்கொள்வது குற்றமாகாது "[1] என்றும், "இவன்பால் (திருமாவளவன்)பெருநட்புடையோன் பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி "[2] என்றும் கூறுவர் ஆசிரியர் L. உலகநாதம் பிள்ளையவர்கள்.

அவ்வாறு கொள்வதற்கு ஆதாரம் என்று கூறப்பட்ட "அரிமாசுமந்த" என்ற செய்யுட்கண், திருமாவளவன் என்று அழைக்கப்பெறும் கரிகாலனே குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன் என்று கோடற்குரிய சான்று ஒன்றும் இல்லை ஆதலாலும், பெயர் ஒற்றுமை உளது என்று கொள்வதாயின், அப்பெயர் ஒற்றுமை இச்செய்யுளிலேயே அன்றிப் பிற இடங்களினும்[3] காணக்கிடைக்கிறது. ஆகவே, அதற்கு இச்செய்யுள் ஒன்றையே ஆதாரமாகக் கொள்ளவேண்டுவதில்லை ஆதலாலும், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனுடைய நண்பனே[4] என்றாலும், இவ்விருவரைப் பாடிய காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் (புறம் 58), உறையூர் மருத்துவன் தாமோதரனார் (புறம்.-60), கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் (புறம்.-197), ஆகிய புலவர் பெருமக்களும், இப்புலவர்களால் பாடப்பெற்ற இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் (புறம்-57), பிட்டங்கொற்றன் (புறம்-169, 170, 171). சேரமான் குட்டுவன் கோதை (புறம் - 54), இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி (புறம் - 61), ஏனாதிதிருக்கிள்ளி (புறம் - 167), ஈர்ந்தூர்

---

1. 2. "முதலாம் கரிகாலன்" பக்கம் 65-66, 39
3. பட்டினப்பாலை: 299
4. புறநானூறு: 58.

கிழான் தோயன் மாறன் (புறம்- 180), சோழிய ஏனுதி (புறம். 394) ஆகிய புரவலர்களும், இவர்களுள், இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடிய ஏனைய புலவர்களாகிய மதுரைமருதன்இளநாகனும் (புறம் - 55), நக்கீரனும் (புறம் - 56) ஆவூர்மூலங்கிழாரும் (புறம் - 196), வடம வண்ணக்கண்பேரிச் சாத்தனும் (புறம்-198), பிட்டங்கொற்றனைப் பாடிய ஏனைய புலவர்களாகிய, கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனும் (புறம்-168), வடமவண்ணக்கண் தாமோதரனும் (புறம்-172) இவர்களால் பாடப் பெற்ற பிற புரவலர்களும் கரிகாலனுக்குப் பிற்பட்ட காலத்தவராகவே இருப்பதாலும், அவ்விருவரும் ஒருவரே என்பதோ, கரிகாலன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியின் நண்பன் என்பதோ பொருந்தா எனக் கொள்க.

"பெருஞ்சேரலாதனைத் தோற்கடித்த கரிகாலன் முற்பட்டவன்; இமயம்வரை சென்ற கரிகாலன் பிற்பட்டவன்; சங்கநூல்களில் கரிகாலன் என இருவர் கூறப்பட்டுள்ளனர்" என்று திருவாளர் K. N. சிவராஜப்பிள்ளையவர்கள் கூறியதாகக்[1] கொண்டு கூறியதோடு, "இரண்டாம் கரிகாலனைப் பற்றிய பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை இவற்றின் நடைக்கும், முதற் கரிகாலனைப் பற்றிப் பாடப் பெற்ற புறஅகப் பாடல்களின் நடைக்கும் உள்ள சிறிதளவு வேறுபாடு நுணுகி ஆராயத்தக்கது" என்றும் கூறி, கரிகாலன் இருவர் என்ற தம் கொள்கையை நிலைநாட்டுவர் திருவாளர் மா. இராசமாணிக்கம்பிள்ளையவர்கள்.[2]

---

1. Chronology Of the Early Tamils: P. 91-94.
2. தமிழ்ப் பொழில் துணர் 13: பக்கம் : 57.

இதனால், பரணர் (அகம்-125, 246, 376), நக்கீரர் (அகம்-141), மாமூலனர் (அகம்-55), கருங்குழலாதனர் (புறம்-7, 224), கழாத்தலையார் (புறம்-65), வெண்ணிக் குயத்தியார் (புறம்-66) ஆகஇவர்களால் பாடப்பெற்றோன் முதற்கரிகாலன் என்பதும், இவர்கள் பாடல்களால் அறியப் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்த பெருஞ்சேரலாதனோடு போரிட்டோன்[1] இம்முதற் கரிகாலனே என்பதும், வடநாடு சென்றோன் இவனல்லன் என்பதும், கடியலூர் உருத்திரங் கண்ணனார் (பட்டினப்பாலை) முடத்தாமக் கண்ணியார் (பொருநராற்றுப்படை) இவர்களால் பாடப்பெற்றோனும், முடத்தாமக் கண்ணியார் கூற்றுப்படி உருவப் பஃறேர் இளையோன் சிறுவனும் ஆகிய கரிகாலன், இரண்டாம் கரிகாலன் என்பதும், இவனே வடநாடு சென்றோன் என்பதும் அவர் கருத்தாதல் தெளிவாம்.

திருவாளர் பிள்ளையவர்கள், இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சம், கி. பி. 171-193-ல் ஒரு கயவாகுவை யும், கி. பி. 12-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு கயவாகுவையும் குறிப்பிடுகிறது ; இவ்விருவருள் செங்குட்டுவன் காலத்தில் வாழ்ந்தவன் முதற் கயவாகுவேயாதலின், அவன் காலம் அவ்விரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலமே; வடக்கே கங்கையாறுவரை பிரபலமுற்றிருந்த ஆந்திர சதகர்ணி அரசன் யக்ஞஸ்ரீ என்பவன் கி. பி. 166-196-ல் அரசாண்டவனவன் ; இவனே, சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்ற, செங்குட்டுவன் நண்பன் நூற்றுவர்கன்னர் என்பவன். இவன் காலம் கயவாகுவின் காலத்தோடு ஒற்றுமையுடையது. ஆகவே, செங்குட்டுவன்காலம் அவ்விரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலமே ஆகும்.[2]

---

1. புறநானூறு : 65, 66.
2. தமிழ்ப் பொழில் துணர், 13: பக்கம் 34; 55.

செங்குட்டுவனுக்கு முற்பட்டவன், கரிகாலன் ஆதலாலும், அவன் வடநாடு செல்ல ஏற்ற காலமாக விளங்கியது, புஷ்யமித்ர சுங்காவுக்குப் பிற்பட்ட காலமே (கி. மு. 148-27) ஆதலாலும், இக்காலமே, இலங்கைமீது தமிழரசர் படையெடுத்துச் செல்ல ஏற்ற காலம் என்று மகாவம்சம் கூறுவதாலும் இரண்டாம் கரிகாலன் காலம் கி. மு. 60-கி. மு. 20-க்கு உட்பட்ட காலமேயாகும்;[1] என்றும் முடிவு செய்வர்.

முதற் கரிகாலனைப் பாடிய பரணரே, இரண்டாம் கரிகாலன் தந்தை, உருவப்பஃறேர் இளையோனையும் (புறம்-4), இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மகன், செங்குட்டுவனையும் (புறம்-343, 369; அகம்-212; பதிற்றுப்பத்து, 41-50) பாடியுள்ளார். திரு. பிள்ளையவர்கள் கொள்கைப்படி கரிகாலன் இருவர் என்று கொள்ளாது ஒருவனாகவே கொண்டு, பரணர் கரிகாலனை, அவன் ஆட்சிக்கால இறுதியிலும், அதாவது கி. மு. 20-லும், சேரன் செங்குட்டுவனை அவன் ஆட்சித் தொடக்கத்திலும், அதாவது கி. பி. 166-லும் பாடியதாகக் கொண்டாலும், அவர் (பரணர்) நூற்றி எண்பத்தாறு ஆண்டுகளுக்குமேல் (கி.மு. 20 + கி.பி. 166 = 186) வாழ்ந்தவராகக் கொள்ளுதல்வேண்டும். இம்முடிவு கொள்ளற்பாலதன்று. கரிகாலனுக்கும், செங்குட்டுவனுக்கும் இடைப்பட்ட காலமே இத்துணைப் பெரியது என்றால், கரிகாலன் தந்தை உருவப்பஃறேர் இளையோனுக்கும், செங்குட்டுவனுக்கும் இடைப்பட்ட காலத்தை நோக்கின், பரணர் வாழ்நாள் மேலும் நீளும். நிற்க, திரு. பிள்ளையவர்கள் கொள்கைப்படி, கரிகாலனை இருவராகவே கொண்டு, பரணர், முதற் கரிகாலனை அகப்புறப் பாடல்களால் பாடியுள்ளார் என்பதையும் வைத்து நோக்கினால்,

1. தமிழ்ப் பொழில் துணர், 13: பக்கம் 34; 55.

அவர் வாழ்நாள், எத்துணை நீளமுடையது என்பதை எண்ணிப் பார்க்கவே இயலாது! (முதற் கரிகாலனுக்கும், இரண்டாம் கரிகாலனுக்கும் இடைப்பட்ட காலம் இவ்வளவு என்பதைத் திரு. பிள்ளையவர்களும் அறிவிக்கவில்லை.) ஆகவே, இரண்டாம் கரிகாலனுக்கும், செங்குட்டுவனுக்கும் வரையறுத்த காலமும் பொருந்தாது. அக்காலம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு கரிகாலன் இருவர் என்று கொள்வதும் பொருந்தாது என்க.

இவ்வாறு, அவர் கூறிய காலம் பொருந்தாமையோடு, மேலும் ஒரு அகச்சான்று, கரிகாலன் இருவர் என்ற தன் கொள்கையோடு முரண்படுவதையும் அவர் அறிந்திலர். முதற் கரிகாலனைப் பாராட்டிய பாக்கள் என்று இவரால் கூறப்பெற்ற, மாமூலனார், பரணர், வெண்ணிக்குயத்தியார் முதலியோரால் பாடப்பெற்ற அகப்புறப் பாடல்களில் எடுத்துக் கூறப்பெற்ற வெண்ணிப் பறந்தலை நிகழ்ச்சி, இவரால் இரண்டாம் கரிகாலனைப் பற்றியது என்று கூறப்பெற்ற பொருநராற்றுப் படையிலும் அப்பாட்டுடைத்தலைவன்செயலாகக் கூறப்பட்டுளது.[1] பரணர் கரிகாலனைப் பாடினார் என்றால், அவன் காலத்தில் வாழ்ந்தவர் என்று கொள்ளவேண்டுவது இன்று; கரிகாலனுக்குப் பிற்காலத்தே வாழ்ந்த அவர், இறந்தகால நிகழ்ச்சிகளையே பாடினார் என்று கொள்ளுதல் வேண்டும் என்றால், பரணர் இரண்டாம் கரிகாலன் தந்தை எனக் கூறப்பெற்ற உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியை எதிர்முகப்படுத்தியே பாடியுள்ளமையானும்,[2] இக்கரிகாலனுக்குப் பிற்பட்டோனாகிய செங்குட்டுவனையும் பாடியுள்ளமையானும், அவர், முதற் கரிகாலன் காலத்தில் வாழ்ந்தாரல்லர் என்பதை ஒப்புக்கொள்வதானாலும், இரண்டாம் கரிகாலன் காலத்தில்

1. பொருநர்: 143-48; 2. புறநானூறு: 4.

வாழ்ந்தவரே என்பது உறுதி செய்யப்படும். ஆகவே, அவர், அகப் பாடல்களில் குறிப்பிடும், வெண்ணி, வாகை நிகழ்ச்சிகளுக்கு உரியோன் எனக் கூறப்பெற்ற கரிகாலன், அவர் காலத்தில் வாழ்ந்தோனாகிய இரண்டாம் கரிகாலன் அல்லன்; அவருக்கும், அவ்விரண்டாம் கரிகாலனுக்கும் முற்பட்டோனாகிய முதற் கரிகாலனே என்று கூறுவது பொருந்தாது; ஆதலாலும், வெண்ணிப்போர் வெற்றி குறித்து அழுந்தூரில் ஆர்ப்பு எழுந்தது என்று பரணர் கூறுவதால்,[1] பரணரால் அப்பாட்டில் குறிப்பிடப்பெற்றோன், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னிக்கும், அழுந்தூர் வேள்மகளுக்கும் பிறந்த கரிகாலனே என்பது தெளிவாகிறது; உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மகன், பொருநராற்றுப்படை பெற்ற கரிகாலனே என அப்பாட்டு அறிவிக்கிறது;[2] இவ்வாறு அகப்புறப்பாடல்களில் பாராட்டப்பெற்ற கரிகாலனைப் பெற்றோரும், பட்டினப்பாலை, பொருநராற்றுப்படைகளில் பாராட்டப் பெற்ற கரிகாலனைப் பெற்றோரும் ஒருவரே என்று நன்கு தெளிவாகிறது. ஆதலாலும், பரணர் அம்முதற் கரிகாலன் மீது ஏற்றிக் கூறும் அதே வெண்ணிப் போர், முடத்தாமக் கண்ணியாரால், பாராட்டப்பெற்ற இரண்டாம் கரிகாலனுக்கும் ஏற்றிக் கூறப்பட்டுளது; அது, முன்னோர் செயலைப் பின்னுள்ளோர்க்கு ஏற்றிக் கூறும் முறைபோலன்றி, அப்பாட்டுடைத் தலைவன் செயலாகவே கூறப்பட்டுளது. ஆகவே, அச்செயல் இரண்டாம் கரிகாலனுடையதே ஆகும். ஆக, அவன் செயலை முதற்கரிகாலனுக்கு ஏற்றிக் கூறுவது இயலாது; (முன்னுள்ளோர் செயலை வேண்டுமானால், அவர் வழி வந்தோர்க்கு ஏற்றிக் கூறுதல் இயலும்; காலத்தால் பிற்பட்டோர் செயல்

1. அகநானூறு: 246. 2. பொருநராற்றுப்படை: 130.

ஒன்றை, அவருக்கு முற்பட்டோர்க்கு ஏற்றிக் கூறுவது இயலாது) ஆதலாலும், அவ்வகப்புறப் பாடல்களால் பாடப்பெற்ற கரிகாலனும், பொருநராற்றுப்படை, பட்டினப்பாலைகளால் பாடப்பெற்ற கரிகாலனும் ஒருவரே; வேறுபட்ட இருவரல்லர் என்பது தெளியப்படும்.

கரிகாலன் இருவர் என்ற கொள்கையை வற்புறுத்துவோர், அதை நிலைநாட்டுதற்குரிய அகச்சான்றுகள் இவை என்றோ; அவ்வாறு கொள்வதால், தமிழகவரலாற்றில் தெளிவாகும் உண்மை இவை என்றோ; கரிகாலன் ஒருவனே என்று கொள்வதால் உண்டாகும் இடர்நிலை இவை என்றோ ஒன்றும் கூறுகின்றாரல்லர்.

செங்குட்டுவனை அடிப்படையாகக்கொண்டு முடிவு செய்த காலம் பொருந்தாது என்பதே பலர் கொளளும் முடிவு. இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சம் அளிக்கும் செய்திகள், எத்துணை உண்மை உடையன என்பதே, இன்னும் உறுதி செய்யப்படாமல் இருப்பதாலும், சிலப்பதிகாரம் கூறும் நூற்றுவர் கன்னர், ஆந்திர சதகர்ணி யக்ஞஸ்ரீயே என்பதை உறுதிசெய்ய, பெயர் ஒற்றுமையே சான்றாகாது; மேலும் பல சான்றுகள் தேவை; ஆதலாலும், செங்குட்டுவன் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டே என்பதை ஒப்புக்கொள்ளாதார் பலர். இந்நிலையில், இவற்றையெல்லாம் நோக்காது, செங்குட்டுவன் காலத்தை முடிவு செய்துகொண்டு, அதை அடிப்படையாகக் கொண்டு, கரிகாலன் காலத்தையும் முடிவுசெய்வது சிறிதும் பொருந்தாது. அத்துடன், இத்தகைய காலநிலை ஒன்றையே அடிப்படை ஆதாரமாகக் கொண்டு, வேறு பிற அகச்சான்றுகள் காட்டாமலே, கரிகாலன் இருவர் என்று முடிவு செய்தல் ஒரு சிறிதும் பொருந்தாது என்க.

# 5. அரச உரிமை

பண்டைத்தமிழ் வேந்தர்தம் பெருமை எத்துணைச் சிறப்பாகக் கூறப்பட்டாலும், அவர்கள்பால், பொறுமை அழுக்காறுமை, ஒற்றுமை முதலிய மக்களுக்கு—அவருள்ளும் சிறப்பாக மன்னர்களுக்கு, இருக்கவேண்டிய மாண்புடைப்பண்புகள் இல்லை என்பதையும் கூறுதல் வேண்டும். தமிழகம் தாழ்ந்தமைக்கு அவர்களுடைய இந்தக் குறைபாடுகளே காரணமாம். "இந்த உலகம் அனைவர்க்கும் பொது" என்ற சொல்லே, அரசகுலத்தோர்க்கு அருவருப்பை உண்டாக்குவதாகும் என்றால், "தென் கடல் வளாகம் பொதுமையின்றி வெண்குடை நிழற்றிய ஒருமையோர்" என, அக்குறைபாட்டையே பெருமைக் குரியதாகக் கொண்டு புலவர்களும் பாடத்தொடங்கியது, எரியும் கொள்ளியில் எண்ணெய் ஊற்றியதுபோல் ஆயிற்று. இதனால், தமிழ்நாட்டில் மூவேந்தர் எப்பொழுதும் ஒருவரோடொருவர் போர்புரிவது, ஒருவர்நாட்டை ஒருவர் அழிப்பது ஆகிய செயல்களை விரும்பி மேற்கொண்டனர். அவ்வளவோடு நில்லாது ஒரு மரபினரே, பல கிளையினராய்ப் பிரிந்து மாறுபடலாயினர். உடன் பிறந்தார் ஒருவரோடொருவர் மலைந்தனர். மகனும் தந்தையும் மாறுபடலாயினர். இந்தப் பண்பு, தொன்று தொட்டே இருந்துவந்த காரணத்தால் சீரும் சிறப்புமாக வாழ்ந்த தமிழரசு இழந்து, தமிழகம் மாற்றார் கைப்பட்டுத் தாழ்ந்துவிட்டது.

கரிகாலன் தந்தை, உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, பெரும்வீரனைப் பேர் அரசனைப் வாழ்வதைப்

பொருத அவன் தாயத்தார், அவனை ஒழித்து அவன் அரசைக் கைப்பற்றக் காலம் நோக்கியிருந்தனர். அவனும் இறந்துவிட்டான்; தந்தை இறக்கும்பொழுது கரிகாலன் பிறக்கவே இல்லை; அவன் தாய் கருவுற்றிருக்கும்போதே தந்தை இறந்துவிட்டான்;[1] ஆகவே, கரிகாலன் பிறப்பதற்கு முன்னரே அரச உரிமையைப் பெற்றுவிட்டான்; இதையே "தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி"[2] என்ற தொடர் கூறுவதாகும். "தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலே இருந்து பிறக்கையினாலே, அரச உரிமையைப் பெற்றுப் பிறந்தான்" என்று அத்தொடருக்குப் பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர். தாம் வேண்டியவாறு சிறிது முன்னரோ, பின்னரோ, குழந்தை பிறக்கச் செய்வது இயலாத செயல் என மருத்துவ நூலார் கூறுவர் ஆதலின் அத்தொடர்க்கு அவ்வாறு பொருள்கொள்வது பொருந்துவதின்று. தாய்வயிற்றிலிருந்து பிறக்குமுன்னரே, தந்தை இறந்துவிட்டானாதலின், அப்பொழுதே—பிறப்பதற்கு முன், தாய்வயிற்றிலேயே—கரிகாலன் அரச உரிமையைப் பெற்றான் என்று கொள்வதே பொருந்துவதாகும்.

உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி இறந்துவிட்டானாகவே, அரசைக் கைப்பற்றக் காலம் கருதியிருந்த

1. கரிகாலன் பிறந்து வளர்ந்து பலகலையும் பெற்றுப் படைக்கலம் பயின்று இளம் பருவத்தனாயிருக்கையில் அவன் தந்தை இறந்தான் என்பர், திரு. மு. உலகநாத பிள்ளையவர்கள் ("கரிகாலன்" பக்கம். 23) அவ்வாறு கொள்வதற்குரிய சான்று ஒன்றும் கிடைக்கவில்லை ஆதலாலும், இக்கொள்கை, கரிகாலன், "பிறந்து தவழ் கற்றதற்றொட்டுச் சிறந்த நன்னாடு 'செகிற்கொண்டான்" என்ற பொருநராற்றுப்படைச் செய்தியோடு மாறுபடுதலாலும் அவ்வாறு கொள்வது நேரிதன்று.

2. பொருநராற்றுப் படை: 132.

அவன் தாயத்தார், நாட்டில் குழப்பத்தை உண்டாக்கி விட்டுப் பிறந்த கரிகாலனையும் பிடித்துச் சிறையில் வைத்துச் சிலநாள் ஆண்டு வரலாயினர். நிற்க.

இளஞ்சேட்சென்னி இறந்துவிட்டான் ஆகவே, நாடு அரசு இன்றி அலமரும் நிலையைப் போக்க, அரசயானையை அவிழ்த்துவிட்டு அது தன்மீது ஏற்றிக்கொணர்ந்த கரிகாலனைச் சோழநாட்டரசனாக்கினர் என்பர் சிலர். அவர்கள் அவ்வாறு கொள்வதற்குக் காரணமாய் விளங்குவன,

> "கழுமலத்தில் யாத்த களிறும் கருவூர்
> விழுமியோன் மேற்சென் றதனால்—விழுமிய
> வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
> தீண்டா விடுதல் அரிது."

என்ற பழமொழிச் செய்யுளும், "கழுமலம் என்னும் ஊரின்கண்ணே பிணித்து நின்றகளிறும், கருவூரின் கண்ணேயிருந்த கரிகால்வளவன் கடிது இளையனாயினும் அவன் சிறப்புடையனாதலால் அவன்மேற் சென்று தன் மிசை எடுத்துக்கொண்டு அரசிற்குரிமை செய்தது" என்ற அதன் உரையுமேயாம்.

பண்டைய நாட்களில் அரசனே எல்லாம். ஒரோவழி அவன் தவறுசெய்தால் அதை எடுத்துக்காட்டி அறிவுரை கூறச் சில அறிஞர்கள் முயன்றது தவிர, அமைச்சர்கள், ஆளுங்குழு என்ற வகையில் ஓர் அமைப்பு முறை இருந்ததாகக் கொள்வதற்கில்லை. அரசன் இறந்தால் அவனுக்குப்பின் அவன் மகனே அரசனாதல் வேண்டும் என்ற முறையே நிலவி வந்துளது. அரசன் மகப்பேறின்றி இறந்தான் எனில், நாட்டில் ஆளும் அமைப்பு என ஒன்

றில்லாமையால் அடுத்த அரசன் யார் என்பதை உறுதி செய்யமாட்டாராய், வேற்றரசன் வருகையை எதிர்நோக்கி யிருப்பதல்லது அந்நாட்டுக் குடிகள் வேறொன்றும் செய் யார். அரசன் மரபில் வந்த ஆற்றல் மிக்க ஒருவனோ, அன்றிப் பிற வேற்றுநாட்டரசன் ஒருவனோ தன்முயற்சி யால் அந்நாட்டைக் கைப்பற்றி ஆளுவன். இதுவே தமிழ கத்தில் பண்டு நிலவிய அரசியல் முறை.

பின்னர், ஐம்பெருங்குழு, எண்பேராயம் என அமைப்பு முறை வந்த பிறகு, அரசன் மகப்பேறின்றி மறைந்துவிட்டால் அவன் மரபில் தக்காரைத் தேர்வதோ, அன்றி யானைவழி ஆள்வோரைத்தேர்வதோ அக்குழுவினர் செய்வர். இதுவும் அரசன் மகப்பேறின்றி இறந்துழியே அன்றி, அவன் மகன், ஆளும் பருவம் அற்ற இளைஞன் என்பதற்காகவே அவனை நீக்கிவிட்டுப் பிறரைத் தேரார். மாறாக அவனையே அரசனாக்கி அவன் பருவம் எய்தும் வரை அவனுக்காக வேறு சிலர் ஆள்வர். இஃது இடைக் காலத்தில் கண்டமுறை. ஒரோவொருகால் இளைஞனுக்காக ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்துபவனோ அன்றிப் பிறரோ, அவனை ஒழித்துவிட்டு அவ்வரசைத் தாமே கைப்பற்றிக் கொள்வதுமுண்டு.

கரிகாலன் காலத்தில் ஆளும் குழு என்பது போன்ற ஒன்று இருந்தமைக்குரிய சான்று ஒன்றும் கிடைத்திலது. ஆகவே எதிர்காலத்தில் நாடாளும் பொறுப்புப்பற்றிக் கவலைகொள்வோர் யாரும் இல்லை ஆதலாலும், இளஞ்சேட் சென்னி இறக்கும்போது மகன் பிறக்கவில்லை என்றாலும், அவன் இறந்தவுடனே கரிகாலன் பிறந்துவிட்டான் ஆதலாலும், இளஞ்சேட்சென்னி இறந்துவிட்டமையால் நாட்டில் நிலவிய குழப்ப நிலையைப்பயன்படுத்திக்கொண்டு

ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்யத் தொடங்கி விட்டனர் அவன் தாயத்தார் என்பதற்குச் சான்றுகள் பல உள. ஆதலாலும் யானையைக் கொண்டு அரச தேர்வு செய்யவேண்டுவது தேவையில்லை. ஆகவே பழமொழிக் கூற்று ஏற்கத்தக்கதல்ல. மேலும், யானை சோழர் தலைநகர்களாகிய புகார், உறையூர் ஆகிய இவற்றில் ஒன்றினின்றும் விடப்படாமல், கருமலம் என்ற சேரர் நகரிலிருந்தே விடப்பட்டதாகவும், யானை, கரிகாலனை, அச் சேரர் தலைநகர் கருவூரிலிருந்தே எடுத்து வந்ததாகவும் கூறப்பட்டுளது. தாயத்தார்க்கு அஞ்சிய அவன் தாய், தன் மகனைக் காப்பாற்றத் தலைநகர்விட்டு ஓடினள் என்றால், அவள் தன் தாய்வீடாகிய அழுந்தூர் செல்வாளேயன்றித் தங்கள் குலப் பகைவர்—சேரர் தலைநகர் செல்லாள். இவ்வரலாற்றை அளிக்கும் பழமொழிச் செய்யுளில் "விழுமியோன்" என்றுதான் காணப்படுகிறதே ஒழிய, கரிகாலன்பெயரோ அன்றி சோழர்குலத்தான் என்ற குறிப்போ காணப்படவில்லை. யானை தந்தது எனக் கூறும் பழமொழியே வேறு செய்யுட்களால் அவன் பகைவர் கையகப்பட்டுச் சிறைவைக்கப் பட்டான் எனவும், இரும்பிடர்த் தலையார் துணைகொண்டு கரிகாலன் வெளியேறினன் எனவும் கூறுகிறது. இவற்றை ஏற்றுக் கொள்வதாயின், யானையைக் கொண்டு கரிகாலனை அரசனாக்க முயற்சித்தவர் யார்? அவன் வந்ததும், குழப்பம் விளைத்து, அவனைச் சிறைசெய்த தாயத்தார், யானைத் தேர்வின்போது வாளா இருந்தனர் என்பது பொருந்துமா? தாயத்தார் அவனைச் சிறைசெய்யும்போது, அவனை யானைத் தேர்வுமூலம் அரசனாக்கியவர் யாது செய்தனர்? அப்போது அவர்கள் வாளா இருந்தனர் எனக் கோடல் பொருந்துமா? என்பன போன்ற ஐயங்கள் பல உண்டா

தலும் கூடும். கழுமலமும், கருவூரும் சேரநாட்டு நகரங்கள் ஆதலின், சோழநாட்டரசன் தேர்விற்குக் கழுமலத்தினின்றும் யானை விடுவதும், அது கருவூரில், அவ்வூர் விழுமியோன் ஒருவனைத் தேர்வதும் வரலாற்று நூலாசிரியர்கள் ஒப்பாத ஒன்று. அப் பழமொழிப் பாட்டான் குறிப்பிடும் செயல், சேரநாட்டில் நடைபெற்ற அந்நாட்டு அரசன் தேர்வு ஒன்றைக் குறிப்பதாகக் கொள்வதல்லது, அதைச் சோழநாட்டு அரசியலோடு தொடர்பு படுத்தல் கூடாது. ஆகவே, பழமொழியும், அதன் உரையும் குறிப்பிடும், யானைவழி அரசர் தேர்வு, கரிகாலனைப் பற்றிய கற்பனையே அன்றி உண்மை அன்று என்பதே முடிவு.

பின்னாள், பகைவர் சிறையுள், வாழ்ந்த கரிகாலன், அதனின்றும், மீளும் வழிவகைகளை எண்ணித் துணிந்து, தக்கார் துணையையும் பெற்று, ஒருநாள் பகைவருடைய திண்ணிய காவலைத் திடீர் என்று வாள்துணைகொண்டு தாக்கி வெளியேறி விடுதலைபெற்றுத் தனக்குரிய அரச உரிமையைக் கைப்பற்றிக் கொண்டான். கரிகாலன் செய்த, செயற்கரும் இச்செயல் கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் மிகமிக அழகாகப் பாராட்டப் பெற்றுள்ளது. "கூரிய நகத்தினையும், வளைந்த வரிகளையும் உடைய புலிக் குட்டி, கூட்டுள் வளர்ந்தாங்குப் பகைவர் சிறையகத்தே வாழ்ந்து, ஆண்மையும், உரனும்பெற்று வளர்ந்து, மேல் செய்யக்கடவ செயல்களை, நுண்ணிதாக எண்ணித் துணிந்து, பெரிய யானை ஒன்று, தன்னைப் பிடிப்பார் வீழ்த்திய பெரிய குழியினின்றும் ஏறுதற்கு, அக் குழியின் கரைகளைத் தன் கூரிய கோட்டாலே குத்தி, அக் குழியைத் தூர்த்து, ஏறித் தன் பிடியோடு சேர்ந்தாற் போல, கரிகாலன் தன் பகைவருடைய திண்ணிய காவலைத்

தன் வாள்துணையால் அழித்து வெளியேறினன்"[1] என்பர்.

இவ்வரிய முயற்சியில், பெருந்துணை புரிந்தவர் இரும்பிடர்த் தலையார் என்றும், அவர் கரிகாலனுக்கு அம்மான் முறையினர் என்றும்,

"சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக் - கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினன்; இல்லை
உயிருடையார் எய்தா வினை."

என்ற பழமொழிச் செய்யுளைச் சான்றாகக்கொண்டு கூறுவர் சிலர். இவர், நெருங்கிய உறவினர் என்பது உண்மையாயின், கரிகாலன் பெற்ற பிற வெற்றிகளிலும், அவன் அரசியல் அலுவல்களிலும் அவனுக்குப் பெருந்துணை புரிந்தாராதல் வேண்டும். கரிகாலன் பாண்டியரை வென்றான் என்பது உறுதி செய்யப்பட்ட உண்மையாகும். ஆகவே, இரும்பிடர்த் தலையாரும், பாண்டியன் தோல்விக்குக் காரணமாய் இருந்தாராதல் வேண்டும். இவர், கருங்கை ஒள்வாட் பெரும்பெயர்வழுதி என்ற பாண்டியனுடைய பீடும், பெருமையும் தோன்றப் பாராட்டியுள்ளார்.[2] பாண்டியர் தோல்விக்குத் துணைபுரிந்த ஒருவரே, அவரைப் பாராட்டினர் எனல் பொருந்தாது. மேலும்,

---

1. கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர் பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாயம் ஊழின் எய்தி. —பட்டினப்பாலை: 220-27.

2. புறநானூறு: 3.

பகையரசரைப் பாராட்டிய இவர், சீரும் சிறப்புமாகச் செங்கோல் செலுத்திய தன் உடன்பிறந்தாள் மகனைப் பாராட்டாதிரார். ஆனால், கரிகாலனை இவர் பாராட்டியதாகச் சான்று ஒன்றும் கிடைத்திலது. ஆக, இந்நிலையில், ஒன்று, பாண்டியனைப் பாராட்டிய இரும்பிடர்த் தலையார் வேறு, கரிகாலனுக்குத் துணைசெய்த அவன் அம்மான் இரும்பிடர்த் தலையார் வேறு என்றாவது, அன்றிக் கரிகாலனுக்கு இரும்பிடர்த் தலையார் துணைசெய்தார் என்ற பழமொழிச் சான்று ஏற்கத் தக்கதன்று என்றாவது கொள்ளுதல் நலம்.

# 6. கரிகாலன் பெற்ற வெற்றிகள்

சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிளவுபட்டுத் தனிப்பேர் அரசர் மூவரால் ஆளப்பட்டு வந்த தமிழகம், அந்நாடுகளுக்கிடையே, அப்பேர் அரசுகளுக்கு அடங்கியும், அடங்காமலும், வாழ்ந்த பல குறுநில மன்னர்களாலும் ஆளப்பட்டு வந்துளது. தமிழ்நாடாண்ட மூவேந்தர், தம் நாட்டின் எல்லை இதுவெனக்கொண்டு, தம் ஆட்சி அதுவரை நின்று நிலைத்தால் போதும் என்று எண்ணி அமைதிகொள்ளும் பண்பினர் அல்லர். ஒருகாலத்தில், ஓர் அரச குலத்தில், ஆற்றல்மிக்க அரசன் ஒருவன் தோன்றிவிட்டால், அவன் தன் ஆற்றலை, ஏனைய இரு பேர் அரசுகளும், மற்ற குறுநில மன்னரும் உணரும்வண்ணம், அவர் நாடுகளைவென்று அகப்படுத்த நினைப்பதும், அவன் காலத்தில், பிற இரு நாடுகளை ஆளும் வலிவற்ற அரசர்கள், ஏனைய குறுநில மன்னர்கள் துணையைப் பெற்றுவது, அவ்வரசன் ஆற்றலை அடக்க, அவன் நாட்டின்மீது கூட்டாகப் படையெடுப்பதும், தமிழக வரலாற்றில் காணும் வழக்காறும்.

உள்நாட்டில் தாயத்தார் விளைத்த குழப்பத்தையும், பகையையும் போக்கித் தனக்குரிய தாயத்தை ஊழின் எய்திய கரிகாலன் வேறு பகைகளையும் வேர் அறுக்க வேண்டியிருந்தது. உருவப்பஃறே ரிளையோன் இறந்தது; சோழநாட்டில் தாயத்தார் விளைத்த உள்நாட்டுக் குழப்பம்; கரிகாலன் ஆண்டிளமை; ஆக இவை, பகை மன்னர்க்குக் கிடைத்தற்கரிய வாய்ப்பாகத் தோன்றவே, சேரனும், பாண்டியனும், பிறரும் ஒன்று சேர்ந்து அவனை அழித்துச் சோழநாட்டரசைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். சேரமான் பெருஞ்சேரலாதன், பாண்டியன் ஒருவன், வேளிர்

பதினொருவர் ஒன்றுகூடி, நீடாமங்கலத்திற்கு அண்மையில் கோயில்வெண்ணி எனவழங்கும் வெண்ணிவாயில் என்னு மிடத்தில் கரிகாலனை எதிர்த்தனர். "கைவண் கிள்ளி வெண்ணி"[1] என்பதனால் இது சோழ நாட்டகத்ததோர் ஊரே என்பது தெளிவாம். போரில் பதினொரு வேளி ரோடு இருபெரு வேந்தரும் பட்டனர் என்று பரணரும்,[2] இருபெரு வேந்தரும் ஒருகளத்தே அவிந்தனர் என முடத் தாமக் கண்ணியாரும்.[3] வெண்ணிப் பறந்தலையில் புறப் புண் பெற்ற சேரலாதன், அப்போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்தானாக, அதுகேட்ட சான்றோர் பலர் தாம் வடக்கிருந்து உயிர் துறந்தனர் என்று மாமூலனாரும்,[4] உவா நாளன்று, ஒரே காலத்தில், மாறு

1. நற்றிணை: 390

2. பெரும் பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத் தொழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே." —அகம்: 246.

3. "இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்."
—பொருநர்: 146-48.

4. "கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் ணாணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத் தவனொடு செலீஇயர்
பெரும் பிறி தாகி யாங்கு." —அகம்: 55.

பட்ட திசைகளில் ஞாயிறும், திங்களும் காணப்படினும், அவற்றுள் ஒன்று சிறிதுகால எல்லைக்குள் மறைந்துவிடுவதைப்போலத் தன்போல் வேந்தன் எறிந்த புறப்புண் நாணி, சேரலாதன் வடக்கிருந்தனன் என்று கழாத்தலையாரும்[1] வென்ற கரிகாலனினும் வடக்கிருந்த சேரலாதன் நல்லன் என்று வெண்ணிக்குயத்தியாரும்[2] கூறுவர். இவர்களுள் வெண்ணிக்குயத்தியார், போர்க்களத்திற்கு அண்மையில் வெண்ணிவாயிலில் வாழ்ந்த குயவர்குல மகளார் என்பது குறிப்பிடத்தக்கது. வெண்ணிப்போர் கரிகாலன் கன்னிப்போர்; ஆயினும் அதுவே அவன் பெற்ற வெற்றிகளுள் பெரும்வெற்றியாகும். இப்போரின் விளைவாய்த் தமிழ்நாட்டிலுள்ள பகைவர் அனைவரும் பலம் குன்றுவராயினர். வெண்ணியில் கரிகாலன் பெற்ற இவ் வெற்றி குறித்து, அவன் தாய் பிறந்த அழுந்தூரில் வெற்றிவிழாக் கொண்டாடப்பெற்றது என்பர் பரணர். இப்போரின் சிறப்பையும், இதனால் கரிகாலன் பெற்ற வெற்றிப் பெருமையையும் உணர்ந்த முடத்தாமக்கண்ணி

1. "உவவுத்தலை வந்த பெருநா ளமயத்து
இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்புகுறித்து எறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கு இருந்தனன்" —புறநானூறு : 65.

2. "கரிகால்வளவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே?
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே" —புறநானூறு: 66.

3. அகநானூறு : 246.

யார், "பால் மணம் அறுத மிக இளமைக் காலத்திலேயே, சிங்கக் குருளை முதல்வேட்டையாகப் பெருங்களிறு ஒன்றைக் கொன்றதைப்போலக் கரிகாலன் தன் இளமைக் காலத்திலேயே பேர்அரசர்தம் கூட்டு முயற்சியை அடியோடு முறித்தொழித்தான்" எனப் பாராட்டுவாராயினர்.[1]

வாகை என்ற ஊரின்கண், கரிகாலன் பெற்ற வெற்றி ஒன்றைக் குறிப்பிட்டு, அதில் அவனொடு பொருத ஒன்பது அரசர்கள், நண்பகலிலேயே தோற்றுத் தம் குடை முதலாயினவற்றையும் களத்திலேயேவிட்டு ஓடினர் எனப் பரணர் கூறுவர்.[2]

வாகைப்பறந்தலையில், நன்னன், நார்முடிச் சேரலோடு பொருது வீழ்ந்தான் என்ற செய்தி, பதிற்றுப்பத்திலும்,[3] அகநானூற்றிலும்[4] காணப்படுகிறது. நன்னன்

1. "ஆளி நன்மான் அணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞேரெனத்
தலைக்கோள் வேட்டம் களிறட் டாங்கு"
—பொருநர்: 139—142.

2. "பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
பீடில் மன்னர்" —அகம்: 125.

3. "பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்." —பதிற்று: 40.

4. "இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத்து ஒழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்." —அகம்: 199.

பாழிக்குரியவன் என்பதும், அப்பாழியிற்பெரும்பொருள் வைத்துப் பேணிவந்தனர் வேளிர் பலர் என்பதும்,

"நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமை."[1]

என்ற பாட்டாலும், பிறவற்றாலும் துணியப்படும். இப்பாழியைக் கரிகாலன் தந்தை அழித்திருத்தல் கூடும் என்பது, "பெற்றோரும், உற்றோரும்" என்ற தலைப்பின்கீழ் விளக்கப்பட்டுளது. நன்னனுக்கும், நார்முடிச் சேரனுக்கும், வாகைப் பறந்தலையில் நடைபெற்ற போர் இப்பாழிக்காகவே ஆதலாலும், வாகை, அப்பாழிக்கு அண்மையில் இருப்பதாகவே தெரிவதாலும், வெண்ணிவாயில் போரில் வேளிர் பதினொருவர் இவனோடு போரிட்டுள்ளனர் ஆதலானும், வேளிர் பாழியில் பெரும்பொருள் வைத்துள்ளனர் ஆதலாலும், வாகைப்பறந்தலைப் போர், பாழியை இவன் தந்தை அழித்தது காரணமாகவோ, அன்றி, அப்பாழியை இவன் கைப்பற்ற முயற்சித்ததன் காரணமாகவோ, ஒன்பது வேளிர் ஒன்றுகூடிக் கரிகாலனை எதிர்த்ததாக இருத்தல் கூடும். பரணர் கூறிய "பீடில் மன்னர்" என்ற பகுதியில், அம்மன்னர் "பீடில்" என்று சிறப்பிக்கப்பட்டுள்ளமையால் அவர்களுள் (அவ்வொன்பது மன்னர்களுள்) சேர, பாண்டியர் போன்ற முடியுடை வேந்தர் இலர்; குறுநில மன்னர்களே கலந்திருந்தனர் என்ற குறிப்புத் தோன்றுதல் நோக்கத்தக்கது.

வெண்ணி, வாகை முதலாய இடங்களில் பெற்ற வெற்றியோடு அமையானாய்க் கரிகாலன் தமிழ்நாடெங்கும் தண்டுகொண்டு சென்று ஆங்காங்குள்ள முடியுடைவேந்தர், குறுநிலமன்னர் முதலியோரை வென்று மீண்டான்.

---

1. அகம்: 258.

இவ்வாறு அவனால் வெல்லப்பட்டோர், ஒளியர், அருவாளர், வடவர், குடவர், தென்னவர், பொதுவர், இருங்கோவேள் முதலியோராவர்.[1]

ஒளியர் :—நாகர்வழி வந்த ஒரு நாடோடிக் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றும், கரிகாலன் இவர்களை வென்று நிலைத்து வாழுமாறு செய்தான் என்றும் கூறுவர், திரு. K. A. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள்.[2] "நாகப்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு பாண்டிநாட்டுக்கு வடக்கிருப்பது பன்றிநாடு. இதில் எயினர் என்னும் ஓர் மரபினர் வாழ்ந்திருந்தனர். இவ்வெயினருள் நாகர் என்னும் ஓர் வகுப்பினரும், அவருள் ஒளியர் எனப் பிறிதோர் வகுப்பினரும் இருந்தனர். இந்நாகருள் அரசராதற்குரியோர் ஒளிநாகரேயாதலின் அவரையெல்லாம் வன்மை குன்ற அடக்கினான்" என்றும்[3] "ஈண்டு ஒளியராவார் மற்றை மண்டலத்திற்கு அரசராதற்குரிய வேளாளர்" என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். (பட்டினப்பாலை : உரை) வேளாளர்களை உயர்ந்த நிலையில் நிறுத்துதலிற்பெருநோக்கமுற்ற கரிகால்வளவன் அவர்களை ஒடுக்கினான் எனல்

---

1. "பல்ஒளியர் பணிபொடுங்கத்,
தொல்அருவாளர் தொழில்கேட்ப,
வடவர் வாடக், குடவர் கூம்பத்,
தென்னவன் திறல்கெடச், சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாள்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்து நோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேள் மருங்குசாய"
—பட்டினப்பாலை : 274—282.

2. The Cholas P. 42.

3. சோழன் கரிகாற் பெருவளத்தான் —பக்கம். 63.

பொருத்தமாகக் காணப்படவில்லை. ஆனால், நாகர் மரபில் எயினர், ஓவியர், ஒளியர், அருவாளர் எனப் பல பகுப்பினர் காணப்படுகின்றனர். இவர்களில் ஒளிநாகர் கி. பி. 11 ஆம் நூற்றாண்டளவும் மிக்க பராக்கிரமசாலிகளாக இருந்தனர் என்பது அவர்கள், இராஜராஜேந்திர சோழ தேவர் (கி. பி. 1040—1069) செங்கோல் கைக்கொண்ட ஒன்பதாம் ஆண்டில் மாமல்லபுரத்து வராகசுவாமிக்கு நிலதானம் கொடுத்திருக்கின்றதைப் பொறித்துவைத்துள்ள கல்வெட்டுச் சாதனத்தால் அறியக்கிடக்கிறது. (Indian Artiquary Vol XXII P. 57) ஆதலால் ஒளியரை வேளாளர் எனக் கொள்வதினும் ஒளிநாகர் எனக் கோடலே பொருத்தமுடைத்தால் காண்க"[1] என்றுங் கூறுவர் திருவாளர் L. உலகநாதம் பிள்ளையவர்கள்.

**அருவாளர்** :—"காவிரி யாற்றுக்குச் சற்று வடக்கே பெண்ணையாறு பாயும் அருவா நாட்டில் வாழ்வோர் அருவாளராவர்" என்று திருவாளர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்களும்,[2] "கி. பி. இரண்டு அல்லது மூன்றும் நூற்றாண்டில் தமிழ் அரசுகள் நிலைகுலைந்து அழிதற்குக் காரணமாய் இருந்தவர் இவ்வருவாளரே என்று இலக்கியங்கள் சான்று அளிக்கின்றன; அவ்வருவாளர் தமிழரின் முற்றும் வேறுபட்டவர்" என்று வரலாற்றுப் பேராசிரியர் A. V. சிமித்து அவர்களும்[3] "தொண்டையர் வடவர் என்பாரைப் போல அருவாளரும் ஒரு கூட்டத்தார்" என்று திருவாளர் R. கோபாலன் அவர்களும்[4] கூறுவர். "அருவா நாடென்பது, அருவாவடதலை, அருவா என

1. கரிகாற் பெருவளத்தான் : பக்கம் 37.
2. The Cholas P. 42.
3. Early History of India. P. 416.
4. Pallavas of Kanchi P. 9.

இரு கூறுடையதாய், மாஇலங்கை என மறுபெயர் பூண்டதாய் கச்சியைத் தனக்கு இராஜதானியாகக் கொண்டதாய், புனல்நாடாகிய சோழநாட்டிற்கு வடக்கிருப்பது. இந்நாட்டில் ஓரிடத்தும் நிலையின்றி, அலைந்து திரியும் குறும்பர் என்னும் ஓர்கொடிய சாதியார் வாழ்ந்து வந்தனர். அவர்களை அடக்கி ஓரிடத்து நிலைபெறச் செய்ததன்றி அன்னவர் நாட்டினையும் இருபத்து நான்கு கோட்டங்களாகப் பகுத்து அவற்றை வேளாளர்க்குக் கொடுத்து அங்குக் குடியேற்றினான். செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள சேயூர், குன்றம்பேட்டை முதலிய இடங்களில் இக்காலத்து வாழும் முதலிமார்கள், தம்மைக் கரிகால் வளவனால் குடியேற்றம்பெற்ற வேளாள மரபைச் சார்ந்தவரெனச் சொல்லிக்கொள்ளுகின்றனர்" என்று கூறுவர் திருவாளர் உலகநாதம் பிள்ளையவர்கள்.[1]

பொதுவர் :—பொதுவர் என்பார், பல்லவ நாட்டிற்கு வடக்கே கடப்பா, கர்னூல் மாவட்டத்தைச் சேர்ந்த இடையர் எனவும், கரிகாலன் அவர்களை அடக்கி ஒருவழிப்படுத்தினான் எனவும், இவ்வாறு கரிகாலன் ஆணைக்கீழ்க் கொணரப்பட்டோர், இன்றும் மயிர்க் கம்பளங்களை நெய்யும் தொழிலை மேற்கொண்டிருக்கும் குறும்பர்களே என்றும் கூறுவர் திருவாளர் P. T. சீனிவாச அய்யங்காரவர்கள்.[2] "திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஆயர்குலத தலைவர்" என்பர் திருவாளர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள்.[3]

இருங்கோவேள் என்பான் வேளிர்குலத்தான் என்பதல்லது பிற ஒன்றும் தெரிந்திலது. இனி "வடவர்" என்

1. கரிகாற் பெருவளத்தான்: பக்கம் 33—34.
2. History of the Tamils.
3. Studies in Chola History and Administration : P. 53.

பதைக் "காஞ்சிப் பல்லவ அரசர்கள்." என்று திரு. P. T. சீனிவாச அய்யங்கார் அவர்களும்,[1] "வேங்கடத்தில் வாழும் வடுகர்" என்று திருவாளர் உலகநாதம் பிள்ளை அவர்களும் கூறுவர்.[2] இத்தொடரால் குறிப்பிடப்படுவோர் வேங்கடத்திற்கு அப்பால் உள்ள வடநாட்டரசரே என்பது என் கருத்து.

தமிழ்நாடு முழுதும் தன் ஆணைக்கீழ் அடங்கியது கண்ட கரிகாலன், பெற்றது மகிழானாய் மேலும் போரே விரும்பினனாக, தன்னை எதிர்ப்போர் தமிழகத்தில் யாரும் இன்மை அறிந்து, நல்ல நாளில் வாள், குடை, முரசு முதலாயவற்றை முன்னே போகவிட்டு 'என் வலிகெழு தோளின் பெருமையை, இம்மண்ணகமருங்கில் என் நண்ணார்பெறுக' என வஞ்சினம் கூறி, வடநாடு நோக்கிச் சென்றானை, இமயம் இடையே நின்று தடுத்தது. ஆகவே, அதன் உச்சியில் புலி பொறித்து மீளும்பொழுது, வச்சிரநாட்டரசன் தனக்கு இறைக்கடனாகக் கொடுத்த முத்துப் பந்தல், மகத நாட்டரசன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபம், அவந்தி வேந்தன் உவந்துகொடுத்த தோரண வாயில் முதலாயவற்றைப் பெற்றுத் தமிழ்நாடு மீண்டான்.[3] கரிகாலன் வடநாட்டுச் செலவு பற்றிக் கருத்து வேறுபடுவார் கூற்று, "காஞ்சிநாடும் கரிகாலனும்" என்ற தலைப்பின் கீழ் ஆராயப்படும்.

1. History of the Tamils 345—346.
2. கரிகாற் பெருவளத்தான்: பக்கம் 35.
3. சிலப்பதிகாரம். : 5 : 90—104.

# 7. காஞ்சிநாடும் கரிகாலனும்

கரிகாற்பெருவளத்தானுடைய ஆட்சிப்பரப்பின் அளவு அறிஞர் பலர்தம் ஆராய்ச்சிக் குட்பட்டு நிற்கிறது. கரிகாலனுடைய வரலாற்றை அறியும் வாயில்களாக உள்ள பண்டை இலக்கியங்களுள், பட்டினப்பாலை "வடவர் வாட"[1] எனப் பொதுவாகவும், சிலப்பதிகாரம் அவனுடைய இமயமலைப் படையெடுப்பையும், வச்சிரம், மகதம், அவந்தி முதலாய வடநாட்டரசர்கள் தந்த இறைப்பொருளைப் பெற்று மீண்டதையும் விளக்கமாகவும்[2] அறிவிக்கின்றனவே ஒழிய, அவனுக்கும், காஞ்சிநகர்க்கும் உள்ள தொடர்பு குறித்து ஒன்றுமே அறிவியாமல் விட்டுவிட்டமையானும், கரிகாலனைப் பாடிய (பட்டினப்பாலை) கடியலூர் உருத்திரங்கண்ணனாரே காஞ்சியைத் தலைநகராகக்

1. பட்டினப்பாலை : 276.
2. "செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்"

—சிலம்பு. 5 : 89—104.

கொண்டு ஆண்ட திரையனையும் பாடியுள்ளமையானும் (பெரும்பாணாற்றுப்படை), அதுவும், "முரசு முழங்குதானை மூவரினும் சிறப்புடையோன்" எனப் பாராட்டியுள்ளமை யானும்,[1] காஞ்சியைக் கரிகாலன் கைப்பற்றினான் அல்லன் என்பது தெளிவாகவும், விஜயாலயன் வழிவந்த முதலாம் இராஜேந்திரன் திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், தெலுங்குச் சோழர் கல்வெட்டுக்கள் சிலவும், பெரிய புராணமும்[2] கரிகாலன் காஞ்சியைக் கைப்பற்றிப் புதுக்கினான் எனவும், அதில் இருந்து ஆண்டான் எனவும் கூறுகின்றன.

கரிகாலனைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாரே திரையனையும் பாடியிருப்பதால், இருவரையும் ஒரே காலத்தில் வாழ்ந்த இருபேர் அரசர்களாய்க் கொள்ளுதல் வேண்டும்; கரிகாலன் வடவரையும் வெற்றிகொண்டான் எனப் பட்டினப்பாலையும், சிலப்பதிகாரமும், பிறவும் கூறும்போது அவன் ஆட்சிக்கு அண்மையில் திரையன்

---

1. "முரசு முழங்கு தானை மூவருள்ளும்
இலங்கு நீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேற் றிரையன்." —பெரும்பாண்: 32—37.

2. "என்றும் உள்ள இந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன்
வன்தி றற்புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதநான் குட்பட வகுத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிக்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும்."
—திருக்குறிப்புத்தொண்டர்: 85.

ஒரு பேரரசனாக வாழ்ந்தான் என்று பெரும்பாணாற்றுப் படை கூறுவது பொருந்தாது என்று உட்கொண்டு, "கரிகாலன் இளமைக் காலத்தே திரையன் காஞ்சியைக் கைப்பற்றி ஆண்டான்" என்று திரு. கனகசபை அவர்களும்[1] "கரிகாலன் காஞ்சியை வென்ற பிறகு அதன் ஆட்சிப் பொறுப்பைத் திரையன்பால் ஒப்புவித்தான்" என்று திருவாளர். P. T. சீனிவாச அய்யங்கார் அவர்களும்[2] அமைதி கூறுவர்.

கரிகாலன் வரலாற்றை, இலக்கியம், கல்வெட்டு முதலாயின கொண்டு ஆராய்ந்து முடிவு செய்த பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள்:—

1. கரிகாலன் வரலாற்றை உரைக்கும் எட்டுத் தொகை போன்ற பழந்தமிழ் நூல்கள் அவன் வடநாட்டு வெற்றியைப் பற்றி விளக்கம் தாராது இருக்கும்போது பட்டினப் பாலையில் கண்ட "வடவர் வாட" என்ற தொடர் ஒன்றே அவன் வடநாட்டு வெற்றியை உறுதி செய்வதாகாது, பழஞ்சான்றுகள் பல மேலும் தேவை;[3]

2. கரிகாலன் வடநாட்டுச் செலவை முதன் முதலாக விளக்கும் சிலப்பதிகாரம், கரிகாலன் காலத்திற்குக் குறைந்தது அரைநூற்றாண்டு பிற்பட்டதாகலானும்,[4] அக்கால எல்லைக்குள் உண்மைக்குப் புறம்பான புனைந்துரைகள் பல அவன் வரலாற்றில் கலந்திருத்தல் கூடுமாதலானும்;[5] அந்நூல், வரலாற்றிற்குப் புறம்பான புனைந்துரை

---

1. The Tamils 1800 Years ago.
2. History of the Tamils: P. 397.
3. Studies sn Chola History and Administration P. 51.
4. " " " P. 49.
5. " " " P. 50.

களையும் தெய்வ சம்பந்தமான கதைகளையும் கூறும் நூல் ஆகலானும்[1] "கரிகாலன் வடநாட்டரசரோடு நட்புப் பூண்டு அவர்கள் அளித்த பரிசுப் பொருள்களைப் பெற்றானே ஒழிய, வடநாட்டில் போர்புரிந்து வெற்றிபெற்றான் என்று கொள்வதற்கில்லை" எனத் திரு. கனகசபை அவர்களும்[2] திரு Dr, S. கிருஷ்ணசாமி அய்யங்காரவர்களும்[3] கூறுவர்; ஆதலின் சிலப்பதிகாரம் கூறும் அவன் வடநாட்டு வெற்றி பற்றிக் கருத்து மாறுபாடுகள் நிலவுவன உண்மை யாதலாலும், சிலப்பதிகாரத்தை வரலாற்று நூலாகக் கொள்வதற்கில்லை. ஆகவே, சிலப்பதிகாரம் கூறும் விளக்கம் ஒன்றையே கொண்டு அவன் வடநாட்டரசரை வென்றான் என்று துணிவதற்கில்லை;[4]

3. கரிகாலன் ஆட்சிக்கு அடங்கியோராகப் பட்டினப்பாலையில் கூறப்பட்ட ஒளியர், அருவாளர், வடவர், குடவர், தென்னவர், பொதுவர், இருங்கோவேள் முதலியோர் வரிசையில் ஒருவராகத் திரையர் என்பார் வைத்துக் கூறப்படவில்லை;[5]

4. கரிகாலனைக் காஞ்சியோடு தொடர்பு படுத்திக் கூறும் விஜயாலயன் வழிவந்த சோழர் கல்வெட்டுக்களும் தெலுங்குச் சோழர் கல்வெட்டுக்களும் காலத்தால் மிக மிகப் பிற்பட்டன;

5. தெலுங்குச் சோழர் கல்வெட்டில் கரிகாலன் பேரர்களாகக் குறிப்பிடப்பட்ட மூவருள் ஒருவனைத் "தொண்டமான்" என்பவன்தான் குறிப்பிடப்பட்டுள்

1. Studies in Chola History and administration. P. 50.
2. The Tamils 1800 Years ago P. 67.
3. Ancsent India. P. 94.
4. Studies in Chola History and administration. P. 50.
5. " " " " P. 50.

ளானே ஒழிய இளந்திரையன் என்பான் குறிப்பிடப்பட வில்லை;[1]

6. பெரும்பாணாற்றுப் படை உரையில், நச்சினார்க் கினியர் கண்டவரலாறும், மணிமேகலை கூறும் வரலாறும் மாறுபடுகின்றன;

7. திரையர்க்கும் சோழர்க்கும் உள்ள தொடர்பு நச்சினார்க்கினியர் கூற்று ஒன்றையே அடிப்படையாகக் கொண்டுளது;

8. நச்சினார்க்கினியரும், நாகப்பட்டினச் சோழன் ஒருவன் என்றுதான் குறிப்பிட்டாரே ஒழிய அவனுக்கும் கரிகாலனுக்கும் உள்ள தொடர்பை விளக்கவில்லை;[2]

9. ஒரு புலவரே, இரு அரசுகளையும் ஒரே காலத்தில் பாடியுள்ளமை நோக்க இரண்டு அரசுகள் வாழ்ந்தன என்பது பெறப்படும். ஆகவே, காஞ்சி, சோழர் ஆட்சிக்கு அடங்கியிருந்ததாகவோ, சோழர் ஆட்சி, காஞ்சிக்கு வடக்கே பரவியிருந்ததாகவோ கொள்வதற்குச் சிறிதும் இடமில்லை என்று கூறுகின்றார்.[3]

"இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச், செரு வெங் காதலிற் றிருமா வளவன்," என்று "சிலப்பதிகாரம் கூறுவதை நோக்க வடநாடு நோக்கிச் செல்வதன்முன் தமிழ்நாட்டில் பகையரசு என்று கூறக் கூடிய நிலையில் ஒருவரையும் விடாது வென்றுவிட்டான்" என்பது தெளி வாகும். சேய்மைக்கண் சென்று வெற்றிபெற விரும்பும் பேர்அரசர்கள் மேற்கொள்ளும் போர்முறையும் இதுவே ஆகும். இளமையிலேயே தாயத்தார் சூழ்ச்சிக்குட்பட்டு

1. Studies in chola History and Administration. P. 54.
2. " " " " P. 46.
3. " " " " P. 56.

வெற்றிபெற்றும், பின்னர் இருபெரு வேந்தரையும், பதினொரு வேளிரையும் வென்று புறங்கண்டும் முதிர்ந்த அரசியல் அறிவும், போர் நுணுக்கமும் கைவரப் பெற்ற கரிகாலன், தனக்கு அண்மையில் தன்னினும் சிறந்தாராக ஒரு மரபினர் ஆள விட்டுவைத்தான் என்பது, அவன் அறிவை அவமதிப்பதாகும்; அஃது அரசர் பண்பும் அன்று. (......it is quite possible that an ambitious Chola monarch made the strength of this arms felt by them. —K. A. Nilakanta sastri; Studies in Chola History And Administration page 38.)

திரையர் என்பவர் தோற்ற அரசர் வரிசையில் இல்லாமை ஒன்றையே கொண்டு, அவர்களை இவன் வென்றானல்லன் என்றும், மாறாக அவர்கள் இவனினும் புகழுடன் இவன் அண்மையிலேயே ஆட்சிபுரிந்துகொண்டு இருந்தனர் என்றும் கூறுவது சிறிதும் பொருந்தாது. ஒளியர், அருவாளர், குடவர், வடவர், தென்னவர், பொதுவர், இருங்கோவேள் என்பாரைப் போலக் காஞ்சியைச் சூழ்ந்த பகுதியில் குறிப்பிடத்தக்க மரபினர் ஆளாமையால், அவர் பெயர், அவன் ஆணைக்கு அடங்கியோர் வரிசையில் தரப்படவில்லை என்று கொள்வதே நேரிதாம். "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலங்களுள்" ஒன்றாகிய அருவாநாடு, காஞ்சியைச் சூழ்ந்த நாடாகும் என்பது அறிஞர் முடிவு. கரிகாலன் ஆணைக்கு அடங்கியோராகக் கூறப்பட்டோருள் "அருவாளர்" என்போரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். "தொல்லருவாளர் தொழில் கேட்ப;" இவர்கள் வாழ்ந்த நாடு அருவா நாடாகும். இதனால், கரிகாலன் காலத்தில், காஞ்சியைச் சூழ்ந்த நாட்டில் தொண்டையரோ, அல்லது திரையரோ தோன்றவில்லை என்பதும், ஆகவே, அப்பகுதி தொண்டைநாடு

என்றோ, திரையர் நாடு என்றோ பெயர்பெறாமல் அருவா நாடு என்ற தன் பழம் பெயரையே பெற்று இருந்தது என்பதும், கரிகாலன் அருவாளரை அடக்கினான் எனவே, காஞ்சியைக் கைப்பற்றினான் என்பதும் விளங்கும்.

காலத்தால் கரிகாலனுக்குப் பிற்பட்டோன் எனக் கருதப்பட்ட[1] குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் புறநானூற்றில்[2] பாடிய புலவர் தாயங்கண்ணனார் "தொண்டையர் என்ற இனத்தார் வேங்கடத்தைச்சார்ந்த பகுதிகளை ஆண்டுவந்தனர்" என அகநானூற்றில் கூறியுள்ளார்.[3] வேங்கட மலையைச் சார்ந்த இடத்தைத் தன் வாழ்இடமாகக் கொண்டவரும்,[4] தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடியுள்ள காரணத்தால், கரிகாற்பெருவளத்தானுக்குப் பிற்பட்டவரும் ஆய கல்லாடனார், போர்த்தொழில் வல்லோராகத் தொண்டையரைக் கூறும் குறிப்பு ஒன்றும் குறுந்தொகையுள் காணப் படுகிறது.[5] காலத்தால் பரணருக்குப் பிற்பட்ட காரணத்

1. அக்கிள்ளி வளவனைப் பாடிய புலவர் அனைவரும், கரிகாலனுக்குப் பிற்பட்டாரையே பாடியிருப்பதும், இக்கிள்ளி வளவனே, மணிமேகலை கூறும் கிள்ளி வளவன் என்பதும், இவனைக் கரிகாலன் மகன் வயிற்றுப் பேரன் என்று திருவாளர் மு. இராகவையங்காரவர்கள் கூறுவதும், ("சேரன் செங்குட்டுவன்" பக்கம். 103) நினைவில் வைக்கற் பாலன.

2. புறநானூறு : 397.

3. "வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் ளருவி வேங்கடம்." —அகம் : 213.

4. "வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
ஈங்குவந் திறுத்தவென் னிரும்பே ரொக்கல்."—புறம்:391.

5. "பொருவார், மண்ணெடுத் துண்ணு மண்ணல் யானை
வண்டேர்த் தொண்டையர்." —குறுந்தொகை : 260.

தால், கரிகாலனுக்கும் பிற்பட்டவராகிய ஔவையாரால் பாடப்பெற்றவனும்,[1] அதியமான் பகைவனும் ஆகிய தொண்டைமான் ஒருவன் பழந்தமிழ் நூல்களில் காணப் பெறுகிறான். இவனையே தொண்டைமான் இளந்திரையன் என்றும் கொள்வர் சிலர்.[2]

வேங்கட மலையையும், அதைச் சார்ந்த நிலப் பரப்பையும் உரிமை பூண்டு ஆண்டுவந்த திரையனைப் பற்றியும், அவனுடைய "பவத்திரி" என்ற ஓர் இடத்தைப்பற்றியும் அகநானூற்றில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவ்வாறு குறிப்பிட்டோருள் ஒருவர், காட்டூர்கிழார் மகனார் கண்ணனார் என்பவர்.[3] (இவரைப் பற்றியோ, இவர் காலத்தைப் பற்றியோ ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. இவருடைய பெயரை நோக்க, இவர் வேங்கடத்தைச் சார்ந்த தொண்டையரை அகத்தில் குறிப்பிட்ட மேற்கூறிய எருக்காட்டூர்த்தாயங்கண்ணனாருக்கு உறவினர்போலத் தோன்றுகிறார்; ஒருவேளை அவர் மகனாகவும் இருத்தல் கூடும்.) மற்றொருவர் நக்கீரர்.[4] நக்கீரர், தலையாலங்கானத்துச்செருவென்றநெடுஞ்செழியனைப் பாடியவராவர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவனுக்கும் காலத்தால் பிற்பட்டவன். ஆகவே, நக்கீரர், கரிகாலனுக்குப் பிற்பட்டவர் என்பது கூறாமலே அமையும். மேலும், நக்கீரர், கிள்ளி வளவனையும் பாடியுள்ளார்.[5] என்பது குறிப்பிடத்

1. புறநானூறு : 95.
2. புறநானூறு பாடினோர், பாடப்பட்டோர் வரலாறு (Dr. உ. வே. சா. பதிப்பு.)
3. "வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை,"—அகம் : 85
4. "செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி." —அகம்: 340.
5. அகம் : 346.

தக்கது. நக்கீரர் இப்பாட்டில் திரையனைக் குறிப்பிடுங்கால், "செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்" எனச் சிறப்பாகவே கூறியிருப்பதாலும், இளந்திரையன் தந்தை என மணிமேகலை கூறும் கிள்ளிவளவனையும் பாடியிருப்பதாலும் நக்கீரர் குறிப்பிடும் இத்திரையன், பெரும்பாணாற்றுப்படை கூறும் திரையனே என்று ஐயங்கொள்ளவும் கூடும்.

இவ்வாறு, கரிகாலன் காலத்திற்குப்பின், தொண்டையர் என்ற மரபினரும், தொண்டைமான் என்ற அம்மரபு அரசன் ஒருவனும், திரையனும் இருந்தனராக அறிவதன்றி, அவன் காலத்திற்குமுன் இருந்தனராகக் காட்டக் கூடிய சான்றுகள் ஒன்றும் கிடைத்தில. "வடவர் வாட" என்ற தொடரோடு, வடநாட்டு வெற்றிவிளக்கம், சிலப்பதிகாரத்து அளிக்கப்பட்டிருப்பவும், பின்சான்று ஏற்கத்தக்கதல்ல என்று கழித்துவிட்டு முன்னது ஒன்றையே கொண்டு கரிகாலன் வடநாடு சென்றான் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது; பழஞ்சான்று பல மேலும் தேவை எனக் கூறும் இவர், திரையர் என்பார், கரிகாலனுக்குமுன் தொண்டைநாட்டில் இருந்தனர் என்பதற்குரிய சான்று ஒன்றும் காட்டாது, அவர்கள் இருந்தனரா என்பதை அறிவதற்கும் முயலாது, அவர்கள் இருந்தனராக எண்ணிக்கொண்டு, அவர்கள் பெயர், தோற்ற அரசர் பட்டியில் இல்லாமை ஒன்றையே கொண்டு, காஞ்சி கரிகாலன் ஆட்சிக்குட்படாது, தனிப்பேர் அரசின்கீழ் இருந்தது என்று கூறுவது சிறிதும் பொருந்தாது; நிற்க.

காஞ்சியும், வடநாடும் கரிகாலன் படை ஆற்றலை உணர்ந்துள்ளன என்பதற்கு இத்துணைச் சான்றுகள் இருப்பவும், அவற்றை எல்லாம் நோக்காது, "காஞ்சி தனித்திருந்தது" எனப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி

யார் கூறுவதற்கும், "கரிகாலன் இளமைக்காலத்தில், திரையன் காஞ்சியைக் கைப்பற்றிக்கொண்டான்" எனத் திரு. கனகசபை அவர்களும், "கரிகாலன் காஞ்சியை வென்று அதன் ஆட்சிப்பொறுப்பைத் திரையன்பால் ஒப்புவித்தான்" எனத் திரு. P. T. சீனிவாச அய்யங்காரவர்களும், அமைதி கூறுவதற்கும் காரணமாய் விளங்குவது, பட்டினப்பாலை பாடிக் கரிகாலனைப் பாராட்டிய கடியலூர் உருத்திரங்கண்ணனாரே பெரும்பாணாற்றுப் படை பாடி, இளந்திரையனையும் பாராட்டி இருப்பதே ஆகும். இருவரையும், ஒரே புலவர் பாடியுள்ளார்; ஆகவே, இருவரும் சமகால அரசராவர்; இருவரும் பெருமையாகவே பாராட்டப் பெற்றுள்ளனர்; ஆகவே, இருவரும் ஒருவருக்கொருவர் அடங்காது அரசாண்ட பேர் அரசர்களாவர்; ஆகவே, கரிகாலன் காஞ்சியை வென்றிருக்க முடியாது; காஞ்சியைக் கடக்கவில்லை எனவே, அவன் வடநாடு சென்றிருக்கவும் முடியாது; இதுவே சாஸ்திரியாரவர்கள் வாதமாகும்.

பாணர் பாராட்டிய அரசர்களுள், சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, கரிகாலன், வேற்பஃறடக்கை பெருநற் கிள்ளி, குடக்கோ நெடுஞ்சேரலாதன், கடல் பிறக்கோட்டிய வேல்கெழுகுட்டுவன் முதலியோர் சிறந்தோராவர். இவருள், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி கரிகாலன் தந்தை ஆவன்; கடல் பிறக்கோட்டிய வேல்கெழு குட்டுவன், கரிகாலனுக்குப் பிற்பட்டோனாகிய, திருவாளர் மு. இராகவையங்காரவர்களால் கரிகாலன் மகன் எனக் கருதப்பட்டோனாகிய, மணக்கிள்ளியின் மகள் வயிற்றுப் பிறந்தோனாவன். ஆகவே, இவர்களைத் தலைமுறையாக வரிசைப்படுத்தினால், உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி, அவன் மகன் கரிகாலன், அவன்

மகன் மணக்கிள்ளி, அவன் மகள் நற்சோணை, அவள் மகன் செங்குட்டுவன் என ஐந்து தலைமுறையினராகக் காணலாம். பரணர், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியையும் பாடிச், செங்குட்டுவனையும் பாடினர் என்றால், அவர் ஐந்து தலைமுறைக்கு மேலும் வாழ்ந்தவராவர் என்று பெறப்படும். ஐந்து தலைமுறை அரசர்களையும் ஒரே புலவர் பாட முடிந்தது என்பதைக் காணும்போது, ஒரே புலவர் இருவரைப் பாடினர் என்ற ஒன்றையே கொண்டு, இருவரையும் வேறு வேறு காலத்தவராகக் கொள்ளாது சமகாலத்தவராகக் கொள்வது ஏனோ? முன்னும் பின்னுமாக வாழ்ந்த அரசர்களே ஆவர் கரிகாலனும் இளந்திரையனும் என்று கொள்வதில் இழுக்கு ஒன்றும் இன்று.

கரிகாலனுக்குப் பிற்பட்ட காலத்தே தொண்டையோரும், தொண்டைமானும், திரையனும் இருந்தனர் என்பதற்குச் சான்றுகள் கிடைப்பதைப்போல அவனுக்கு முன் இருந்தனராகக் காட்டக்கூடிய சான்று ஒன்றும் கிடைக்காமையானும், கரிகாலன் பகையரசர் வரிசையில் திரையர் இடம்பெறாமையானும், காஞ்சியைச் சூழ்ந்த நிலமாகிய அருவாநாட்டார் இடம்பெற்றுள்ளமையானும், கரிகாலன் வடநாடுவரை சென்றான் என்பதற்குச் சான்றுகள் பல உண்மையானும், கரிகாலனைப் பாடிப் பதினாறு நூறாயிரம் பொன்பரிசுபெற்ற புலவரே பேரரசனாகவிளங்கும், தனக்குப் பரிசு அளித்த கரிகாலன் கண்முன்னரே அவனுக்கு அண்மையில் வாழ்ந்த திரையனை, அவனினும் மேம்பட்டோன் என்று பாடினர் என்பது புலவர்ப் பண்பிற்கே இழுக்காம் ஆதலானும், அன்றித், திரையனை முன்னர்ப் பாடிக் கரிகாலனைப் பின்னர்ப் பாடினர் என்றால், தன்னினும் மிக்கோனாக ஒருவனைப் பாடிய வாயால், தன்னையும்

பாடிய புலவன் ஒருவனுக்குப் பரிசாகப் பெருந்தொகை யளிக்கும் சிறுமதியுடையானல்லன் கரிகாலன்[1] ஆதலானும், கரிகாலன் காலத்தில் தொண்டையரோ, திரையரோ இல்லை எனவும், அவனுக்குப் பின்னரே தோன்றினர் எனவும்,[2] உருத்திரங்கண்ணனார், கரிகாலனைப்பாடி அவனுக்குப் பின்னும் உயிர் வாழ்ந்து, அவனுக்குப்பின் காஞ்சியை ஆண்ட இளந்திரையனையும் பாடினார் எனவும் கொள்வதே பொருத்தமும், மேற்கூறிய தடைகளைப்போக்கும் வழியுமாகும். டாக்டர். S. கிருஷ்ணசாமி அய்யங்காரவர்களும் இளந்திரையனைக் கரிகாலன் பேரனாகக்கொண்டு "புலவர் உருத்திரங்கண்ணனார், மறுதலைமுறைவரை வாழ்ந்து, வேறு ஒரு புரவலன் காஞ்சித் தொண்டைமான் இளந்திரையனைப் பாடும்பேறு பெற்றிருந்தார்"[3] என்று இதே கொள்கையை வலியுறுத்துவர்.

கரிகாலன் காலத்தில் காஞ்சியில் திரையர் வாழ்ந்தனரா இல்லையா? வாழ்ந்திருப்பின் கரிகாலன் அவர்களை வென்றானா இல்லையா? என்பதுதான் இங்கு ஆராயப்படுவது. ஆகவே, அவர்க்கும் சோழர்க்கும் உள்ள உறவுமுறை பற்றிய கருத்து மாறுபாடுகளோ அல்லது அவர்கள் வரலாறுபற்றி நச்சினார்க்கினியர் கூற்றிற்கும் மணிமேகலைப் பகுதிக்கும் உள்ள முரண்பாடு பற்றியோ இங்குக் கவலைகொள்வது வேண்டுவதில்லை.

---

1. பகைவன் நலங்கிள்ளியிடமிருந்து தன்னூர்ப்புக்கான் என்பதற்காகவே இளந்தத்தன் என்ற புலவனை ஒற்றன் எனக்கருதிக் கொல்லப்புகுந்தான், நெடுங்கிள்ளி (புறம். 47) என்ற செய்தி அரசர் பண்பு எத்தகையது என்பதை விளக்குவது காண்க.

2. மணிமேகலையும், கரிகாலன் காலத்துக்குப் பிறகே திரையர் தோற்றத்தைக் கூறுவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

3. Ancient India P. 94.

பேராசிரியர் நீலகண்டசாஸ்திரியார் அவர்கள் கொள்கைப்படி கரிகாலனுக்கு ஆயிரம் ஆண்டுகள் பிற்பட்டவரும், வரலாற்றோடு ஒரு சிறிதும் ஒத்துவாராத பல செய்திகளை மூலப்பகுதியில் அவை பற்றிய குறிப்பே இல்லாதுபோயினும் தாம் எழுதும் உரைப்பகுதியில் எவ்வாறேனும் புகுத்திவிடும் இயல்பினரும் ஆகிய நச்சினார்க்கினியர் கூறும் "கரிகாலன் தாய் அழுந்தூர்வேள்மகள்" என்ற செய்தியை ஏற்றுக்கொள்ளும் இவர், கரிகாலனுக்கு அரை நூற்றாண்டே பிற்பட்டவரும், தாம் எழுதப் புகுந்த இலக்கியமரபிற்கும் காலநிலைமைக்கும் ஏற்ப உண்மை வரலாற்று நிகழ்ச்சிகளோடு சில புனைந்துரைகளையும், அவ்வரலாற்று நிகழ்ச்சிக்கு ஒரு சிறிதும் முரண்படாவகையில் கூட்டிக்கூறும் இயல்பினரும் ஆகிய இளங்கோவடிகள் எழுத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பது வியப்பே.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தோராகிய திருஞானசம்பந்தர், கரிகாலனைக் காஞ்சி ஏகம்பவாணனைப் பரவிய பாக்களுள் வைத்துப் பாடியுள்ளமையால், கரிகாலன் காஞ்சியோடு தொடர்புடையனவன் என்பது மேலும் உறுதியாதல் காண்க.[1]

" இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச், செருவெங் காதலிற் றிருமா வளவன்....புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள் " எனப் போரை விரும்பியே வடநாடு சென்றான் கரிகாலன் எனத் தெளிவாகக் கூறியதோடு "வச்சிர நன்னாட்டுக் கோன் இறை(யாகக்) கொடுத்த கொற்

1. " விண்ணுளார் மறைகள் வேதம் விரித்தோதுவார்,
கண்ணுளார் கழலின் வெல்வார் கரிகாலனை
நண்ணுவார் எழில்கொள் கச்சிநகர் ஏகம்பத்து
அண்ணலார் ஆடுகின்ற அலங்காரமே"
—2-ம் திருமுறை : 12 : திருக்கச்சி ஏகம்பம் : 7-வது பாடல்.

றப்பந்தரும்" எனவும், "மகதநன் ஞட்டு வாள்வாய் வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்" எனவும் அவர்களை வென்று அவர்கள் இறையாகத் தந்தவற்றைப் பெற்று மீண்டான் எனச் சிலப்பதிகாரம் கூறுவதால், "கரிகாலன் வடநாட்டரசரோடு நட்புப்பூண்டு அவர்கள் அளித்த பரிசுப்பொருள்களைப் பெற்றுனேஒழிய வட நாட்டில் போர்புரிந்து வெற்றிபெற்றுன் என்று கொள்வ தற்கில்லை" எனத் திரு. கனகசபை அவர்களும் பிறரும் கூறியது பொருந்தாது.

"வச்சிரநாடு என்பது சோணை (Son) நதிசூழ்ந்த தேசமாகும். அதனை அடுத்துள்ளதே மகத நாடு. இது கங்கையடுத்த பிரதேசமென்பது தெரிந்ததே. அவ்விரு நாட்டரசரையும் வென்றபின்பே அவந்திவேந்தனிடம் நட்பு முறையில் அவ்வளவன் சென்றவன் என்று இளங் கோவடிகள் குறிப்பிடுகிறுர். இவற்றுல் வச்சிர மகத நாடு களை அடுத்து அவற்றின் வடபக்கத்திலுள்ள இமயப் பகுதியே சோழன் தன் அடையாளத்தை நாட்டிய இட மென்பது நன்கு விளங்கும்.

"இவ்வாறு இமயப் படையெடுப்பு, சோழன் தலைமை யின்கீழ்த் தமிழரசரால் ஒரு காலத்து நிகழ்ந்தது என்ற வரலாற்றைப் புதியதாகத் தெரியவரும் அரியசெய்தி யொன்றும் ஆதரித்து நிற்பதை இனிக்கூறுவேன். மேலே நான் கூறியவற்றையெல்லாம் ஒருசேரக்கொண்டு நோக்கு மிடத்து, திருமாவளவன் சென்றுவந்த இமயமலை இப் போது ஸிக்கிம், புட்டான் என்ற இராஜ்யங்களுக்கு இடை யிலுள்ள மலைப்பகுதியேயாதல் வேண்டும். என்னெனில், இப்பகுதியிற்றுன் வங்காளத்துள்ள டார்ஜீலிங்கிலிருந்து திபெத்துக்குச் செல்லும் கணவாய்கள் உள்ளன. இக்கண வாய்களிற் சில முற்காலத்தும் இக்காலத்தும் வியாபாரப்

போக்குவரத்துக்குரியனவாய் அமைந்தனவாகும். இவை களும் பலமாதங்கள்வரை பனிமூடப்பெற்று அடைபட்டுக் கிடத்தலால் சில காலங்களே அப்போக்குவரத்துக்கு ஏற்ற வாகின்றன....வங்காள மாகாணத்தில் அடங்கியுள்ள வச்சிர மகத நாடுகளுக்கு வெகுதூரமில்லாததாய், இமயத்தைக் கடந்து செல்வதற்கு ஏற்ற வழியுடைய பிரதேசங்களுள் ஸிக்கிம், புட்டான்களுக்கு இடையிலுள்ள கணவாய்களே சிறந்தவை. ஸிக்கிம் ராஜ்யத்துக்குக் கிழக்கே, அதற்கும் திபெத்துக்குமுள்ள எல்லையை வரையறுத்து நிற்கும் மலைத் தொடரானது செங்குத்தாய் ஆகாசத்தை அளாவிக் கொண்டு பெருங் கோட்டைமதில்போல் நீண்டு செல்கின்றது. இம்மலைத்தொடரை அடுத்துச் செல்லும் கணவாய் சமுத்திர மட்டத்துக்குமேல் 14,500 அடி உயரமுடையதாய், திபெத் பிரதேசமாகிய சும்பிப் பள்ளத்தாக்கிற்குக் கொண்டுபோய்விடக்கூடியது. இம்மலைக்கும், இதனையடுத்த கணவாய்க்கும் வழங்கும் பெயர்கள் கவனிக்கத்தக்கன. சோழ மலைத்தொடர் (Chola Range) சோழர் கணவாய் (Chola Pass) என்பன, அவற்றிற்கு இன்றும் வழங்கி வரும் நாமங்களாகும். (a) Imperial gazetteer of India: Sikkim: Vol. 10: page 327; Vol. 22: page 365. (b) Hand gazetteer of India: Chola Pass. (c) Encyclopaedia Britannica: Sikkim Vol 5: P. 667, Vol. 20. P. 640.)மேற் கூறியவற்றைக் கொண்டு நோக்குமிடத்து இமயப்பகுதி யொன்றற்கு வழங்கும் இப்பெயர், சோழன் தொடர்புபற்றி வந்ததாகக் கூடாதோ என்பதே என் ஆராய்ச்சி. இம்மலையடியாகவே இதனையடுத்துள்ள கணவாயும் அப்பெயர் பெற்றதாகவேண்டும். 'சோல' (Chola) என்பதற்கு ஸிக்கிம் திபெத் பாஷைகளில் வேறுபொருள் இருப்பதாகத் தெரியவில்லை; "லா" என்பதற்குத் திபெத்

பாஷையில் கணவாய் என்ற பொருள் உண்டு. நது-லா (Natu-la) ஜெலப்-லா (Jelap-la) எனக் காண்க. ஆனல், "சோல" (Chola) என்பது அவ்வாறு இரு சொல்லுடைய தன்றி, ஒரு சொல்லாகவே மலைக்கு வழங்கி வருவதும், அச்சொற்கு வேறு பொருள் காணுமையும் நோக்கத் தக்கன. அதனல், திருமாவளவன், அப்பிரதேசத்தைக் கைப்பற்றி ஆண்டுள்ள மலைச்சிகரத்தில் தன் புலிப்பொறியை நாட்டி அங்கே தன்னுணையை நிறுவிய காலமுதலே, அம் மலை அவ்வாறு பெயர் பெற்றது போலும் என்று கருத இடம் தருகிறது இமயத்துக்கப்பாலும் அவ்வளவன் செல்லக் கருதியிருந்ததை அம்மலை தடுத்துவிட்டதாக இளங்கோவடிகள் குறிப்பிட்டதற்கு, மேற்குறித்தபடி அச்சோழன் சென்ற காலத்தே பனியால் முழுதும் மூடப் பட்டு அக்கணவாய் அடைபட்டிருந்தது என்பதே கருத்துப்போலும்"[1] என்று திரு. மு. இராகவையங்கார வர்கள் அறிந்து கூறிய பகுதியாலும கரிகாலன் வட நாட்டுச் செலவு உறுதி செய்யப்படுதல் காண்க.

இதுகாறும் கூறியவாற்ருன், கரிகாலன், காஞ்சியைச் சூழ்ந்த நாடுகள் உட்படத் தமிழ்நாடு அனைத்தையும் வென்ருன் என்பதும், அவன் காலத்தில் தொண்டை யோரும், திரையரும் தோன்றவில்லை என்பதும், அவனுக் குப்பின் தோன்றிய அவர்கள் அவனுக்குப் பிறகு காஞ்சியைச் சூழ்ந்த நாட்டை ஆண்டனர் என்பதும், தமிழ்நாடு முழுதும் வெற்றிகொண்ட கரிகாலன், வடநாடு சென்று ஆங்குச் சில அரசர்களை வென்று பெரும் பொருள் கைப்பற்றி மீண்டான் என்பதும் உறுதி செய்யப்பட்டன.

---

1. கலைமகள்: (1932) Vol. 1. P. 62, 63.

# 8. கரிகாலனும் காவிரியும்

கரிகாலன், காவிரிக்குக் கரைகட்டி அணை அமைத்த வரலாறு, கரிகாலன் வரலாற்றை ஆராய்வார் அறிவிற்குத் தெளிவு அடையாத நிகழ்ச்சியாகவே உளது. கரிகாலன் கரை அமைத்த வரலாறு, அவனைப் பாராட்டிய பழம் பெரும்புலவர் ஒருவரானும் குறிப்பிடப்படவில்லை. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தெலுங்குச் சோழ அரசன் புண்யகுமாரனுடைய மாலேபாடு செப் பேடுகள்தாம் (The Malepadu plates of Punyakumara) கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்த வரலாற்றை முதன் முதலாகக் குறிப்பிடுகின்றன. அவற்றைத் தொடர்ந்து விஜயாலயன் வழிவந்த முதலாம் இராஜேந்திரனுடைய (கி. பி. 1012—1044) திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், "லார்ஜர் லெய்டன்" குழுவைச் சேர்ந்த செப்பேடுகளும், (The larger Leyden grant. V. II), விக்கிரமசோழன் உலாவும்[1] அவன் காவிரிக்குக் கரைஅமைத்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றன: கூறப்பட்ட சான்றுகள் அனைத்தும் காவிரிக்குக் கரை அமைத்தான் கரிகாலன் என்றுதான் குறிப்பிடுகின்றன; அமைத்த வழிமுறைகளைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை.

கரிகாலன், தன் பகையரசர் துணைகொண்டே கரை கட்டினான் என்று முதல்முதல்கூறிய சான்று, வீர ராஜேந்திரனுடைய (1064—69) கன்னியாகுமரிக் கல் வெட்டுக்களே ஆகும். அவையும், "பகையரசர் துணை கொண்டு," எனப் பொதுப்படையாகத்தான் குறிப்பிடு கின்றன. பிறவிளக்கம் ஒன்றும் தரவில்லை.

---

1. "தெள்ளருவிச்
   சென்னிப் புலியே யிருத்திக் கிரிதிரித்துப்
   பொன்னிக் கரைகண்ட பூபதி"—விக்கிரமசோழன் உலா: 24-26

குலோத்துங்கச் சோழன் உலா, கரிகாலன் தோற்ற பகைமன்னர் துணைகொண்டே காவிரிக்குக் கரை கட்டினான் எனவும், அவ்வாறு கட்ட வாராத மன்னன் ஒருவன் கண்ணைப் போக்கினான் எனவும் குறிப்பிடுகிறது[1] இங்கும் வாராதான் யார்? அவன் கண்ணைப் போக்கிய முறை யாது? என்ற விளக்கங்கள் தரப்பெறவில்லை.

கலிங்கத்துப் பரணி, பகைமன்னர் துணைகொண்டு கரை அமைத்தான் என்று கூறுவதோடு, அவ்வாறு வாராதான் "முகரி" என்பவன் எனவும், அவன்உருவைப் படத்தில் எழுதிநோக்க, அதில் அவனுக்கு மூன்றுகண் இருப்பது கண்டு, இதுவே அவன் வாராமைக்குக் காரணமாகும் என்று கொண்டு படத்தில்உள்ள அம் மிகைக் கண்ணை அழிக்க, அவனுடைய உண்மைக்கண் போயிற்று எனவும் கூறுகிறது.[2]

---

1. "தலையேறு
மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதான்
கண்கொண்ட சென்னிக் கரிகாலன்',—குலோத்துங்கச்
சோழனுலா: 34-36.

2. "தொழுது மன்னரே கரைசெய் பொன்னியில்
தொடர வந்திடா முகரியைப் படத்
தெழுது கென்று கண்டு இது மிகைக்கண் என்று
இங்க ழிக்கவே அங்கழிந்ததும்"—கலிங்கத்துப்பரணி: 184

"மன்னர்களே கட்டத்தொடங்கிய காவிரிக்கரை அமைப்போடு தொடர்ந்து வராத முகரியைப் படத்தில் எழுதி நோக்கி அவ்வாறு அது தொடரவாராமைக்குக் காரணம் அப்பகுதியில் உள்ள மூன்று கண்களில் ஒருகண் (அணைகளின்கீழ் நீர்போகும் வழிக்குக் கண் என்பது பெயர்.) மிகுதியாக இருப்பதே என்று அறிந்து அம்மிகைக் கண்ணைக் கரிகாலன் படத்தில் அழிக்க, அங்கு-முகரியில்-அம் மிகைக்கண் அழிக்கப்பட்டது," என்று பொருள் கூறுவர் திருவாளர் கனகசபை அவர்கள். —Indian Antiquary, Vol XIX. P. 331.

குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்[1], "முழுகுல நதிக் கரசர் முடிகொடு வகுத்தகரை முகில்தொட அமைத்ததறி வோம்," எனப் பகையரசர் துணைகொண்டு காவிரிக்குக் கரை அமைத்த வரலாற்றைத் தனியாகக் கூறி, அதன்பின் "இருபுறமுமொக்க நினதொரு புலிபொறிக்க வடஇமகிரி திரித்ததறிவோம்," என இமயம் வென்ற நிகழ்ச்சியை இடையில் குறிப்பிட்டு இறுதியாக, "இகல் முகரி முக் கணினுமொரு கணிழியக் கிழியில் எழுதுகண் அழித்ததறி வோம்," என முகரியின்கண் அழித்த வரலாற்றை வேறாக வும் குறிப்பிடுகிறது. பரணியும், பிள்ளைத்தமிழும் முகரியைப் படத்தெழுதி அதில்கண்ட மிக்க கண்ணை அழித்ததால் முகரியின்கண் அழிந்தது என்றே கூறு கின்றன. இங்கும் திரிநயனப்பல்லவன் பெயர் குறிப் பிடப் பெறவில்லை.

திருவாளர் T. G. ஆராவமுதன் அவர்கள் முகரியை வடநாட்டில் அரசாண்டுவந்த மௌகரி மரபு மன்னர் களோடு தொடர்புபடுத்திக் கரிகாலன் வடநாட்டு யாத்திரையின்போது, அம்மரபு அரசன் ஒருவனை வென் றிருத்தல் கூடும் என்பர்.[2] தங்கள் பெயர்களைத்தொடர்ந்து "வர்மன்" என்பதைச் சேர்த்து வழங்குபவரும், குப்தப் பேர் அரசிற்குப்பின் "மகதநாட்டுப் பிற்கால குப்தர்கள்" (The Later Guptas of Magadha) என்பவர்களோடு மகத நாட்டை ஆண்டுவந்தவரும், கி. பி. ஆறும் நூற்றுண்டினரும் ஆகிய "மவுகரி" என்ற மரபினர் வடநாட்டுவரலாற்றால் அறியப்படுகின்றனர்.[3]

---

1. குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் : 53.
2. The Kaveri, the Maukharis and the Sangam Age.
3. V. A. Smith, Early History of India. P. 294.

"நவ சோழ சரிதம்" என்ற தெலுங்கு வீரசைவ நூல் ஒன்று, ஒருநாள் கரிகாலன் காவிரி ஆற்றை அடுத்த காட்டில் வேட்டையாடிக், களையாறச் சிறிது நேரம் காவிரிக் கரையில் தங்கினான்; அப்போழ்து, காவிரியின் இருமருங்கும் கரை அமைத்து நீரைத் தேக்கினால், சோழநாட்டு வளம்பெருகும் என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று; உடனே தன் ஆணைக்கடங்கிய அரசர் அனைவரையும் காவிரிக்குக் கரை அமைக்குமாறு பணித்தான்; முக்கண்டி சோழன், பாஸ்கரசோழன் என்ற இருவர் நீங்க, ஏனையரசர் அனைவரும் பணியை ஏற்று நடத்தினர்; வாராத அவ்விருவர்மீது, கரிகாலன் படையொடு சென்று, அவர்களை வென்று, கைப்பற்றிக் கொணர்ந்து, கரை அமைப்பு வேலை முடியும்வரை தொழிலாற்றச் செய்தான் என்ற வரலாற்றைக் கூறுகிறது.

தெலுங்குச் செப்பேடுகளும், கல்வெட்டுக்களும், கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்தான் எனவும், திரிநேத்திரபல்லவன், கரிகாலன்காலத்தில் வாழ்ந்து, அவனால் கண்ணிழக்கப் பெற்றான் என்றும் குறிப்பிடுகின்றன.[1]

மகாவம்சம் என்ற இலங்கை வரலாற்றுத் தொகுப்பு நூல், கரிகாலன், இலங்கைமீது படையெடுத்துச் சென்று, ஆங்குப் போரில் தோற்ற பல ஆயிரம் வீரர்களைக் கைப்பற்றிக் கொணர்ந்து, அவர்களைக் கொண்டு காவிரிக்குக் கரை அமைத்தான் எனவும், இலங்கை அரசன் கயவாகு,

---

1. சரண - சரோருஹ - விகத - விலோசன - பல்லவ திரிலோசன பிரமுகாகில - பிரிதிவீஸ்வர - காரித காவேரி தீர கரிகால"—

இதன் பொருள்: "தாமரை மலர்போன்ற தன் தாள்களால், கண் அழியப்பெற்ற பல்லவ திரிலோசனனைத் தலைமையாகக் கொண்ட பகைமன்னர்களால் காவிரியின் கரை அமைத்த கரிகாலன்" என்பது.

நள்ளிருள் யாமத்து நகர்சோதனை செய்துவருகின்ற போது நரைத்த முதுமகள் ஒருத்தி பெருங்குரற் பாய்ச்சி அழக்கண்டு, அன்னவள் இன்னலுக்கு ஏது, பன்னெடு நாளைக்கு முன்னர்ப் படையெடுத்துப் போந்த கரிகால் வளவன், சிங்களக்குடிகள் பலவற்றைச் சிறைப்படுத்திச் சென்ற ஞான்று தன் குடிக்கு ஒரு மகனையும், தான் கொண்டு போயினமையே எனக் கேட்டுச் சோணாட்டின் மீது படையெடுத்து வந்து தன் நகர்க்குடிகளைச் சிறையி னின்றும் விடுவித்தனன் என்றும் கூறுகிறது.[1] "இராஜ ரத்னாகரி" என்ற நூல், காவிரியில் கரை அமைக்க இலங்கைவீரர்கள் தாங்களாகவே விரும்பிச் சென்றனர் என்று கூறுகிறது.

'முகரி' என்பது அரசன் ஒருவன் பெயராக வேண்டு மென்றும், அவன் பெயரால் முகரி என்ற ஊர் உண்டா யிற்றென்றும், அரும்பத விளக்கத்து எழுதியவாறு கருது தற்கு ஆதாரம் குறிக்கப்படாமையால், அங்ஙனமே துணியக்கூடவில்லை. இங்ஙனமன்றி, வங்காளப் பிரதேசத் தில் ஆட்சிபுரிந்த மௌகரிகள் என்ற அரச வகுப்பின ருள் ஒருவனைக் குறிப்பதாகக் கருதுவதும் ஏற்புடைத் தன்று....சயங்கொண்டாரும், கூத்தரும் தங்காலத்துச் சாசனங் கூறும் வரலாறுகளைத் தழுவியே பாடுதலும், அச்சாசனத்துக் கண்ட திரிலோசனனையே, திரிநேத்திர பல்லவன் என்று மற்றொரு சுலோகம் வழங்குதலும் மேலே தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அதனால், அப் பகையரசன் பல்லவ மரபினன் என்று அறியக் கிடத்த லின், மௌகரிய மரபுடன் அவனை இணைப்பதற்குச் சிறிதும் இடமில்லை. முகரி எனத் தமிழ்விகுதி பெற்ற வடசொல் 'ஆரவாரிப்போன்' என்ற பொருளுடையதாம்.

1. Upham'sh Maha - Vamsam Vol I P. 228.

முகரம் : ஆரவாரம்; "முகர மிக்க வீறொடு" என்பது இரகு வம்சம். (இரகு வுற்பத்தி. 23) அஃது ஈண்டுத் தம்மானை கூறி ஆரவாரிக்கும் குறும்பரசனைக் குறிக்கும்" என்று கூறி, அச்சொல் அப்பொருட்டாதலை விளக்க, திருநாவுக்கரசர், குறும்பு செய்யும் பஞ்சேந்திரியங்களை "மூள்வாய தொழிற் பஞ்சேந்திரிய வஞ்ச முகரிகாள்" என அழைப்பதை மேற்கோள் காட்டி, "தொடரவந்திலாமுகரி" என்பதில் காணும் முகரி என்ற சொல்லும் இதே பொருளை உடையதாகும் என்று கூறி, சயங்கொண்டாரும், கூத்தரும் குறித்தது, திரிலோசனனையே என்று முடிப்பர் திருவாளர் மு. இராகவையங்காரவர்கள்.[1]

திரு. L. உலகநாத பிள்ளையவர்கள், "இந்த நதி (காவிரி) எந்தஎந்த ஊர் வழியாகச் செல்கின்றதோ, அந்த அந்தஊர் அரசர்க்கெல்லாம் கரைகட்டுவதற்குத் திருமுகம் விடுத்துப் பங்கு அளந்து கொடுக்க உத்தரவு செய்தான். இவ்வாறு அளந்துகொடுக்கப் பட்டவர்களுள் 'பிரதாபருத்திரன்' என ஓர் அரசனும் இருந்தான்," என்று கூறிப் பிறகு பழைய கதைகளையே கூறுவர்.[2] இவ்வாறு கூறுவதற்கான சான்று ஒன்றும் காட்டினாரல்லர்.

திருவாளர் கிருஷ்ணசாமி சாஸ்திரியாரவர்கள்,[3] திரிநயனப்பல்லவன் என்றசொல், திரிலோசனப்பல்லவன், முக்கண்டிபல்லவன், முக்கண்டி காடுவெட்டி என்ற சொற்களின் பொருளோடு ஒற்றுமை உடையசொல் என்றும்; திரிலோசனன், வரலாற்றிற்கு அப்பாற்பட்ட (Mythical) பல்லவனவன்; இவன், சாளுக்கிய விஜயாதித்தன் தலைமையின்கீழ், சளுக்கியர்கள் தென்னாடு வருவதற்குமுன்,

1. செந்தமிழ் தொகுதி: 23 "கலிங்கத்துப்பரணிக்" குறிப்புக்கள்
2. கரிகாற் பெருவளத்தான்: பக்கம் 45, 46.
3. Epigraphia India Vol X P. 58 N. 2.

தெலுங்குநாட்டை ஆண்டவன்; கீழைச் சாளுக்கியர் செப்பேடுகளில் இவன் தென்னாடு நோக்கிவந்த விஜயாதித்தனை எதிர்த்து நின்றவனாகக் குறிப்பிடப்பட்டுள்ளான்; தெலுங்குக் கல்வெட்டுக்கள், இவனைக் கரிகாற்சோழனுக்கு அடங்கியவனாகக் குறிப்பிடுகின்றன என்றும்; திருவாளர் வெங்கய்யா அவர்கள் கரிகாலன்காலம் ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் என்பர்; கீழைச் சாளுக்கியர் செப்பேடுகளை நோக்கினால், விஜயாதித்தனுக்கும் கீழைச் சளுக்கிய அரசைத் தோற்றுவித்த குப்தவிஷ்ணுவர்த்தனனுக்கும் இடையில் ஐந்து தலைமுறை நிலவியதாகத் தெரிகிறது. விஷ்ணுவர்த்தனன், கீழைச்சளுக்கியர் அரசைத் தோற்றுவித்த ஆண்டு கி. பி. 615 ஆகும். இம்முறையே நோக்கினால் விஜயாதித்தன் காலமும், ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிக் காலமாதல் தெளிவாம். ஆகவே, விஜயாதித்தன், திரிநயனப்பல்லவன், கரிகாலன் மூவரும் ஒரே காலத்தவராதல் தெளிவாம் என்றும்;[1] ஐந்தாம் நூற்றாண்டில் பல்லவர் வரலாறு நன்கு உணர்ந்துகொள்ளமுடியாத நிலையில் உளது என்றாலும், கரிகாலன் பல்லவரை வென்று அடிப்படுத்தியிருத்தல் கூடும் என்றும்; திரிலோசனப் பல்லவன், ஈஸ்வர வம்சத்தைச் சார்ந்தவன் என்பது, ஏமவதிச் செப்பேட்டில் தவிர (Hemavati Record) பிறயாண்டும் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறுவர்.

திருவாளர் K. V. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள்,[2] "திரிலோசன பல்லவன், கரிகாலன், விஜயாதித்தன் ஆகிய இருவருடைய கூட்டு முன்னணியை எதிர்க்கவேண்டியிருந்தது எனவும், பிற்கூறப்பட்ட இருவரும், ஒருவகையில் நண்பர்களாய் இருக்கவேண்டும் எனவும், வடநாட்

1. ,, ,, Vol XI P. 340.
2. Indian Antiquary Vol 41 P. 146-47.

டரசர்களுள் சிலர், தம் நாட்டின்மீது படையெடுத்து வரும் பகை அரசர்களுடன், தங்கள் நாட்டு அரசர்களுக்கு எதிராகச் சேர்ந்துகொள்வது வழக்கம் எனவும், இதற்கு வடநாடு நோக்கிச் சென்ற கரிகாலனுக்கு, வஜ்ஜிர, மகத மன்னர்கள் பகைவர்களாய் இருக்கும்போது அவந்தி அரசன் நண்பனாய் இருந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுவது சான்றாகும் எனவும், இதனால், மேலைச் சளுக்கியர் தென்னாட்டில் அடிகோலக் கரிகாலன் துணைசெய்தானாதல் வேண்டும்,'' எனவும் கூறுவர்.

டாக்டர். வெங்கடரமணய்யா அவர்கள், திரிலோசன பல்லவன், கரிகாற்பெருவளத்தான் இருவரும் சமகாலத்தவரே என்பதை உறுதிசெய்யக் கூடிய சான்றுகள் பல உள என்பர்.[1]

1. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தோனாகிய புராண காலப் பல்லவ திரிலோசனன் வரலாறு, பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த கீழைச்சளுக்கிய விமலாதித்தன் செப்பேட்டில், புராணகால நிகழ்ச்சியால் அறியப்படுகிறது ஆதலாலும்,

2. திரிலோசனன், பல்லவர் மரபின் மாறுபட்ட ஈஸ்வர மரபைச் சேர்ந்தோன் என்று கூறப்படுவதாலும்,

3. ஐந்தாம் நூற்றாண்டில் பல்லவர் வரலாறு நன்கு அறியப்படாமல் இருக்கும்போது, கரிகாலன் பல்லவரை அடக்கியிருத்தல் கூடும் என்பதை மட்டும் அறிதல் இயலாது ஆதலாலும்,

4. கீழைச்சளுக்கியர் செப்பேடுகள் வரலாற்றிற்குத் துணைபுரியும் தகுதியுடையனவா என்பதே உறுதிசெய்யப்படாமல் இருப்பதாலும்,

---

1. Studies in Chola History and Administration. P. 61.

5. பதினோராம் நூற்றாண்டு முதல் தெலுங்கு நாட்டில் வாழ்ந்த அரச இனங்கள் பலவும், திரிலோசனன் கதையைப் பலவாறாகத் தம்மோடு தொடர்புபடுத்திக் கூறுவதை வழக்கமாக மேற்கொண்டுள்ளன ஆதலாலும்,

6. இக்கதையைக் கூறும் சான்றுகள் பலவும் காலத்தால் மிகமிகப் பிற்பட்டன ஆதலாலும்,

7. அவற்றுள் பல, திரிலோசனனுக்கும் கரிகாலனுக்கும் உள்ள தொடர்பைக் குறிப்பிடவில்லை ஆதலாலும்,

8. பழந்தமிழ் இலக்கியம் ஒன்றும், கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்ததுபற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை ஆதலாலும்,

9. மகாவம்சத்தின் பழங்குறிப்புக்கள் ஒன்றும், சோழர் படையெடுப்புப்பற்றி ஒன்றும் கூறவில்லை ஆதலாலும்,

10. கரிகாலன் காலம் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆதலாலும், கரிகாலன் காவிரிக்கரை அமைப்பு, கரைகட்டப் பகைமன்னர் பணிக்கப்பெற்றது, வாராத திரிலோசனன் கண்ணை அழித்தது ஆக இவை உண்மை என ஒப்புக்கொள்வதற்கில்லை என்பர் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரவர்கள்.[1]

பழந்தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் எல்லாம் வரலாற்று நூலாசிரியர்கள் (Historians) அல்லர்; அவர்கள் புலவர்களே. அவர்கள் தொழில் எல்லாம், தம்மைப் பேணிய பேர் அரசர்களைக்—குறுநில மன்னர்களைப்—பிறகொடை வள்ளல்களைப் பாராட்டிக் கூறுவதே; அவர் தம் வரலாற்றை வரைவது அல்ல; தங்களைப் பேணியோரைப்

1. Studies in Chola History and Administration P. 59-71.

பாராட்டுங் காலத்தும், அவர்கள் செய்த செயற்கரும் செயல் எல்லாவற்றையும் எடுத்து வகுத்துக்கூறுவதைப் புலவர்கள் வழக்கமாக மேற்கொள்வதிலர். புரவலரைப் பாராட்டுங் காலத்தும், தங்கள் வறுமை, தம்மைப் போன்ற புலவர்களை இரவலர்களைப் புரக்கவேண்டியதன் இன்றியமையாமை, புரவலர் சிலர், தம்மைப்போன்ற புலவர்களைப் பேணியவகை ஆக இவற்றைப் பெரிய அளவில் கூறி, சிறிய அளவில், அப்புரவலர்கள் செய்த செயல் சிலவற்றைக் குறிப்பிடுவதே புலவர் வழக்கமாகும். புறத்துறை தழுவிய பாடல்களில் காணும் முறையிது. அகப்பொருள் தழுவிய பாடல்களாயின், பெரிதும் தாம் எடுத்துக் கொண்ட அகத்துறைப் பொருள் பற்றிய பகுதிகளையே பெரிதும் விளக்கி, இடையிடையே தம்மைப் புரந்த அரசர்களும், அவர்தம் முன்னோர்களும் செய்த சில அரும்பெரும் செயல், அவர்கள் வாழ் ஊர், ஆங்காங்கு நடைபெற்ற வேறு சில நிகழ்ச்சிகள் ஆக இவற்றை உவமையாக அமைத்துச் செல்வர். ஆகவே, பண்டைய வரலாற்றினை ஆராய்ந்து முடிவுசெய்யப் புகுவோர், தங்கள் ஆராய்ச்சியில், பிறசான்றுகளைக் கொண்டு கண்ட முடிவினைப் புலவர்கள் கூற்றுக்களும் அரண்செய்வனவாக இருக்கின்றன என்று கொள்வதல்லது பிறசான்றுகளால் உறுதி செய்யப்பெற்ற ஒன்று, பழந்தமிழ்ப் புலவர்களால் கூறப்படவில்லை, ஆகவே, கொள்ளற்பாலதன்று என்று தள்ளுதல்கூடாது. புலவர்களால் குறிப்பிடப்பட்டவை, அவர்கள் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் சிலவே ஆகும். அவர்களால் குறிப்பிடப்படா நிகழ்ச்சிகள் பல உள்ளன. அவர்களால் கூறப்பட்டவை மட்டுமே அக்காலத்தில் நடைபெற்றன; பிற இல்லை என்று கோடல் கூடாது. புலவர்களால் கூறப்பெறாத பற்பல நிகழ்ச்சிகள் அவர்கள் காலத்

தில் நடைபெற்றிருத்தல் கூடும் என்ற உண்மையை மறத்தல்கூடாது. ஆகவே, பண்டை இலக்கியத்தில் கூறப்படவில்லை; ஆகவே, ஒப்புக்கொள்வதற்கில்லை என்று கூறுவது சரியான ஆராய்ச்சி முறையாகாது. தாம் எழுதும் வரலாற்றிற்குப் பழந்தமிழ் இலக்கியங்களைத் துணைகொள்வோர், இவ்வுண்மையை உள்ளத்திருத்தி ஆராயப்புகுவது, அவர்களை ஆராய்ச்சித்துறையில் உண்மைவழியில் யில் செலுத்துவதற்குத் துணைபுரிவதாகும். ஆகவே, பிற சான்றுகளால் பெறப்படும் உண்மையைப் பழந்தமிழ் இலக்கியச்சான்றுகள் துணைசெய்யவில்லை என்று கூறித் தள்ளிவிடுவது நன்றன்று.

நிற்க. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரவர்கள், திருவாளர், மு. இராகவையங்காரவர்கள் தொகுத்த பெருந்தொகையில் சில செய்யுட்கள் (எண். 778, 779) கரிகாலன் காவிரிக்குக் கரைஅமைத்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றன என்று கூறிவிட்டு, அச்செய்யுட்கள் இன்னரால், இன்னகாலத்தில் இயற்றப்பட்டன என்று அறியமுடியா நிலையில் இருப்பதால், அவற்றைச் சான்றுகளாக ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றும் கூறுவர்.[1]

பழங்காலத்தில் பாடிய புலவர்கள் எல்லோரும், பாட்டின் முடிவில், பாட்டோடு பாட்டாகவோ, அன்றித் தனித்தோ, பாடியவர் இன்னர்; பாடியது இன்னதை; பாடிய காலம் இது என்பனவற்றைக் குறிக்கும் வழக்கத்தை மேற்கொண்டனரல்லர். அவர்கள் பாக்களைத் தனித் தனியாகப் பாடிச்சென்றனர். பின் வந்தோர் அவற்றுள், தங்களுக்குக் கிடைத்த செய்யுட்களை, ஒருவரையின்கீழ்க் கொணர்ந்து தொகுத்து அவற்றை இயற்றி

1. Studies in chola History and Administration. p. 68.

யோர், இயற்றப்பட்ட காலம் ஆக இவற்றைத் தாம் அறிந்த அளவில் குறித்து வைப்பாராயினர். தொகுக்க அவர்கள் மேற்கொண்ட முறை; பாட்டின் பொருள்; பாட்டின் வகை; பாட்டின் அளவு இவையே ஆகும். இவ்வாறு தொகுக்கப் பெற்றவையே, புறமும், அகமும், கலித் தொகையும், நற்றிணையும், குறுந்தொகையுமாம். இவற்றுள் காணப்பெறும் செய்யுட்களைக்கொண்டு, பாடியோர், பாடப்பட்டோர், பாடியகாலம் அறியப்படாமல் இருக்கும் போழ்து, அவற்றின்கீழ், பிற்காலத்தோரால் குறிக்கப் பெற்ற குறிப்புக்களைக்கொண்டே அப்பாட்டை இயற்றி யோர், யார்மீது பாடப்பெற்றது, பாடப்பெற்றகாலம் இவற்றை அறிய முடிகிறது. தொகுக்கப்பெற்ற பாடல்க ளுள்ளும், பாடியோர் பெயர்இல்லாப் பாடல்கள் பல. இவ்வாறு தொகுக்கப்பெற்ற பாடல்களே அல்லாமல், தொகுக்கப்பெறாத பழம்பாடல்கள் பல உள்ளன என் பதை நாம் மறுத்தல்கூடாது. அவற்றுள் பல, உரையா சிரியர்களால் மேற்கோட் செய்யுள்களாக ஆங்காங்குக் காட்டப்பெற்றுள்ளன. சிற்சில, சிலபல அறிஞர்களால் அவ்வப்போது அறியப்பட்டும் வருகின்றன. ஆகவே, அவ்வாறு காணப்பட்ட பாடல்கள் பண்டைக்காலத்தி லேயே தொகுக்கப்பெறாத காரணத்தால் நம்பத்தக்கன அல்ல என்று தள்ளிவிடுதல் கூடாது. அவை, நம் ஆராய்ச் சிக்கு எந்த அளவில் துணைசெய்யும் என்பதை ஆராஎண்ணி மேற்கொள்வதே அறிஞர்கள் கடனும்.

கரிகாலன் காலம் இரண்டாம் நூற்றாண்டே என்பது வரலாற்றாசிரியர் எல்லாராலும் ஒப்ப மேற்கொள்ளப்படு வது இல்லை. அவன் காலம் ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதைப் பல மேற்கோள்களுடன் நிலைநாட்டு வோரும் உளர்.

தெலுங்குக் கல்வெட்டுக்களே அல்லாமல், கரிகாலன் மரபில்வந்த சோழர்களைப்பற்றி அச்சோழர் அவைக்களப் புலவர் பாடிய பாக்களிலும், கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்த வரலாறு குறிப்பிடப்பட்டுளது என்பதையும் நாம் மறத்தல்கூடாது.

கிடைத்த சான்றுகளால் காணப்பட்ட முடிவை, மறுக்கக்கூடிய வேறு நல்ல சான்றுகள் கிடைத்தால் ஒழிய, உள்ள சான்றுகள், காலத்தால் பிற்பட்டவை; தெளிவில்லாதவை என்றுகூறித் தள்ளிவிடுவது ஆராய்ச்சிநெறியாகாது.

இதுகாறும் கூறியவாற்றான், கரிகாலன் காவிரிக்குக் கரைகட்டிய வரலாறு நம்பத்தக்கதல்ல என்பதற்குப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் காட்டிய காரணங்கள் போதியனவுமல்ல; பொருத்தமாவனவுமல்ல என்பது விளக்கப்பட்டது.

பழந்தமிழ்ப் பாக்களின் இயல்பு, கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்த நிகழ்ச்சியைக் கூறும் கல்வெட்டுக்கள், பிறநாட்டு வரலாற்றுக் குறிப்புக்கள், பிற்கால இலக்கியங்கள், ஆசிரியர் பெயர் அறியப்பெறாத பிறபாக்கள், கரிகாலன் காலம் ஆக இவற்றைத் துணைகொண்டு, காவிரிக்குக் கரைகட்டிய நிகழ்ச்சியின் உண்மை இன்மைகளை முடிவுசெய்யும் பொறுப்பை அறிஞர்களே மேற்கொள்வார்களாக.

## 9. புலவர் வரலாறு

கரிகாற் பெருவளத்தான் காலம், தமிழகம் புலவர் பலர் வாழ்ந்து, புகழ்பெற்று விளங்கிய காலமாகும். நாட்டின் தகுதி, அந்நாடு பெற்றிருக்கும் இலக்கிய வளத்தாலேயே எண்ணப்படும். பண்டைத் தமிழ்நாடு இலக்கிய வளத்தில் இணையற்று விளங்கிற்று. புலவர்கள், பொருள் வளத்தைக் கருதாது பொன்றாத கலைவளத்தை வளர்ப்பதில் தம் கருத்தைச் செலுத்தினர். அதன் பயனே, எட்டுத்தொகையும், பத்துப் பாட்டும், பதினெண் கீழ்க் கணக்கும், பிறவும். ஆனால், இப்பெறலரும் கருவூலத்தைப் பேணித்தந்த அப்புலவர்கள் வரலாறுமட்டும் நம்மால் - அவர்கள் இயற்றிய இலக்கிய நயத்தை உணர்ந்து உணர்ந்து மகிழும் நம்மால் - அறிய முடியவில்லை. அவர்களும், இலக்கிய வளர்ச்சியிலேயே கருத்துடையராய் நின்றுவிட்டனரே ஒழிய, தங்கள் வரலாற்றைத் தங்கள் வாயிலாகவே அளிக்கத் தவறிவிட்டனர். அதுமட்டு மன்று; அவர்கள் தங்களைப் புரந்த புரவலர்களைப், பேர் அரசர்களை, குறுநில மன்னர்களைக், கொடைவள்ளல்களைப் பாடி, அவர்களை நமக்கு அறிமுகம் ஆக்கினார்களே ஒழிய, தங்கள் காலத்தில், தம்மோடு வாழ்ந்த தம்மையொத்த புலவர்களை நமக்கு அறிமுகமாக்கத் தவறிவிட்டனர். இதனால் புலவர்களுடைய வரலாறு, நம்மால் அறிய இயலாமற் போனதோடு, அவர்களில் பலருடைய இயற்பெயர் தாமும் அறிய இயலாதுபோயிற்று.

இலக்கியப் பெருவளத்தை நமக்கு அளித்த இப் பெரும் புலவர்களின் வரலாற்றை அறியமறந்த நன்றி கெட்ட தமிழர்கள் இடையே, நன்றிமறவாத் தமிழர் சிலர் இருந்தேவந்தனர். அவர்கள், அப்புலவர்களின் வர

லாற்றை அறியப் பெரிதும் முயன்று; முடியாமற்போகவே' அவர்கள் பெயரையாவது அறிந்து அறிவிக்க முயன்றுள் ளனர். அம்முயற்சியில் அவர்கள் ஓர்அளவு வெற்றியும் பெற்றனர். புலவர் ஒருவருடைய ஊரும், அவர் மேற் கொண்டிருந்த தொழிலும், அவர் இயற்பெயரும் தெரிந் தால், உறையூர் மருத்துவன் தாமோதரனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், எனவும்; ஊரும், தொழிலும் அறிந்து அவர்தம் இயற்பெயர் அறியமாட்டா தாரை, அரிசில்கிழார், உறையூர் இளம்பொன் வாணிகனார், உறையூர் முதுகூத்தனார், மதுரைக் கணக்காயனார், வெண் ணிக்குயத்தியார் எனவும், புலவர்தம் ஊர்மட்டும் அறிந்து, அவர்தம் தொழிலோ, இயற்பெயரோ அறியமாட்டா தாரைக் கல்லாடனார், கழாத்தலையார், இடைக்காடனார் எனவும்; ஊரும், பெயரும் அறிந்ததோடு, அவர் தம் தந்தை பெயரும் அறியும் நிலையில் உள்ளாரை மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், மதுரைக் கணக் காயனார் மகனார் நக்கீரர் எனவும், அப்புலவர்தம் வரலாற் றைத் தாம் அறிந்த அளவில் அறிவித்தனர்.

அவ்வளவோடு நில்லாமல், புலவர்தம் ஊரோ, தொழிலோ, இயற்பெயரோ அறியமாட்டாமல் இருந் தாரையும், அவர் இயற்றிய பாக்களைப் பயின்று அப்பாக் களில் காணப்பெறும், அரிய நயம் செறிந்த சொற்றொடர், இனிய உவமைகள் ஆக இவற்றைக்கொண்டு முறையே தொடித்தலை விழுத்தண்டினார்,[1] கூகைக்கோழியார்,[2] எனவும், தேய்புரிபழங்கயிற்றனார்,[3] ஓரேருழவர்[4] என வும் பெயரிட்டு வழங்கி அவரை அறிவிப்பாராயினர்.

1. புறம் : 243. 2. ,, : 364.
3. நற்றிணை : 284. 4. குறுந்தொகை : 131.

அப்புலவர் பலரும் தமிழ்ப் பேர் அரசர்களாலும், குறுநில மன்னர்களாலும், பிற கொடைவள்ளல்களாலும் பெரிதும் பாராட்டப்பெற்று ஆதரிக்கப்பட்டு வந்தனர். அவர்களுள் பலர், கரிகாற் பெருவளத்தான் காலத்தும், அவனுக்கு முன்னும் பின்னுமாக ஒரு நூற்றாண்டுக்குள் வாழ்ந்தவரே எனினும், அவர்கள் அனைவர் வரலாற்றையும் அறிவிப்பது என முயன்றால், அது தனியானதொரு பெரு நூலாய் முடியுமாதலின், அவ்வாறு செய்யாது, கரிகாற் பெருவளத்தானைக் கண்டு, பாராட்டிய புலவர் சிலர்தம் வரலாற்றைமட்டும் ஈண்டுக் குறிப்பிடல் தகும். அவராவார், பரணர், கருங்குழலாதனார், வெண்ணிக்குயத்தியார், மாமூலனார், முடத்தாமக்கண்ணியார், கடியலூர் உருத்திரங் கண்ணனார் முதலியோராவர்.

## 1. பரணர்

பரணர், நக்கீரரைத் தலைவராகக்கொண்ட சங்கப்புலவர் நாற்பத்தொன்மருள் ஒருவர் எனவும், அப்புலவர்கள், பிரமன் சாபத்தால், அவன் மனைவி நாமகளின் கூறாகிய எழுத்துக்களின் பிறப்பு எனவும், அவர்கள் தங்கள் தகுதிக் கேற்ப இருக்கத்தக்க இடம் வேண்ட, ஆலவாய்ப் பெருமான், ஒருவர் இருக்கத்தக்க பலகை ஒன்றனைத் தந்து, இது புலவர் தகுதிக்கேற்ப வளர்ந்து அனைவர்க்கும் இடமளிக்கும் என்று கூறியளித்தான் எனவும், அப்புலவர்களும் வரிசையாக, நக்கீரர், கபிலர், பரணர் என்ற முறையில் அதில் ஏறி இருந்தனர் எனவும், இறைவனும் ஒரு புலவனாய் அவருடன் கூடி, அவர்களுக்கு இடையே தோன்றும் மாறுபாட்டைப் போக்குவதும், அவர்கள் ஐயப்பாட்டினை நீக்குவதும், அவர்களுக்கு நல்லறிவு கொளுத்துவதும் ஆகிய செயல்களைச் செய்து வந்தான்

எனவும் புராணங்கள் கூறுகின்றன. ஆனல், அப்புராணங்கள் மேற்படி வரலாற்றைக் கூறுவதில் ஒன்ருெடொன்று பெரிதும் மாறுபட்டு நிற்பதாலும், தம் அறிவிற்கும் ஆற்றலுக்கும் மிக்க ஒரு செயலை வேறு ஒருவர் தன் முயற்சியால் செய்து முடித்தால், அவ்வாறு செய்தவர் “ஆண்டவன் அருளைப் பெற்றவர்; அவன் துணையால் அதைச் செய்து முடித்தார்,” என்றுகூறி, அவ்வாறு செய்து முடித்தார் தம் அறிவிற்கும் ஆற்றலுக்கும் மதிப்புத்தர மறுத்துவிடுவதைப் பின்வந்தோர் வழக்கமாக ஆக்கிக் கொண்டமையாலும், அப்புராணங்கள் கூறும் வரலாற்றிற்கு, அப்புலவர்கள் இயற்றிய பாக்கள் ஒன்றிலும் சிறிதேனும் சான்று கிடைக்காமையானும், அப்புராணங்கள் அளிக்கும் வரலாற்றை உண்மையென மேற்கொள்ளாது, அப்புலவர்கள் பாடிய பாக்களைத் துணையாகக்கொண்டு அவர்கள் வரலாற்றைக் கூடுமானவரை அறிய முயல்வதே அறிவுடையோர் செயலாம்.

“புலவர் பாடும் புகழ்உடையோர் விசும்பில், வலவன் ஏவா வான வூர்தி எய்துப” என்பதை நம்பியவர் நம் தமிழர். “புலவர் பாடாது வரைக” எனப் புலவர் பாடாமை தமக்கு இழிவு என்று கொண்டனர், நம் தமிழர். அறிவில்மிக்க ஔவையார், தாம்பாடிய ஒன்றிலேயே அதிகப் புகழ் ஓங்கி இருப்பவும், அவன் புகழ் மிக்கோன் என்ற கருத்துத் தோன்ற, “இன்றும் பரணன் பாடினன் மற்கொல்” எனப் பரணரால் பாடப் பெறுதல் அரிய செயல் என்று கூறுவதன்மூலம், பரணர் புகழைப் பாராட்டியுள்ளார். “புலம்மிக் கவரைப் புலமை தெரிதல், புலமிக் கவர்க்கே புலனும்” என்ற பொருளுரைக்கேற்ப, புலவரால் பாடப்பெற்ற புலமைமிக்க பரணர் அவர்கள் வரலாறு நம்மால் அறிய இயலாமல் இருப்பது வருந்தத்

தக்கதே ஆகும். அவர் பிறந்த ஊர், அவரைப் பெற்றோர், அவர் இளமைக்கால வாழ்வு, அவர் அறிவுபெற்ற முறை, அவர் மேற்கொண்டிருந்த தொழில், அவர் மனைவிமக்கள், அவர் இறுதிக்காலம் ஆக இவற்றுள் எதைப்பற்றியும் ஒன்றும் அறிதற்கு இடன் இல்லை.

பரணர், "யாதும் ஊரே யாவரும் கேளிர்," என்ற பெருநோக்குடையர் ஆதலின், தான்வாழும் இடம் என ஒன்றைத் தனக்கென வகுத்துக்கொள்ளாது, தமிழ்நாட்டின் பல பகுதியினும் சென்று, வாழ்ந்து வந்தனராவர். இவர், தமிழகமெங்கும் சுற்றி அறிந்தவர் என்பது, இவர் சேரவேந்தரையும், சோழ அரசரையும், குறுநில மன்னர்களாய கொடை வள்ளல்கள் பலரையும் நேரில்கண்டு பாடியிருப்பதாலும், தமிழ்நாட்டின் பல பகுதியினும் உள்ள மலைகள், ஆறுகள், ஊர்கள் ஆகிய இவைகள் மிகவும் விரிவாகவும், விளக்கமாகவும் இவரால் கூறப்பட்டுள்ளன ஆதலாலும், ஆங்காங்கு நடைபெற்ற போர்க்கள நிகழ்ச்சிகளும், பிறவும் இவர் பாக்களில் பரக்கக் கூறப்பட்டுள்ளமையாலும், "மழைபெயல் மாறிய கழைதிரங் கத்தம் ஒன்றிரண்டல, பல கழிந்து, திண்டேர் வசையில் நெடுந்தகை காண்குவந் திசினே"[1] என அவரே கூறுதலாலும் அறியப்படும்.

பரணர், பேர்அரசர்கள் தம்முட் பகைகொண்டு பொருது அழிவதையும், அவ்வரசர்தம் மாறுபாட்டால், அவ்விருவர் நாடுகளும் அழிவுக்குள்ளாவதையும் காணப் பொறாத இளகிய நெஞ்சுடையவர் என்பது, சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதனும், சோழன் வேற்பஃறடக் கைப் பெருவிறற் கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது

1. பதிற்றுப்பத்து : 41.

வீழ்ந்த நிலைகண்டு பாடிய பாக்களால் தெளிவாம்.[1] இவர், வாழ்க்கையில் வழுக்கி வீழ்ந்தாரைத் தெருட்டி நல்வழிப் படுத்தலைத் தம்முடைய தலையாய பணியெனக் கொண்டவர் என்பது, தன் அருமை மனைவி, கண்ணகியை மறந்து, பொதுமகள் ஒருத்தியோடு உடன்உறை வாழ்க்கையை மேற்கொண்டிருந்த பேகனைக்கண்டு பலகூறி அவனை அவன் மனைவிபால் சேர்க்க முயன்ற புலவர் பலருள் இவரும் ஒருவர்,"[2] என்பதால் விளங்கும். இத்தகைய அருள் நிறை உள்ளத்தவராய பரணர், தவறு செய்தாரைக் காய்ந்து ஒதுக்கும் ஆண்மையிலும் குறைந்தவரல்லர் என்பதைத் தன் தோட்டத்து நறுமாவின் காயொன்று கீழே வீழ்ந்து ஆற்றுநீரில் அலைப்புண்டு செல்லக்கண்ட, ஆங்கே நீராடச்சென்ற பெண் ஒருத்தி, அக்காய், அரசனுக்குரி

1. "வேந்தரும் பொருதுகளத்து ஒழிந்தனர்; இனியே,
என்னு வதுகொல் தானே, கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவல் முக்கித் தண்புனல் பாயும்
யாணர் அறாஅ வைப்பின்
காமர் கிடக்கையர் அவர் அகன்தலை நாடே." —புறம்: 63.

2. "இளையோய்,
கிளையை மன்எம் கேள்வெய் யோற்குஎன
யாம்தற் றொழுத னம்வினவக் காந்தள்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரேம்,அல்லேம் கேளினி
எம்போல் ஒருத்தி நலன்நயந்து என்றும்
வரூஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லெனஒலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே." — ,, 144.

"இஃதியாம் இரந்த பரிசில்அஃது இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னு துறைவி அரும்படர் களைமே." — ,, 145.

யது என அறியாளாய் உண்ட பிழைக்காக, அவள் தமர், எண்பத்தோர் யானைகளும், அவள் நிறையளவுள்ள பொற் பாவையும் தருவதாகக் கூறவும் ஏற்றுக்கொள்ளாது அவளைக் கொலைபுரிந்த நன்னன் கொடுஞ்செயலைப் பலர் அறியத் தூற்றி வருவதால் அறியலாம்.[1]

பரணர், தமிழகத்தின் பல இடங்களிலும் திரிந்து, ஆங்காங்குநிகழ்ந்த பற்பல வரலாறுகளை அறிந்தவராதலின் தம் பாட்டுக்களில், அவை அகத்துறை தழுவியதாயினும், அன்றி, புறத்துறை தழுவியதாயினும், யாதேனும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியை இடையில் புகுத்திக் கூறாது போகார். வரலாற்றுக் குறிப்புக்கள் இவர் பாட்டுக்களில் காணப்படுதல்போலப் பிறர் எவர் பாட்டுக்களிலும் காணப் படுதல் இல்லை. இதனால் பழையவரலாற்றை ஆராயப் புகுவார்க்குப் பரணர்பாக்கள் பெரிதும் துணைபுரிவ வாயின.

பரணரால் பாடப் பெற்றோருள், சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதனும், சோழன் வேற்பஃறடக்கைப் பெரு விறற்கிள்ளியும், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியும், கரிகாற் பெருவளத்தானும், பேகனும், அதிகமானஞ்சியும் சிறந்தோராவர். வெண்ணி வாயிலில், வேந்தர் இருவரும் வேளிர் பதினொருவரும் கூடிக் கரிகாலனோடு பொருத போரில், அவன் அவர்களை வென்ற வரலாறும், அவ் வெற்றிகுறித்து அவன் தாய் பிறந்த அழுந்தூரில் வெற்றி

1. "மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ."
—குறுந்: 292.

விழாக் கொண்டாடப் பெற்றவரலாறும்,[1] வாகைப் பறந் தலையில், மன்னர் ஒன்பதின்மரோடு பொருது, அவர் புறங்கண்டு, அவர்கள் விட்டுச்சென்ற குடைகளைக் கைப் பற்றிய வரலாறும்,[2] காவிரியாற்றில், கழார்ப் பெருந் துறையில், விழாக்காணச் சென்ற கரிகாலன், அத்தி என்ப வன் அவ்வியாற்றில் புனலாடுதலைப்பார்த்து மகிழ்ந்திருக் குங்கால், அவனைப் புனல் ஈர்த்துக்கொண்டு போன வர லாறும்[3] பரணர் பாக்களால், கரிகாலன் வரலாறாகக் கூறப் பட்டுள்ளன.

பரணர், கரிகாலனுக்கு இரண்டுதலைமுறைக் காலத் திற்குப் பிற்பட்டோனாகிய செங்குட்டுவனையும் பாடிய வராகக் காணப்படுதலால், கரிகாலன் வரலாற்றை நேரில் கண்டே கூறினார் என்று கொள்வதினும், அறிந்தார்வாய்க் கேட்டே கூறினார் என்றுகூறுவர் சிலர். பரணர் கரிகாலன் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியை நேர் முகப் படுத்தியே பாடியுள்ளமையான் இவர், அவன்மகன் காலத்தில் வாழ்ந்தவர் என்பது உறுதி.

## 2. கருங்குழலாதனார்

கரிகாலன் உயிரோடு வாழ்ந்த காலை அவன் பகைவர் நாட்டை அழித்துப்பெற்ற வெற்றிச்சிறப்பைப் பாராட் டிய இவர்,[4] அவன் இறந்தானாக மனத்துயர் உற்று, அவன் வெற்றிச் சிறப்பையும், இரவலரைப் புரந்த அவன் வள்ளன்மையையும், வேதவேள்விச் செயல்முடித்த அவன் அறச்செயலையும், எண்ணி எண்ணி இரங்கி, பின்னர் அவன் உரிமை மகளிர், இழைகளைந்து துயர் உற்ற கண் கலங்கும் காட்சியையும் கண்ணுற்றுப் பாடினார் கருங்குழ

1. அகம்: 246.
2. ,, 125.
3. ,, 376.
4. புறம்: 7.

லாதனார்[1] என்பதல்லது, இவருடைய பிற வரலாறுகள் ஒன்றும் அறிய இயலவில்லை.

### 3. வெண்ணிக்குயத்தியார்

பழந்தமிழ்நாடு பெற்றிருந்த பெருமைக்குரிய காரணங்களுள், அந்நாடு நல்லிசைப்புலமை மெல்லியலார் பலரைப் பெற்றிருந்ததும் ஒன்று ஆகும். பதினறுவருக்கு மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் பண்டைத் தமிழகத்தை அணி செய்து விளங்கினர். அத்தகைய பெண்பாற் புலவருள் ஒருவராய இவர், நீடாமங்கலத்திற்கு அண்மையில் இக்காலை கோயில்வெண்ணி என அழைக்கப்பெறும் வெண்ணி என்ற ஊரில் வாழ்ந்த குயவர் குடியில் பிறந்தவர். இவர், கரிகாலன் காலத்தே வாழ்ந்ததோடு அல்லாமல் தன் ஊருக்கு அண்மையில் நிகழ்ந்த வெண்ணிவாயில் போரில், கரிகாலன் ஆற்றிய போர்த்திறத்தையும், முறையையும், அதன் நிகழ்ச்சிகளையும் நன்கு உணர்ந்தவராவர். அப்போரில் சேரமான் நெடுஞ்சேரலாதன், கரிகாலனோடு போரிட்டுப் பின்னடைந்து புறப்புண் கொண்டானாக அது கண்டு நாணி, தன் உயிரைவிடத் துணிந்து வடக்கிருந்த வரலாற்றை இவர் மிகவும் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் கரிகாலன் முன்னோர், கடலிடையே கலம் பல செலுத்திப் போரிட்டுப் பெற்ற பெரும் வெற்றிச் சிறப்புக்களையும், கரிகாலன் போர்த்திறனையும் பாராட்டிக் கூறியுள்ளார்.[2]

### 4. மாமூலனர்

மாமூலனார் அந்தணர் மரபினர். இது, "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்"[3] என்ற தொல்காப்பியச்

1. புறம்: 224. 2. புறம்: 66,
3. தொல். பொருள்: 75.

சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் செய்த உரையான் விளங்கும். திருமூலம் பாடிய மாமூலர் வேறு; இவர் வேறு. புறத்துறை தழுவிய பாடல் ஒன்றும் பாடாமையாலோ அல்லது, வரலாற்று நிகழ்ச்சிகளில் தமக்குள்ள ஆர்வ மிகுதியாலோ, தாம் பாடிய பாடல்கள் ஒவ்வொன்றினும் ஒரு வரலாற்றுக் குறிப்பை, அது இறந்தகால நிகழ்ச்சியாயினும், நிகழ்கால நிகழ்ச்சியாயினும் குறியாது இரார். இவர் தமிழ்நாட்டு அரசியல் நிகழ்ச்சிகளையே அன்றித் தமிழகம் கடந்த பிறநாட்டு வரலாறுகளையும் அறிந்து குறிப்பிடுவர். அவற்றுள், பாடலிபுரத்தில் நந்தர் பெரும் பொருள் சேர்த்து வைத்ததும்,[1] மோரிய மன்னர் தென்னாட்டுப் படையெடுப்பும்[2] சிறப்புடையன. இவற்றுள் மோரியர் படையெடுப்புக் குறிப்பு தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர்களுக்கு அருந்துணை புரிவதாகும். கரிகாலன் நாட்டில் வெண்ணெல் மிகுதியாக விளைவதையும்,[3] அவன் வெண்ணிப் போரையும், அதில் அவனோடு போரிட்டுப் புறப்புண் பெற்றுத் தோற்ற சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்ததையும், அதைக்கேட்ட சான்றோர் பலரும் அவனுடன் உயிர்நீத்த வரலாற்றையும் குறிப்பிட்டுள்ளார்.[4]

## 5. முடத்தாமக்கண்ணியார்

கரிகாற்பெருவளத்தானைக் கண்டு அவனால் நன்கு உபசரிக்கப்பெற்று மீண்டுவரும் பொருநன் ஒருவன், தன் வழியில் எதிர்ப்படும் வேறு பொருநன் ஒருவனை நோக்கிக் கரிகாலன்பாற் செல்லின், நின் வறுமை தீர வழங்குவன் என ஆற்றுப்படை செய்யும் முகத்தான், கரிகாலன் வரலாறு, அவன் வெற்றித்திறம், கொடைச்

1. அகம்: 251, 265. 2. அகம்: 251, 281.
3. அகம்: 201. 4. அகம்: 55.

சிறப்பு, சோணாட்டு வளம் ஆகியவற்றை மிக அழகாகத் தாம் இயற்றிய பொருநராற்றுப்படையில் அமைத்துப்பாடியவர் இவர். இப்பாட்டினால் கரிகாற்பெருவளத்தான், உருவப்பஃறேர் இளையோன் சிறுவன் என்பதும், தாய் வயிற்றிருந்து தாயம் எய்தியவன் என்பதும், பிறந்து தவழ் கற்ற நாள்தொடங்கியே போர்த்தொழில் மேற்கொண்டான் என்பதும், இருபெரு வேந்தரும் ஒருகளத்தவிய வெண்ணியில் தாக்கி வெற்றிபெற்றான் என்பதும், தன் அவைபுக்க முதியோர் பகைமுரணைப் போக்கினான் என்பதும் ஆகிய இவையெல்லாம் அறியவைத்துள்ளார். மேலும், கரிகாலன் தன்பால் பரிசில்பெறத் தன்னை அடைந்த இரவலரை அண்மையில்இருத்தி, அன்புடன் நோக்கி அவர்க்கு அரவுரி யன்ன அறுவை நல்கி, தன்மாடத்திருத்தி, அவர்க்கு ஊனும், சோறும் ஒன்று குறைவில்லாமல் அவர் இருக்கும் காலும் அளித்து, அவர் "எம்தொல்பதி சேறும்" என்று கூறியகாலை, பிரிய மனம் பொருதே அவர்க்கு வேண்டுவன நல்கி அளிக்கும் கொடைத்திறன் மிகவும் அழகாக விளக்கப்பட்டுளது.

தமிழ்வேந்தர் மூவரும் தம்முள் ஒற்றுமை இலராய், ஒருவரோடு ஒருவர் பகைகொண்டு போரிட்டு வாழும் வாழ்க்கை ஒழிந்து, நட்புப் பூண்டு ஒற்றுமையாக வாழ்ந்தால் உலகிற்கு உண்டாகும் பெருநலனைக் காணவேண்டும் என்ற தன் பெருவேட்கையைத், தன் இன்மை தீர்ந்த நிலைக்குப் பீடுகெழுதிருவின் பெரும்பெயர் நோன்தாள் முரசு முழங்குதானை மூவருங்கூடி அரசவை இருந்த தோற்றத்தை உவமையாக எடுத்துக்கூறிய அதனான் வெளியிட்ட பண்பு, பலரானும் விரும்பிப் பாராட்டற்குரியதாகும். வழியில் வருவோரை அலைத்து அவர்தம் பொருளைக் கொள்ளை கொண்டும் பொருள்இலராயின் அவர்தம் தலையைக்

கொள்ளைகொண்டும் போகும் எண்ணமுடையராய், வேலேந்தி வந்தாரையும், மனமாற்றி அருள் நிரம்பிய உள்ளத்தவராக்கும் உருக்கம் நிறைந்தது பாலைப்பண்—"ஆறலை கள்வர் படைவிட அருளின், மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை" எனப் பாலைப்பண் இயல்பு கூறியது பாராட்டத் தக்கதேயாம். இவையே அன்றி, முடத்தாமக்கண்ணியாரைப்பற்றி வேறு ஒன்றினையும் அறியமாட்டாத் தாழ் நிலையில்தான் தமிழகம் தமிழை வளர்த்து வந்துளது.

## 6. கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பட்டினப்பாலையால் கரிகாற் பெருவளத்தானையும், பெரும்பாணாற்றுப்படையால் தொண்டைமான் இளந் திரையனையும் பாராட்டிய இவர் பிறந்த கடியலூர் எந் நாட்டது என்று அறிய முடியவில்லை. "ஊரும், பெயரும்"[1] என்ற தொல்காப்பியம் மரபியற் சூத்திரத்திற்கு உரை வகுத்த பேராசிரியர், இவரை அந்தணர் என்பர். கரிகாற் பெருவளத்தான்மீது பட்டினப்பாலை பாடியதற்குப் பரிசாகப் பதினாறு நூறாயிரம் பொன் பெற்றார் என்பது "தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன், பத்தொடாறு நூறாயிரம்பெறப் பண்டு பட்டினப் பாலைகொண்டதும்" எனவரும் கலிங்கத்துப் பரணிப் பாடலால் அறியப்படும்.

பட்டினப்பாலை, பொருள்வயிற் பிரியக் கருதிய நெஞ்சை நோக்கிப் "பிரிந்து செல்லும் வழியில் இடைப்படும் கானம், கரிகாற்பெருவளத்தான் வேலினும்கொடிது; தலைவியின் தோளோ எனின் கரிகாலன் செங்கோலினும் தண்ணிது (இனிது); ஆகவே, இத்தன்மையாளைப் பிரிந்து வருவதால், கரிகாலனுடைய செல்வ மலிந்த முட்டாச்

1. தொல். பொருள்: 629.

சிறப்பின் பட்டினமே பெறுவதாயினும் வாரிருங்கூந்தல் வயங்கிழை ஒழிய வாரேன்" எனக்கூறித் தலைமகன் செல வழுங்குவதாகப் பாடப்பெற்றதாகும். இதைப்பாடும் வாயி லாகச் சோழநாட்டு வளத்தையும், செல்வச் சிறப்பையும், தலைநகர்ப் பெருமையையும், நகர மக்களின் இன்பவாழ்க்கை யையும், சோழநாட்டு வாணிப வளத்தையும், விளங்க உரைத்ததோடு, சோழர்க்குப் பகையாயினார் தம் நாட்டின் அழிவும், கரிகாலன், தாயத்தாரால் சிறை வைக்கப்பட்ட தும், அவன், அதினின்றும் வெளிப்போந்து அவரை வென்று உருகெழுதாயம் ஊழின் எய்தியதும், பல் ஒளியர் பணிபொடுங்க, தொல் அருவாளர் தொழில்கேட்ப, வட வர் வாடக், குடவர் கூம்ப, தென்னவன் திறல்கெட, புன் பொதுவர் வழிபொன்ற, இருங்கோவேள் மருங்குசாய வெற்றிபல பெற்றான் என்பதும், காடுகொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம்பெருக்கி, வளவன் என்ற பெரும் பெயர் பெற்றான் என்பதும், உறந்தையைப் புதுக்கி, அரண் நிறைந்த நகராக்கினான் என்பதும் ஆகிய கரிகாலன் வரலாற்றையும் அறிவிப்பாராயினர்.

பெரும்பாணாற்றுப்படையில், ஐந்திணை வளத்தை விளக்கு முகத்தான் தொண்டைநாட்டு வளத்தையும், அதன் தலைநகர் கச்சியின் சிறப்பையும் விளக்கிய புலவர், திரையன்பெருமையைக் கூறும்போது அவன், முரசு முழங்குதானை மூவருள்ளும் சிறப்புடையோன் எனவும், அவன் நாடு, "அத்தம் செல்வோர் அலறத்தாக்கிக் கைப் பொருள் வெளவும் களவேர் வாழ்க்கைக் கொடியோர் இன்று; கடியுடை வியன்புலம், உருமும் உராறது; அரவுந் தப்பா; காட்டுமாவும் உறுகண் செய்யா" எனவும் புகழ்ந்து கூறுவர்.

# 10. கரிகாலன் பண்புடைமை

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி, வெண் குடை நிழற்றிய ஒருமையோன்," என்ற பாராட்டுரை யைப் பண்டைய அரசர் பெரிதும் விரும்பினர். "நின் கடல் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின், வெண்டலைப் புணரிக் குடகடல் குளிக்கும்" என்ற புகழ்உரையே விழு மியஉரையாகக் கொண்டனர் அந்நாள் வேந்தர். "விழுப் புண்படாதநாளெல்லாம் வழுக்கினுள், வைக்கும்தன் நாளை எடுத்து," என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, விழுப்புண் படலை விரும்பி மேற்கொண்டனர் அக்கால வீரர்கள். போர் என்ற உடனே, காலில் கழல் புனைந்து புறப்பட்டு விடுவர். இந்தப் பண்பு கரிகாலனிடத்தும் இருந்தது என்று கூற வேண்டுவதின்று. "பெற்றதே பெரிது" என்று அமைதி கொள்ளும் சுருங்கிய உள்ளமுடையவனல்லன் கரிகாலன். "பெற்றவை மகிழ்தல் செய்யான்" என்பர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். "செருவெம் காதலின் திருமா வளவன்" என்று இவன் போர்வேட்கை மிக்குடையோன் என்பர் இளங்கோவடிகள். தமிழகம் முற்றும் தன் ஆணை யின்கீழ் வந்துவிட்டது என்று அமைதிகொண்டானல்லன். அத்துடன் அவன் போர்வேட்கை தணிந்திலது. தமிழ் நாட்டில் தன்னோடு எதிர்நின்று போர்புரியும் பெருவீரன் ஒருவனும் இலன் என்பது உணர்ந்து போரை விரும்பி வடநாடு நோக்கிச் சென்றான். "இருநில மருங்கில் பொரு நரைப்பெறா, செருவெங் காதலின் திருமாவளவன், புண் ணியத் திசைமுகம் போயினன்." (புண்ணியத் திசைமுகம் வடநாடு.)

பேர்அரசைப் பெறவேண்டும்; பெரிய நாட்டை ஆளவேண்டும் என்ற எண்ணம்மட்டும் இருந்து, அவ்

வெண்ணத்தைக் குறைவற நிறைவேற்றிக் கொள்ளத் தக்க வழிவகைகளை எண்ணித் துணியும் அறிவு, துணிந்த வகையானே செயலாற்றக் கூடிய ஊக்கம் முதலியன இல்லாது போயின், அவ்வெண்ணத்தால் பயனில்லை. "வாளொடு என் வன்கண்ணர் அல்லார்க்கு," என்பர் வள்ளுவர். கரிகாலன், ஒருகுடையான் ஒன்றுகூறப் பெரி தாளவேண்டும் என்ற பேராசை கொண்டவனாய் இருப்ப தோடு, அவ்வாசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அறிவும், சூழ்ச்சியும், ஆண்மையும், திறனும் ஒருங்கே உடையன் ஆவன். பகைவர் சிறையகத்திருந்த அவன், அதனினின்றும் மீண்ட வழிமுறைகளானே அது தெளியப்படும். அவன் சின்னாள் சிறையகத்தே வாழ்ந்ததை, எதிர்த்தன எவ்வளவு பெரியன ஆயினும் தப்பாது தாக்குவதும், தான் எதிர்த்த களிறு பிழைத்துவிட்டதாயின், அதற்காக, எலியைக் கொல்லும் இயல்பை என்றும் மேற்கொள்ளாப் பண்பு வாய்ந்ததும் ஆகிய ஊக்கமும், உறுதியும், பெருந்தன்மை யும் பொருந்திய சிங்கக்குருளை கூட்டில் வளர்வதனோடும், தான் இளையன்; பகை பெரிது; அவர் தன்னை அடைத்து வைத்துள்ள சிறை செறிவுடைத் திண்காப்புடைத்து என்று கருதி வாளா இராது, அச்சிறையினின்றும் மீளும் வழிவகைகளை நுண்ணிதின் உணர்ந்நாடி, பகைவர் காவலைத் தன் வாள்துணையால் கழித்து வெளியேறிய அவன் வீரச் செயலைத், தன்னைக் கைப்பற்றுவோர் அகழ்ந்த குழியில் அகப்பட்டுக்கொண்ட மதம்மிக்க யானை, இனி மீளவழி யில்லை என்று செயலற்றுப் போகாமல், தன் கோட்டால் குழியின் கரைகளைக்குத்தி, அதைத் தூர்த்து வெளியேறிய செயலோடும் ஒப்புமை தோன்றக் கூறிய முறையானே, அவன் அறிவு, ஊக்கம், ஆராய்ந்த செயல்வகை முதலா யின தோன்றும். மேலும், தன்னை எதிர்த்த பகைவர்,

பேர் அரசர்களும், குறுநிலமன்னர்களுமாகப் பலர் எனி னும், அவர் பன்மையும், ஆண்டின் முதுமையும், தன் தனிமையும், இளமையும் கண்டு அஞ்சாது எதிர்த்து வெற்றிபெற்றான் எனின், அவன் வீரத்தைப்பற்றி மேலும் விளக்குவது வேண்டுவதின்று. வடநாடு செல்ல விரும்பிய அவன், அதற்கு முன்னர்த் தன் நாட்டில், தன் பகைவர், தன்னினும் ஆற்றல் வாய்ந்தவர் என ஒருவரையும் விடாமல் அனைவரையும் வெற்றிகொண்டது, பெரும்படைத் தலைவர் கள்பால் இருக்கவேண்டிய போர் நுணுக்கங்கள் பலவும் அவன்பால் பொருந்தியிருந்தன என்பதை உறுதி செய்வ தாகும். பெரும் வீரனே எனினும் அவன்மாட்டும், ஏனைப் பெருவீரர்கள் பால் இருந்த, தம்மோடு போரிட்டுத் தோற்ற பகைவர் நாட்டைப் பாழ்செய்து மகிழ்தலாகிய பெருங்குற்றம் நீங்கிற்றில்லை.

கரிகாலன் ஆட்சி, அறனொடு புணர்ந்த ஆட்சி; கொலைகடிந்து களவுநீக்கி ஆண்டான் அவன்; அவன்நாட்டு மக்களும், வடுவஞ்சி வாய்மொழிந்து, நடுவுநின்ற நெஞ்சின ராய் வாழ்ந்தனர் என்றால், அவன் ஆட்சியின் சிறப்பை வேறு எடுத்து ஓதவேண்டியதின்று. இவன் நீதியின் நேர்மையை விளக்க, தம்முள் மாறுபட்டுப் பகைகொண்டு கரிகாலன்பால் தம் வழக்கை உரைத்து முறைவேண்டி வந்த முதியோர் இருவர், அறங்கூர் அவையில் அமர்ந் திருந்த கரிகாலன், நனி இளையனாய் இருப்பதுகண்டு, இத் துணை இளம்பருவம் உடையான், நம் வழக்கின் நன்மை தீமைகளை நாடி முடிவுகூறும் மூதறிவுடையனாயிரான் என்று எண்ணியவராய்த் தம் வழக்கை அவன் முன் உரைக்கத் தயங்கினராக, அவர்கள் தளர்ச்சியைக் குறிப் பான் அறிந்துகொண்ட கரிகாலன், அவையின் நீங்கி உள்ளேசென்று, நரைதிரை பெற்ற முதியோன் உருவு

கொண்டு வந்து அரியணைமீது அமர்ந்தானாக, வழக்குரைக்க வந்த முதியோர், இவன்போலும் அரசன் என எண்ணி, தம் வழக்கை அவன்பால் உரைக்க, அதுகேட்டு, அதற்கு அம் முதியோர் வியக்குமாறு முறையளித்ததோடு, அவர் காணத் தம் முதுமை உருவைக் களைந்து, தன் முன்னை இளமை உருவுகாட்டி அவர்கள் வியப்பையும் நாட்டுமக்கள் பாராட்டுதலையும் பெற்றான் என்ற ஒரு வரலாறு நிலவி வருகிறது.

இக் கொள்கையை அரண் செய்வன, "இளமை நாணி, முதுமை எய்தி, உரைமுடிவு காட்டிய உரவோன்."[1] என்ற மணிமேகலைத் தொடரும்,

> "உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
> நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
> சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
> கல்லாமற் பாகம் படும்."

என்ற பழமொழி வெண்பாவும், அதன் உரையுமே ஆகும்.

இனி, "முதியோர் அவைபுகு பொழுதில் தம் பகை முரண் செலவும்,"[2] என்ற பொருநராற்றுப்படைத் தொடர் கரிகாலன் நரைமுடித்து முறைசெய்த வரலாற்றைக் குறிப்பதாகப் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். இத்தொடர், சோழநாட்டு வளங்களை விரித்துரைக்கும் பகுதியில், "இளையோர் வண்டலயரவும்," என அந்நாட்டுச் சிறுவர் தொழிலாகிய ஆடலைக் குறித்துப் பின்னர் முதியோர் செயலைக்குறிக்கக் கூறப்பட்டுள்ளது. இளையோர் தம்முள் பகையின்றிக் கலந்து வண்டலாடி விளையாடுகின்றனர்; அந்நாட்டு முதியவர்களும், முன்னே பகைமை

1. மணிமேகலை, 4 : 107—108.
2. பொருநராற்றுப்படை : 187—188.

கொண்டு இருந்தாலும், அப்பகை உணர்ச்சியை இறுதி வரை கொண்டு நிற்பாரல்லர்; அறங்கூர் அவையுள், தம் வழக்கை உரைக்கப் புகுவதற்குமுன்னரே, தம் பகைவிட்டு ஒன்றுபடுவர்; எனவே, அந்நாட்டு மக்கள், இளையராயினும், முதியராயினும் தம்முள் மாறுபட்டு வாழாமல் ஒன்றுகலந்தே வாழ்கின்றனர் என, அந்நாட்டுப் பண்பைக் குறிப்பதாகத் தோன்றுகின்றதே ஒழிய, கரிகாலன் முறை செய்யும் முறையை விளக்கவந்ததாகத் தெரியவில்லை. பாட்டைத் தமக்கு வேண்டியவாறு பிரித்தும், கொண்டு கூட்டியும், தம் மனதில் நிறைந்துள்ள கருத்துக்களையும், கதைகளையும் ஏற்றிப் பொருள்செய்ய முயற்சிப்பது நச்சினார்க்கினியர் மேற்கொள்ளும் முறையாகும் என்பதற்கு இதையும் ஒரு சான்றாகக் கொள்வதல்லது, அவர் பொருளை உண்மைப்பொருள் எனக் கொள்வதற்கில்லை.

நிற்க, மணிமேகலை, பழமொழிச் சான்றுகளைக் கொண்டு இவ் வரலாற்றை உண்மையென ஒப்புக்கொள்வதாயின், அந்நாட்டு மக்கள், தன் அரசன் யார் என்பதையும் உணராதவர் என்ற பழியையும், அறியாமையையும் அவர்களுக்குச் சூட்டுவதோடு, கரிகாலன் காட்சிக்கு அரியன் என்ற பழியைக் கரிகாலனுக்கும் அளித்தவராவோம். கரிகாலன் பிறப்பதற்கு முன்னரே, அவன் தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி இறந்துவிட்டான் என்பதும், அவன் தாயத்தார், அவன் இளமைக்காலத்தே அவனைக் கைப்பற்றிச் சிறைசெய்தனர் என்பதும், அவன், தன் வாள் துணை கொண்டு சிறையினின்றும் மீண்டு தன் அரச உரிமையைப்பெற்றான் என்பதும், அந்நாட்டு மக்கள் அனைவரானும் அறியப்பட்ட நிகழ்ச்சிகளாதல்வேண்டும். அவ்வாறாகவும், அந்நாட்டு மக்களுள் சிலர், அதிலும் முதியோர், தங்கள் அரசன் யார், அவன் ஆண்டில் இளையோனா, முதியோனா

என்றும் அறியாது, அவன் முதியோனாகவே இருப்பான் என எண்ணியிருந்தனர் எனவும், அவன் அதற்கு மாறாக இளையோனாய் இருப்பது கண்டு வழக்குரைக்க நாணினர் எனவும் கொள்வது, அந்நாட்டு நிலைமையை அறியாது கொள்ளும் முடிவே ஆகும்.

கரிகாலனுக்குக் காலத்தால் அண்மையில் வாழ்ந்த சாத்தனாரே அந்நிகழ்ச்சியைக் கூறுகின்றாரே என்றால், "இளமை நாணி, முதுமை எய்தி உரை முடிவுகாட்டிய உரவோன்," என்ற மணிமேகலைத் தொடர், கரிகாலனையே குறிப்பிடுகிறது என்று கொள்வதற்குரிய அகச்சான்று ஒன்றும் அதில் இல்லை என்பதை உற்றுநோக்குதல்வேண்டும். பழமொழிச் செய்யுள்மூலமும், "சோழன்" எனப் பொதுவாகக் கூறியுளதே ஒழிய, கரிகாலன் பெயர் கூறிற்றில்லை என்பதையும் நோக்கினால், மணிமேகலை, பழமொழிகூறும் நீதி வழங்கிய நிகழ்ச்சி, சோழர் குலத்தில் தோன்றிய ஒருவனைக் குறிக்கிறது என்று கொள்வதல்லது, அது, கரிகாலனையே குறிப்பிடுகிறது என்று கொள்வதற்கில்லை.

கரிகாலன், தன் நாட்டு வளத்தைப்பெருக்கச் செய்த அருஞ்செயல்கள் பல: நாட்டின் விளைபொருள் பெருக வழிசெய்தான் முதற்கண்; நாடுகளைச் சூழஇருந்த காடுகளை அழித்து, அவற்றை வளமிக்க நிலங்களாக மாற்றினான்; அந்நிலம் நீர்வளம் உடையதாக இருக்கவேண்டும் என எண்ணிய அவன், குளம் பல தோண்டி நீர்வளத்தை உண்டாக்கினான்; அந்நீர்வளமும் போதா என உணர்ந்த கரிகாலன், பயனின்றிக் கடலில் போய்ச் சேரும் காவிரி நீரைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணி, காவிரியின் இரு மருங்கும் கரை அமைத்து அணைகட்டி நீரைத்தேக்கி, நீர்

வளத்தைப் பெருக்கிச், "சோழவளநாடு சோறுடைத்து," என்ற சிறப்பிற்குப் பெரிதும் காரணமாய் விளங்கினன்.

நாட்டை வளமாக்கி உணவுப்பொருள் உயரவழி செய்ததோடு அமையாது, செல்வத்தாலும், சிறந்ததாக ஆக்க வேண்டுமென்று விரும்பினன். விரும்பிய அவன், அதற்குத் தலைநகர் உறையூர்போன்ற உள்நாட்டு ஊர் இருத்தல்கூடாது என்று உணர்ந்து, காவிரி கடலோடு கலக்குமிடத்திற்கு அண்மையில், காவிரிப்பூம்பட்டினம் என்ற அழகிய நகர் ஒன்றை அமைத்தான். இதனால், கடல்வாணிபம் வளர்ந்து நாட்டுச்செல்வம் பெருகிற்று. வாணிபப் பொருள்களை வகைப்படுத்தி, அவற்றிற்கான சுங்கத்தை முறையாகப்பெற்று அரசசெல்வத்தையும் பெருக்கினன்.

புதிய தலைநகரைப் பிறநாட்டு மக்களும் கண்டு வியக்கும்வண்ணம் அமைத்த அவன், பழைய தலைநகரின் இன்றியமையாமையை மறந்தவனல்லன். காவிரிப்பூம்பட்டினம், கடல்வாணிபத்திற்கு ஏற்றது என்பதும், உறையூர், உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு ஏற்றது என்பதும் உணர்ந்து, உறையூரின்கண் உள்ள, அரசன் கோயில் முதலாய பல்வேறு மாளிகைகளையும் புதியமுறையில் மாற்றி அமைத்ததோடு, அந்நகரைச் சூழப் பெருமதில் எடுத்து, அம்மதில் முற்றும் பகைவரும் கண்டு அஞ்சத்தக்க படைக்கலம் பல அமைத்துத் தலைநகரை அணுகுதற்கரிய அரண் அமைந்த ஒன்றாக ஆக்கினன்.

பிறந்துதவழ் தொடங்கிய நாள்தொட்டு, எல்லையும், இரவும், நாடு, நாடாட்சி என்ற எண்ணமே கொண்டு வாழ்ந்த கரிகாலன், மனைவி, மக்களோடு மகிழ்ந்து வாழ்வதிலும் தவறினன் அல்லன். வாய்ப்புக் கிடைக்குந்

தோறும், சுற்றம் சூழச்சென்று காவிரியில், கழார்ப் பெருந்துறைக்கண் நடைபெறும் புதுப்புனலாட்டு விழா வில் கலந்துகொண்டு மகிழ்வதும் உண்டு.

கரிகாலன், புலவரைப் பேணிப் புகழ் பெருக்குவதில் பெரும் விருப்புடையன். அவன் வாயில், "நசையுநர்க்கு அடையா நன்பெருவாயில்" எனப் புலவர் புகழ்வர். அவன் புலவர்களைக் கேளிர்போல நோக்கி, வேட்பக்கூறி அழைத்து, கண்ணிற்காண, நண்ணுவழியிருத்தி, அவர்க்கு வேண்டும் உணவும், உடையும் பலப்பல வகையாய்த்தந்து, அவர் இருக்கும் வரைஇருத்தி, அவர்கள் விரும்பியபோது அவர் வேண்டும்பொருள் அளித்து அனுப்புவன். தன்னைப் பாடிய புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனருக்குப் பரிசாகப் பதினறு நூறாயிரம்பொன் அளித்தான் எனக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது.

காஞ்சியில் கோயில் கொண்டிருக்கும் ஏகம்பவாணன் திருக்கோயிலைப் புதுப்பித்து, தன் ஆண்டவன் அன்பைப் பலர் அறிய வெளிப்படுத்தியதோடு, அந்தணர் கூறிய ஆகம விதிப்படி வேள்விசெய்து வேறுலகப் பயன் பெறவும் அவன் தவறினனல்லன்.

# 11. காலம்

பல்லவராட்சிக்குப் பலநூறு ஆண்டுகட்கு முன்னரே, சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழ்நாட்டை ஆண்டு வந்தனர் எனினும், தமிழ் நாடாண்ட அரச இனம் பலவற்றுள், நாடாண்ட காலம் நன்கு அறிய அரசோச்சிய முதல் அரச இனம் பல்லவரே. பழந்தமிழ் வேந்தர் வரலாற்றினைக் காலத்தோடு தொடர்புபடுத்திக் காண இயலாத நிலையில் அவர்கள் வரலாற்றினை அறிவிக்கும் சான்றுகள் அமைந்துள்ளன. பிற்கால அரச இனத்தின் வரலாற்றை அறிதற்கு, அவ்வரசர்கள் காலத்தே எழுந்த கோயில்கள், அக்கோயில்களிலும், பிற பாறைகளிலும் அக்காலத்தே எழுதப்பெற்ற கல்வெட்டுக்கள், செப்பேடுகள், அவ்வரசர்கள் வழங்கிய நாணயங்கள், அக்காலத்தே, உலகின் இயற்கை அமைப்பைக் காணல், உலகச்சமயங்களின் நிலை அறிதல், வாணிபம் ஆக இவைகாரணமாகக் கடல் வழியாகவும், நில வழியாகவும் இங்கு வந்துசென்ற பிறநாட்டு அறிஞர்கள் எழுதி வைத்த குறிப்புக்கள், இந்நாட்டோடு, தாம் கொண்டிருந்த உறவு முறைகளை விளக்கி, வட இந்திய அரசர்களும், இலங்கை அரசர்களும் எழுதிவைத்த வரலாற்றுக்குறிப்புக்கள் போன்றனவும், பிறவும், சான்றுகளாக அமைந்துள்ளன போன்று, சங்க காலத்தே வாழ்ந்த அரசர்தம் வரலாற்றினை அறிதற்குச் சான்றாக ஒன்றும் கிடைத்தில. அவர்கள் வரலாற்றை அறிதற்கு, நமக்குத் துணையாக இருப்பன: அவர்கள் காலத்தும், அவர்க்குப் பின்னரும் வாழ்ந்த புலவர்கள் பாடிய பாக்களேயாம். அவைதாமும் அக்கால அரசர்வாழ்வை, அவர் வழிமுறைப்படி நிரல் படுத்தி அறிவிக்கும் நியதிஇன்றி, அவர்தம் வாழ்வில்கண்ட சிலபல நிகழ்ச்சிகளை ஒன்றிற்கொன்று தொடர்பேதும் இன்றி அறிவித்துள்ளன; இன்ன அரசர் இன்னகாலத்தில்

வாழ்ந்தவர்; அவருக்கு முன் ஆண்டவர் இன்னார்; அவருக்குப்பின் அரசுகட்டில் ஏறினோர் இன்ன அரசர்; அவர் காலத்தே, அண்மையில் உள்ள பிறநாட்டை ஆண்டிருந்த அரசர்கள் இவர்கள் என்று வரையறுத்துக் கூறும் வாய்ப்புடையன அல்ல அப்பாக்கள். அப்பாக்கள் பாடப்பெற்ற காலம், பாடிய புலவன், பாடப்பெற்ற அரசன், பாடுதற்குஏற்ற காரணம் ஆக இவ்விளக்கம் ஒன்றையும் அவை அறிவிப்பன அல்ல; இவ்விளக்கத்தை அளிப்பன. அப்பாக்களைத் தொடர்ந்து, அவற்றின் மேலாய் எழுதப்பெற்றிருக்கும் கொளுக்களேயாம். இக் கொளுக்கள் தாமும், பாக்களைப் பாடிய புலவரால் எழுதப்பட்டன அல்ல; பிற்காலத்தே, பழந்தமிழ்ப் பாக்களை, யாதோ ஒரு முறை வைத்து நிரல்படத்தொகுத்த அறிஞர் ஒருவரால் எழுதப்பெற்றன ஆம். அப்பாக்கள் பாடப்பெற்ற காலத்திற்கும், அவற்றிற்கடியில் விளக்கம் எழுதப்பெற்ற காலத்திற்கும் இடையில் எத்துணை காலம் கழிந்திருக்கும். அத்துணை காலம் கழித்து எழுதப்பெற்ற அவ்விளக்கங்கள் எத்துணை உண்மை வாய்ந்தன என்பதெல்லாம் நம்மால்கூற இயலாது ஏனினும், அவை தவறுடையன எனச் சான்றுவழி நிறுவப்படும்வரை, அவை அறிவிக்கும் செய்திகள் உண்மையவே என்றே கொள்ளுதல்வேண்டும். புறநானூறு முதலிய பாடல்களுக்கு அடியில் விளக்கம் அளிக்க எழுதப்பெற்ற கொளுக்களின் நேர்மை குறித்து, திருவாளர் P. T. சீனிவாச அய்யங்கார் அவர்கள் கொண்டுள்ள மாறுபட்ட கருத்துக்களை[1] எடுத்துக்கொண்டு, அவற்றின் நேர்மைகுறித்து ஐயங்கொள்ளும் அவர்போக்குச் சரியன்று என்பதை வரலாற்றுப் பேராசிரியர் திருவாளர் நீலகண்டசாஸ்திரியார் அவர்கள் நிறுவியுள்ளார்கள்.[2]

1. History of the Tamils. —Page. 410-414.
2. Studies in chola History and Administration.—Page. 7-18.

மேலும், சங்கஇலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப் படும், சில ஊர்ப்பெயர்கள், வரையறுத்துக் கூறப்பெறும் அரசியல் எல்லைகள் முதலாயின, கி. பி. முதல் நூற்றாண் டில் நம்நாடு வந்துசென்ற பிறநூல் பேராசிரியர்களாகிய பிளினி, தாலமி முதலியோராலும், அக்காலத்தே எழுதப் பெற்றதாகிய பெரிபுளுஸ் என்ற நூலாசிரியராலும், அறி யப்பட்டு, அவர்கள் குறிப்புக்களில் எழுதப்பட்டுள்ளன என்பதொன்றே, சங்க இலக்கியம் தரும் சான்றுகள் கொள்ளத்தக்கன அன்றித் தள்ளத்தக்கன அல்ல என்பதை உறுதி செய்யும்.

நந்தர் தலைநகர் பாடலிபுத்ரம்; அது கங்கையாற்றின் கரைக்கண் அமைந்தது; பதுமம் என்னும் பேரெண் அளவு பெரும்பொருள் படைத்து அதனால் மகாபதும நந்தன் எனச் சிறப்புப் பெயர் பெற்றான் என்று வடநூல்களால் பாராட்டப்பெறும் நந்த அரசன் ஒருவனால் ஈட்டப்பட்டுப் பாடலியில் திரண்டிருந்த பெரும்பொருள், பின்னர் மாற் றார் படையெடுப்பினால் அழியாவண்ணம், அன்னோர், கங்கையாற்றின் அடியில் சுருங்கை செய்து மறைத்து வைக்க, அப்பொருள் மறைந்து ஒழிந்தது; என்ற இச் செய்திகள், மாமூலனார் என்ற புலவர் பெருந்தகையாரால் சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய அகநானூற்றில் குறிக்கப் பட்டுள்ளன; இச் செய்திகள், அப்பாக்களுக்கடியில் காணப்பெறும் கொளுக்கள் வழியாக அன்றி, அப்பாக் களினாலேயே அறிவிக்கப்படுகின்றன.[1]

---

1 "நந்தன் வெறுக்கை." —அகம். 251.

'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியம்." —அகம். 265.

விஷ்ணுபுராணம், மகாவம்சம் முதலாயினவும், யுவான் ஸாங் என்ற சீன யாத்ரீகன் குறிப்பும், மகாபத்மநந்தன் பெரும்பொருள் சேர்க்கும் பேராசைக்காரன் என்றே குறித்துள்ளன என்றும், பாடலிபுத்ரத்தில் உள்ள அசோகனுடையவை என்று பொதுவாகக் கொள்ளப்படும் ஐந்து ஸ்தூபிகள், நந்த அரசன் ஒருவனுடைமை என்றும், அவை அவனுடைய பொக்கிஷங்களாம் என்றும் கூறும் வழக்காறு ஒன்று உண்டு என்றும் பேராசிரியர் ஸ்மித் என்பார் கூறுவர்.[1]

மோரியர் என்ற வடநாட்டு அரச மரபினர், தென்னாட்டை வென்று அடிப்படுத்தும் கருத்துடன் தேர்ப் படைசூழத் தெற்கு நோக்கிவந்தனர். வந்தார்க்குத், தென்னாட்டில் மோகூர் மன்னன் பழையனும், கோசரும் ஒருவரோடு ஒருவர் பகைத்துப் போரிட்டுக்கொண்டிருந்த நிகழ்ச்சி வாய்ப்பாக அமைந்தது; இதில், அவர்கள், கோசர்க்குப் பணியாது நின்ற மோகூர் மன்னனோடு பகைத்துப் போரிட்டனர்; இத்தென்னாட்டுப் படையெடுப்பில், மோரியர்க்குத் துணையாக வடுகர் என்பார் முன் வந்தனர்; அம்மோரியர் கொணர்ந்த தேர்கள் எளிதில் செல்லுமாறு மலைகள் அழிக்கப்பெற்றுப் பெருவழிகள் செய்யப்பட்டன என்ற இச்செய்திகள் சங்க இலக்கியங்களால் பெறப்படுகின்றன.[2]

1 "The Early History of India." —V. A. Smith. Page. 37.

2 " துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்

கி. மு. 321 முதல் 231 வரை, வடநாடாண்ட மௌரி யப் பேர் அரசர்கள் சந்திரகுப்தன், பிந்துசாரன், அசோ கன் ஆகிய மூவருள் அசோகன் கலிங்கம் தவிர பிற இடங் களில் போர் புரியவில்லை என்பது தெளியப்பட்டது; ஆயி னும் அவன் ஆட்சி வேங்கடமலைவரை பரவியிருந்தது என் பது வரலாற்று உண்மை; சந்திரகுப்தன், தன் ஆட்சிக் காலம் முழுவதும், வடநாட்டில் வெற்றியுடன் விளங்கிய கிரேக்க அரசுகளை அடக்கித் தனக்கென ஒரு பேரரசை அமைத்துக்கொண்டு, அதை அமைதி நிலவிய ஆட்சியாக அமைப்பதிலேயே நிற்கவேண்டியவனாகிவிட்டான். ஆகவே அவன் காலத்திலேயே தென்னாடு மௌரியர் ஆட்சியின் கீழ் வந்துவிட்டது என்று கொள்வதற்கில்லை; ஆகவே, விந்தியத்திற்கும், வேங்கடத்திற்கும் இடைப்பட்ட நாடுகள் பிந்துசாரன் காலத்திலேயே (கி. மு. 297—273) மௌரிய ஆட்சியின் கீழ் வந்திருத்தல் வேண்டும். இக் கருத்தையே வரலாற்றுப் பேராசிரியராகிய ஸ்மித் அவர்களும் கூறுகின் றார்.[1] பிந்துசாரனுடைய இத்தென்னாட்டுப் படை யெடுப்பே, சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் மோரி யர் படையெடுப்பாகும்.

நந்தர் ஆட்சி கி. மு. 371 முதல் கி. மு. 321 வரை நிலவியது. மௌரியப் பிந்துசாரன் ஆட்சிக்காலம் கி. மு. 297 முதல் கி. மு. 273 வரை நிலவியது; ஆகவே பாடலி யில் பெரும்பொருள் சேர்த்துவைத்த நந்த அரசனும்,

புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவாய்." —அகம். 251.

(ஆ) "முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த அறை." —அகம். 289.

1. "The Early History of India" —V. A. Smith. Page. 139.

தென்னாட்டின்மீது படையெடுத்து வந்த மௌரியர் பிந்து சாரனும் ஒரு நூறு ஆண்டு காலத்திற்குள் வாழ்ந்தோராவர்; நந்தர், பாடலி, பெரும்பொருள் இவற்றை இலக்கியத்தில் குறிப்பிடுவோரும், மோரியர் படையெடுப்பை விளங்க உரைப்போருள் சிறந்தோரும் ஆகியவர் மாமூலனாரே; அவர் இவ்விரு நிகழ்ச்சிகளையும் இவ்வளவு தெளிவாகக் கூறுவதை நோக்கின் மாமூலனார், அவ்விரு நிகழ்ச்சிகள் நடந்த காலத்திற்குச் சேய்மையானவரல்லர். மிக அண்மைக்காலத்தில் வாழ்ந்தவரே என்று கொள்ளுதல் நேரிதாம். கி. பி. முதல்நூற்றாண்டைச் சேர்ந்தோராகிய, பிளினி, (77 A. D.), தாலமி (140 A. D) முதலியோரால் அறிந்து கூறப்படும் முசிறி, தொண்டி, கொற்கை, மதுரை, முதலாய இடங்கள், அச்சிறப்புத் தோன்றவே சங்க இலக்கியங்களிலும் கூறப்படுவதால், அப்புலவர்களையும் அந்தக் காலத்தைச் சார்ந்தவராகவே கொள்ளுதலும் நேரிதாம். எவ்வாறு நோக்கினும், சங்க இலக்கியப் புலவர்களில் பெரும்பாலோர் கி. பி. முதல்நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று கொள்வதையே கிடைக்கும் சான்றுகள் உறுதி செய்தல் காணலாம்; ஆகவே, அப்புலவர்களால் பாராட்டப்பெறும் கரிகாலனை கி. பி. முதல் அல்லது அதற்கு முந்திய நூற்றாண்டைச் சார்ந்தவன் என்று கொள்வதில் இழுக்கு ஒன்றும் இல்லை.

பழந்தமிழ் இலக்கியங்களால் அறியப்பட்டுவந்த தமிழ் அரசர்கள், அசோகன் காலத்தில் (கி. மு 269—231),

---

(இ) "விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி." —புறம். 175

(ஈ) "விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த அறை"—அகம் 69.

அவனுடைய கல்வெட்டுக்களில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையால், கி. மு. மூன்றும் நூற்றாண்டிலேயே வரலாற்று நூல்களால் அறியப்பட்டனர்; எனினும் சங்க காலத் தமிழ்அரசர்களுள் முதன்முதலாகக் காலத்தொடு படுத்துக் கூறத்தக்கோன் சேரன் செங்குட்டுவனே. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில்கட்டி வழிபட்டஞான்று, அவ்விழாக்காண வந்திருந்த அரசர்களுள், கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பவனும் ஒருவன்.[1] இலங்கை வரலாற்றைக்கூறும் மகா வம்சம் என்ற நூல், கயவாகு என்ற அரசன், "நள்ளிருள் யாமத்து நகர் சோதனை செய்து வருகின்றபோது, நரைத்த முதுமகள் ஒருத்தி பெருங்குரல் பாய்ச்சி அழக்கண்டு, அன்னவள் இன்னலுக்கு ஏது, "பன்னெடு நாளைக்கு முன்னர்ப் படையெடுத்துப்போந்த கரிகால்வளவன், சிங்களக்குடிகள் பலவற்றைச் சிறைப்படுத்துச்சென்ற ஞான்று, தன் குடிக்கு ஒரு மகனையும் தான்கொண்டு போயினமையே" எனக்கேட்டுச் சோணாட்டின்மீது, படையெடுத்து வந்து தன்னகர்க் குடிகளைச் சிறையினின்று விடுவித்தனன்" என்ற வரலாற்றைக்

---

1. (அ) "அது கேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகுவென்பான், நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்ட முந்துறுத் தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித்திங்கள் அகவையினாங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை யெடுப்ப மழைவீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று"

—சிலம்பு: உரைபெறு கட்டுரை.

(ஆ) "குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்ட."

—சிலம்பு, வரந்தருகாதை: 159—163.

கூறுகின்றது; இவன் இலங்கை அரசர்களுள் முப்பத்தொன்பதாகவைத்து எண்ணப்படுவான் என்றும், இவன் காலம் கி. பி. 177-199 என்றும் குறிப்பிடுகின்றது. ஆகவே, சேரன், செங்குட்டுவன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்று வரலாற்று ஆசிரியர்கள் முடிவு செய்வர். மேலும் செங்குட்டுவன் வடநாடு சென்ற காலை, கங்கையைக் கடக்க, நூற்றுவர்கன்னர்[1] என்பார் துணை புரிந்தனர் எனக் கூறப்பட்டுளது; அவ்வாறு துணை செய்தோன், அக்காலை வடநாடு முழுவதும் வெற்றிவிளங்க அரசாண்டு வந்த ஆந்திரப் பேரரசர் மரபில் வந்த ஆந்திரச் சதகர்ணி, யக்ஞஸ்ரீ என்பவனே என்றும், அவன் ஆட்சிக்காலம் கி. பி. 184—213 என்றும் முடிவு செய்வர் வரலாற்று நூலார். இச்செய்தியும், சேரன் செங்குட்டுவன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தோன் என்பதை உறுதி செய்வது காண்க.

சேரன் செங்குட்டுவன் வரலாற்றை விரித்துரைக்கும் நூல் சிலப்பதிகாரமாகும்; அதனை இயற்றிய ஆசிரியர் இளங்கோவடிகள் செங்குட்டுவன் உடன்பிறந்தவரே; ஆதலின், சிலப்பதிகாரம், செங்குட்டுவன் காலத்திலேயே எழுதப்பட்டதாகும். சிலப்பதிகாரம் சங்க இலக்கியங்களுள்

---

1. "வேற்றுமை இன்றி நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னர்."

"சேனை செல்வது
நூற்றுவர் கன்னர்க்குச் சாற்றி ஆங்குக்
கங்கைப் பேர்யாறு கடத்தற்கு ஆவன
வங்கப் பெருநிரை செய்கதாம்."

"கங்கைப் பேர்யாற்றுக் கன்னரிற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங் கெய்தி."

—சிலம்பு : கால் கோள் : 148-49 : 162-65; 176-77

ஒன்றாக வைத்து எண்ணப்படுகிறது. எனினும் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை நூல்களை நோக்க, காலத்தால் சிறிது பிந்தியது என்பது வரலாற்று ஆசிரியர்களும், இலக்கியங்களில் ஆளப்படும் சொல் அமைப்பு, இலக்கண அமைப்புக் கொண்டு, அவ்விலக்கியங்களின் காலவேறு பாட்டைக் காணும் மொழிநூல் ஆசிரியர்களும் முடிவு செய்யும் முடிவாம். ஆகவே, பத்துப்பாட்டு, எட்டுத் தொகைநூல்களால் அறியப்படும் கரிகாலன், சிலப்பதி காரத்தால் அறியப்படும் செங்குட்டுவனுக்குக் காலத்தால் முற்பட்டோன் என்பது துணியப்படும்.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், கண்ணகி வரலாறு, கரிகாலன் காலத்தில் நடந்தது என்ற தவறான கருத்துடையவராதலின் மூலப்பகுதி யில் சோழஅரசனைக் குறிக்கும் சொற்றொடர் வருமிட மெல்லாம், அச்சொற்றொடரால் குறிக்கப்படும் சோழ அரசன் கரிகாலன் என்றே பொருள்செய்துள்ளார் எனி னும், இளங்கோவடிகள் அச்சொற்றொடர் எல்லாம், குறிப்பாகவேனும் கரிகாலனைக் குறிக்கும் வகையில் அமைக்காது, பொதுவாகச் சோழஅரசன் என்ற பொருள் தோன்றவே கூறிச்செல்கின்றார் ஆதலாலும், செங்குட்டுவன் காலத்தில் வாழ்ந்த சோழஅரசன் கரிகாலன் அல்லன்; அவனுக்குப் பிற்பட்ட வேறு ஒரு சோழ அரசனே என்பதைக் குறிக்கும் சான்றுகள் பல, அச் சிலப்பதிகாரத்திலேயே காணக்கிடப்பதாலும், இளங்கோவடிகளும், அவர்காலப் புலவரும் அவர் நண் பரும் ஆகிய சாத்தனாரும், கரிகாலனைத் தம்முடைய நூல் களில் குறிப்பிடும் போதெல்லாம் அவன் இறந்த காலத்தில் வாழ்ந்தோன் என்பது தோன்றவே கூறுகின்றனர் ஆதலா

லும்,[1] புகார் நகரின்கண் வாழ்ந்த கற்புடைமகளிர் எழுவர் வரலாற்றை எடுத்துக் கூறி, அவர்கள் பிறந்துவாழ்ந்த புகார் நகரில் பிறந்த நான் எனக் கண்ணகிகூறும் எழுவரில் ஒருவராக மன்னன் கரிகால் வளவன்மகளும் கூறப் படுதலின், அவளும், அவள் தந்தை கரிகாலனும் கண்ணகி காலத்திற்குமுற்பட்டவர் என்பது பெறப்படும் ஆதலாலும் கரிகாலன், செங்குட்டுவன் காலத்தவன் அல்லன்; அவனுக்கு முற்பட்டோன் என்பதையே சிலப்பதிகாரமும், மணிமேகலையும் உறுதிசெய்கின்றன. இருவர்க்கும் இடைப் பட்ட காலம், ஒரு நூறு ஆண்டு என்று கொண்டு—அவ் வாறே கொள்வர்பலர்—செங்குட்டுவன் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பதையும் கொண்டுநோக்கி னால், கரிகாலன் காலம் கி. பி. முதல் நூற்றாண்டு என்பது முடிவாதல் காண்க. இம்முடிவு, முன் நாம் வேறுவகை யால் பெற்ற முடிவை அரண்செய்தல் காண்க.

இனி, சங்க இலக்கிய காலம் கி. பி. இரண்டாம் நூற் றாண்டன்று: ஐந்தாம் நூற்றாண்டே என்று கொள்வாரும் உளர்: தம் கொள்கைக்குச் சான்றாக அவர் கொள்வன:—

1. சமுத்திரகுப்தனுடைய (கி. பி. 326-375) அலகா பாத் கற்றூண் கல்வெட்டு, அக்காலைக் காஞ்சியை ஆண்ட

---

1. "இருநில மருங்கில் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்...
புண்ணியதிசைமுகம் போகிய அந்நாள்,"
—சிலம்பு. இந்திர: 89-94.

"கரிகால் வளவன் தண்பதம் கொள்ளும் தலைநாள்."
—சிலம்பு. கடலாடு: 159.

"மன்னன் கரிகால் வளவன் நீங்கிய நாள்
இந்நகர் போல்வதோர் இயல்பினதாகி."
—மணி: விழா: 39-40.

பல்லவமன்னன் விஷ்ணுகோபனை (கி பி. 340)ப் பல்லவன் என்ற இனப்பெயர் கொடுத்துக் குறிக்காது, காஞ்சி மன்னன் என்று மட்டுமே குறிப்பிடுகின்றது; இதனால், நான்காம் நூற்றாண்டில் பல்லவர் என்றபெயர் பெருவழக்கில் இல்லை என்பது தெளிவாம். சங்க இலக்கியங்களில், காஞ்சி அரசர்கள், திரையர், தொண்டையர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர்; ஆகவே, சமுத்திரகுப்தன் படையெடுப்பின் போது, காஞ்சியை ஆண்ட விஷ்ணு கோபனும் ஒரு திரையனே; மேலும், தொண்டை மண்டலப் பட்டயம், திரையர் இனத்தின் கிளைகள் பலவற்றை அறிவிக்கிறது; அக்கிளைகளுள் ஒன்றாகப் "பல்லவ திரையர்" என்பாரும் உளர்; இது, பல்லவரும், திரையரும் வேறுவேறு அல்லர்; ஒருவரே என்பதை உறுதி செய்யும். இதனால், பல்லவர், அவர்கள் பொதுப்பெயர் அல்லது கூட்டுப்பெயராகிய, திரையர் என்ற பெயரால் சங்க இலக்கியங்களால் அறியப்பட்டனர் என்று கொள்ளலாம்; மேலும், "பரிசிலைத் தொண்டைப் பல்லவன்," என்ற தொடரில் அவர்கள் பல்லவர் என்ற பெயராலும் அறியப்பட்டுள்ளனர்; ஆகவே, பல்லவரை அறிந்து குறிக்கும் சங்க இலக்கியகாலம் பல்லவர் காலத்திற்குப் பிற்பட்டது, அல்லது அவர்கள் காலத்தது ஆதல்வேண்டும்.

2. சங்கஇலக்கியங்களில், குறுநில மன்னரும் கொடைவள்ளல்களுமாக வேளிர்பலர் வரலாறு விளங்க உரைக்கப்பட்டுள்ளது. இவ்வேளிர் சளுக்கியரின் வேறு அல்லர்; "வேள்புல அரசர் சளுக்க வேந்தர்," என்பது திவாகரம்: திவாகரரைப் போற்றிப் புரந்தவள்ளல் அம்பர் கிழான் அருவந்தை என்பவன்; இவ்வம்பர்கிழான் அருவந்தையைக் கல்லாடனார் என்ற சங்ககாலப்புலவர் பாராட்டியுள்ளார். ஆகவே, அம்பர்கிழான் அருவந்தை-

யும், அவரால் புரக்கப்பட்ட திவாகரரும், கல்லாடர் காலத்தோ, அன்றி அவர்க்கு முற்பட்ட காலத்தோ வாழ்ந்தவராதல் வேண்டும். திவாகரர், வேளிரே சளுக்கியர் என்று கூறுகின்றார். ஆகவே, திவாகரரும், அம்பர் கிழான் அருவந்தையும், கல்லாடரும், சளுக்கியர் காலத்தவராவர். கல்லாடர் சங்ககாலப் புலவர்; ஆகவே, சங்க காலமும், சளுக்கியர்காலமும் ஒன்றே; சளுக்கியர் வரலாறு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே முதல் முதல் அறியப் படுகின்றது; ஆகவே, சங்ககாலம் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததே.

3. மணிமேகலை என்ற நூல் சங்ககாலப் புலவர் சாத்தனாரால் பாடப்பெற்றது; அதில், "குச்சரக் குடிகைத் தன்னகம்புக்கு,"[1] என்ற தொடர் காணப்படுகிறது; இதில்வரும் குச்சரக் குடிகை என்பது குறித்து, அந் நூலிற்குக் குறிப்புரை எழுதி அதை வெளியிட்ட பேராசிரியர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், "கூர்ச்சர தேசத்துப் பணியமைந்த சிறிய கோயில்; கூர்ச்சர தேசம் சிற்பத்திற்குப் பெயர்பெற்றது என்பர்;.......கூர்ச்சரம் என்பது குஜ்ஜரம் என்று கன்னடபாஷையில் வழங்கப் படுகின்றது," என்று எழுதியுள்ளார்கள். கூர்ச்சரர் வரலாறு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குமுன் அறியப்படவில்லை; ஆகவே, அவர்களைக்குறிக்கும் மணிமேகலையும், அதன் ஆசிரியர் சாத்தனார் வாழ்ந்த சங்ககாலமும், ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டனவாகா.

4. நக்கீரர், சங்ககாலப் புலவர்; இவரே இறையனார் களவியலுக்கு உரை எழுதியவருமாவர்; அவ்வுரை ஏட்டில் எழுதப்படாமல் பத்துத் தலைமுறைவரை, ஆசிரியர், மாண

1. மணிமேகலை. 18 : 145.

வர்க்கு உரைத்தல் என்ற முறைப்படியே பேச்சு வடிவிலேயே வந்து, பின்னரே எழுதப்பட்டது என்ப. இச்செய்தியை அறிவிப்பவர், அவ்வுரையைக் கேள்வி வழி யாகக் கேட்டவருள் கடைசி மாணக்கரும், அதை முதன் முதல் எழுத்துவடிவில் கொணர்ந்தவரும் ஆகிய ஒருவரே. அவர் நடையில், நெல்வேலி, சங்கமங்கைஎன்ற இடங்களில் வெற்றி பெற்ற பாண்டிய மன்னனாகிய அரிகேசரி பராங்குசன், நெடுமாறன் என்றபெயர் பயிலவழங்கப் பட்டுள்ளது. இதனால் அம்மன்னன் காலத்திலேயே அவ் வுரை எழுத்துருப்பெற்றது என்று கொள்ளலாம். அம் மன்னன் கி. பி. 670 முதல் 710-வரை ஆண்டவனாவன்; ஒரு தலைமுறைக்காலம் 20 ஆண்டுகள் என்று கணக்கிட் டால் (670—200 (20 × 10)=470), அவ்வுரை நக்கீரரால் எழுதப்பட்ட காலம் கி. பி. 470 என்று ஆகிறது. ஆகவே, சங்ககாலம் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததே.

5. புத்தன் பிறந்த நாட்டையும், அம்மதம் நிலவிய நாடுகளையும் காண்பதே குறிக்கோளாகப் புறப்பட்ட சீனர்களுள் பாகியான் (Fa-hien) என்பவன் (கி. பி 399-414) ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சுமத்ரா ஜாவா முதலிய நாடுகளுக்குச் சென்றகாலை அங்கே புத்த மதம் அழிந்து, வைதீகமதம் வாழ்வதைக்கண்டு எழுதியுள் ளான். கி. பி. 670-ல் அங்குச்சென்று ஆறுதிங்கள்வரை தங்கியிருந்த இத்ஸிங் (Itsing) என்ற மற்றொரு சீனன், அங்கே புத்தமதம் சிறந்து விளங்குவதை விரித்துரைத்துள் ளான். ஆக, இவ்விருவர்க்கும் இடைப்பட்டகாலத்தே, (கி. பி. 414-670). அங்கே, புத்தமதம் பரவத் தொண்டு செய்த வர் ஒருவர் இருத்தல்வேண்டும். மணிமேகலை, சாவகநாடு சென்று, அந்நாட்டு அரசன் புண்ணியராசன் தன் பழம் பிறப்புணரத் துணைசெய்தாள் எனவும், அங்கே அரச

னுக்கு அறவுரை அளித்திருக்கும் தருமசாவகன் என்ற முனிவனையும் கண்டு வந்தாள் எனவும் மணிமேகலை கூறுகின்றது; ஆகவே, பாகியான் காலத்தே சீர்குலைந்திருந்த புத்தமதம், இத்வசிங் காலத்தே சிறப்புற்றிருந்ததற்குக் காரணமாய் இருப்பது, மணிமேகலையின் சமயத்தொண்டே. ஆகவே, மணிமேகலை இவ்விருவர்க்கும் இடைப்பட்ட காலத்திலேயே வாழ்ந்தவளாதல் வேண்டும் என்று கொண்டு, சங்ககாலம் ஐந்தாம் நூற்றாண்டே என்பர் சிலர்.

6. தன் காலத்தில், புத்தமதம் தமிழ்நாட்டில் நன்கு வளர்ந்திருந்ததாகப் பாகியான் (399—414) கூறுகின்றார்; தமிழ்நாட்டில் புத்தமதம் தழைக்கவில்லையே என்று அறவண அடிகள் என்பார் மனங் கவல்வதாக மணிமேகலை அறிவிக்கின்றது; பாண்டியநாட்டில் புத்தமதம் தழைக்கவில்லையாயினும், பல்லவநாட்டில் அது மக்கள் அனைவராலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக, கி. பி. 640-ல், பல்லவர் தலைநகர் காஞ்சியில் தங்கியிருந்த "இயான்சாங்," (Hiuen Tsang) என்ற சீனர் கூறுகின்றார். ஆகவே, மணிமேகலை குறிப்பிடும், புத்தமத வீழ்ச்சி பாகியானுக்குப் பிறகே தோன்றியிருத்தல்வேண்டும். ஆகவே, மணிமேகலை காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டே; ஆகவே, சங்ககாலமும் அஃதே.

சங்ககாலம் ஐந்தாம் நூற்றாண்டே என்பார் மேலே காட்டிய சான்றுகளின் தகுதிப்பாட்டை இனி முறையாக ஆராய்ந்து காண்போம்.

1. கி. பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்புப்பட்டயங்கள் பலவும் காஞ்சி மன்னர்களைப் பல்லவர் என்றே குறிப்பிடுகின்றன. ஆகவே, அலகாபாத் கல்வெட்டு அவர்களைப் பல்லவர் என்று குறிப்பிடாமை

ஒன்றைக்கொண்டே நான்காம் நூற்றாண்டில் பல்லவர் என்ற பெயர் பெருவழக்கில் இல்லை என்று கொள்வது சரியன்று; மேலும், காஞ்சி மன்னன் விஷ்ணுகோபனைப் பல்லவன் என்று குறிப்பிடாது, காஞ்சிமன்னன் என்றுமட்டும் குறிப்பிடும் அவ்வலகாபாத் கல்வெட்டு, அவனைத் திரையன் என்றும் குறிப்பிடவில்லை; ஆகவே, அக்காலப் பல்லவர், திரையர் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர் என்று கொள்வது சரியன்று. மேலும், காஞ்சிமன்னர்களைத் திரையர், தொண்டையர் என்ற பெயரால் அழைக்கும் வழக்கமும், கரிகாலன் காலத்திற்குப் பின்பே காணப்படுகிறது; அதற்கு முற்பட்ட காலத்திலெல்லாம், காஞ்சி மன்னர்கள், அருவாளர் என்ற பெயரினாலேயே அழைக்கப்பட்டுள்ளனர். இது, "காஞ்சியும் கரிகாலனும்" என்ற தலைப்பின்கீழ் விளங்க உரைக்கப்பட்டுள்ளது. பல்லவர்க்கும், திரையர்க்கும் தொடர்பு உள்ளதாகக்கூறும் தொண்டைமண்டலப் பட்டயம், மிக மிகப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஒன்று ஆகவே, அது கூறும் சான்று ஏற்கத்தக்கதன்று. "பரிசிலைத் தொண்டைப் பல்லவர் ஆணையின்" என்ற தொடர் அமைந்த செய்யுள், தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல் ஐம்பத்துநான்காம் சூத்திரத்தின் உரையில், மேற்கோட் செய்யுளாக ஆசிரியர் நச்சினார்க்கினியரால் ஆளப்பட்டுளது என்பதல்லது, அஃது இன்னகாலத்தது, இன்னாரால் இயற்றப்பட்டது என்பதெல்லாம் அறிய இயலாது. பதினைன்காம் நூற்றாண்டைச்சேர்ந்த உரையாசிரியர் ஒருவரால் கையாளப்படும் மேற்கோள் செய்யுளில் வரும் ஒரு தொடரை, நான்காம் நூற்றாண்டு நிகழ்ச்சியை உறுதிசெய்யும் சான்றாகக் கொள்வது நேரிதன்று. பல்லவர், திரையர் அல்லர். திரையர் முற்றிலும் தமிழ்ப்பண்பு வாய்ந்தவர்; பல்லவர்,

தமிழ்ப் பண்போடு முற்றிலும் மாறுபட்ட பண்புவாய்ந்தவர் என்பதே வரலாற்று ஆசிரியர் பலர் கருத்தாம். மேலும், விஷ்ணுகோபனே பல்லவமரபின் முதல் அரசன் என்று கொள்வதற்கு இல்லை; அவனுக்கு முன்னும் பல பல்லவ அரசர்கள் வாழ்ந்துள்ளனர். ஆகவே, விஷ்ணுகோபன் காலமே பல்லவர் தோன்றிய காலம்; அவர்க்கு முந்திய காலத்தே பல்லவர் இல்லை என்று முடிவுசெய்வது முறையாகாது. ஆக, இதுகாறும் கூறியவற்றால், பல்லவர்க்கும், திரையர்க்கும் தொடர்புடையதாகக்கூறி, அதைச் சான்றாகக்கொண்டு, சங்க இலக்கியகாலம் நான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதே என்று முடிவுசெய்வது முரண்பட்டதாகும் என்பது விளக்கப்பட்டது.

2. சங்கஇலக்கியங்களில் வரும் வேளிர்கள் முற்றிலும் தமிழ்ப்பண்பு வாய்ந்தவர்; தமிழ் வளர்த்தவர்; தமிழ்ப் புலவர் பலரைப் பேணிய பெருவள்ளல்கள் ஆவர்; ஆனல், சளுக்கியரோ எனின், தமிழ்ப்பண்போடு முற்றிலும் மாறுபட்டவர்; ஆக மொழியால், பண்பால் முற்றும் மாறுபட்ட இருவரை, திவாகரர், வேளிரும், சளுக்கியரும் ஒருவரே எனக்கூறியது ஒன்றையே கொண்டு இருவரும் ஒருவரே என்றுகூறித் தொடர்புபடுத்துவது சரியன்று. சங்ககாலத்திற்குப்பின் இருநூறு, முந்நூறு ஆண்டுவரை, தமிழக வரலாற்றில் இருள்நிலையை உண்டாக்கிவிட்டனர் களப்பிரர் என்ற ஓர் இனத்தார்; இவர்கள் தோற்றம், வரலாறு முதலாயின அறியக்கூடவில்லை எனினும், இவர்கள் தெற்கிலிருந்து வடநாடு சென்றவரல்லர்; மாருக, வடக்கேயிருந்தே தென்னாடு நோக்கிவந்தவர் என்பது உண்மை. ஆக, இவர்கள், தமிழ்நாட்டில் சங்ககாலத்திற்குப்பின் நுழைந்தனர் எனின், அதற்கு முற்பட்ட காலத்தே இவர்கள் சளுக்கியர் நாட்டில் இருந்

தவராதல் வேண்டும். இவர்கள் உண்மையினாலேயே, சளுக்கியர் அப்போது அறியப்படாமல், களப்பிரர் அழிவிற்குப் பிறகு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் அறியப்பட்டவராதல் வேண்டும். ஆகவே, வரலாற்றிற்குத் தெரிந்த முதல் சளுக்கிய அரசனும், ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தோனும் ஆகிய ஜயசிம்மனுக்குமுன், சளுக்கியர் வரலாறு அறியப்படவில்லை என்பதைக்கொண்டே, அவனுக்குமுன் சளுக்கியர் இனமே இல்லை என்று முடிவுசெய்வது முறையாகாது. இருந்தனர்; ஆனால், அவர்கள் வரலாறு அறியப்படவில்லை என்றே கொள்ளுதல்வேண்டும். வரலாற்றுக் குறிப்புக்களால், அறியப்படவில்லை எனின், பிறமுறையால் அறியப்படல் இயலாது என்று கொள்ளுதல் கூடாது; வரலாற்றிற்குத் தோன்றாத அவர்கள், இலக்கியங்களுக்கு அறிந்தவராக இருத்தல்கூடும். அதனாலேயே திவாகரர் அவர்களை அறிந்து கூறியுள்ளார். சளுக்கியர் ஐந்தாம் நூற்றாண்டிற்குமுன் இருந்தனர் என்று காட்டும் வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்கவில்லை; ஆகவே அவர்கள் தோன்றிய காலம் அதுவே; அவர்களை அறிந்துள்ளார் திவாகரர்; ஆகவே திவாகரர் காலம் ஐந்தாம் நூற்றாண்டே; திவாகரரைப் புரந்த அம்பர்கிழான் அருவந்தையை, சங்க காலப் புலவராகிய கல்லாடர் பாடியுள்ளார்; ஆகவே, கல்லாடரும், அவர் வாழ்ந்த சங்க காலமும், ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரே என்று கொள்வதினும், சங்க காலம் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது; திவாகரர் சங்ககாலத்தவர்; அவர் சளுக்கியரை அறிந்துள்ளார்; ஆகவே, சளுக்கியர் வரலாறு ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே முறையாகக் காணக்கிடைக்கிறது. எனினும் அவர்கள் இனம் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே இருந்து வருகிறது என்று கொள்

வதே முறையாகும். ஆக, திவாகரம், சளுக்கியர் காலநிலையை அறிவதற்குத் துணைபுரிகிறது என்று கொள்ள வேண்டுமே ஒழிய, அது சங்க இலக்கியங்களின் காலநிலையை அறியும் வாயிலாக உளது என்று கொள்ளுதல் கூடாது.

3. மணிமேகலை குறிப்பிடும் குச்சரக்குடிகை என்பதற்கு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் கொள்ளும் பொருளையே பொருளாக எல்லோரும் ஏற்றுக்கொள்வதில்லை. கூர்ச்சரத்துச் சிறந்த சிற்பிகளைக்கொண்டு அமைத்த கோயில் என்று அதற்குப் பொருள் கொள்வதே சாத்தனார் கருத்தாயின், அவர் மகதவினைஞர், மராட்டக் கம்மர், அவந்திக் கொல்லர், யவனத் தச்சர் எனப் பிற நாட்டுத் தொழிலாளரைத் தொகுத்துச் சிறப்பித்துக் கூறிய இடத்திலேயே, கூர்ச்சரச் சிற்பிகளையும் எடுத்தோதிச் சிறப்பித்திருப்பர். ஆனால் அங்கு அவர்கள் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, கூர்ச்சரத்தார் செய்த கோயில் என்று பொருள் கொள்வது முறையாகாது. திருவாளர் R. சத்தியநாதன் அவர்களும்,[1] பிறரும் பொருள்செய்வது போன்றே, அச்சொற்றொடர் "கல்லால் அமைந்த கோயில்." என்பதல்லது வேறு பொருள் தாராது என்று கொள்வதே நேரிதாம். இவ்வாறே அச்சொற்றொடர் குறித்துப் பலரும் பலவிதமான பொருள் கூறுகின்றனர். ஆக, தெளிவற்றதும் பலபொருள்படும் பண்பு வாய்ந்ததுமான ஒரு சொல் ஆளப்பட்டது ஒன்றே கொண்டு ஒரு பெரு நூலின் காலத்தை உறுதி செய்தல் ஒழுங்காகாது.

4. இறையனார் களவியல் உரை அளிக்கும் செய்திகள் பலவும் கற்பனை கலந்தவை. வரலாற்றுச் சான்றாக

1. "History of India" —R. Sathianathan. Page 212.

ஏற்கும் தகுதியற்றவை. மேலும் இறையனார் களவியல் குறிப்பிடும் பாண்டிய மன்னன், அரிகேசரி பராங்குச நெடுமாறனே என்பதை ஏற்றுக்கொள்ள இயலாத சான்றுகள் பல அவ்வுரையிலேயே அடங்கியுள்ளன ; அம் மன்னன் நடத்திய போர்க்களங்களுள், பாழி, செந்நிலம், நெல்வேலி முதலியவற்றோடு விழிஞம் என்னும் இடமும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் விழிஞப் போர் எட்டாம் நூற்றாண்டின் ஈற்றிலும், ஒன்பதாம் நூற்றாண்டின் முதலிலும் நடைபெற்றதாகவே கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன[1]. ஆகவே, வரலாற்றோடு ஒத்துவாராது, முரண்படும் நிகழ்ச்சிகளையே கொண்டு நிற்கும் சான்று ஒன்றைக்கொண்டு பாண்டிய மன்னன் ஒருவன் காலத்தை முடிவு செய்து, அதைக்கொண்டு சங்ககாலத்தை உறுதி செய்தல் ஒழுங்கற்ற செயலேயாகும்.

5. சாவகத்தில் புத்த மதத்தை வளர்க்கும் பணி, பாகியானுக்குப்(399—414)பின்னரே தொடங்கப்பெற்றது என்று கொள்ளவேண்டுவதின்று; அப்பணி, அவனுக்கு முன்னரே கூடத்தொடங்கப் பெற்றிருத்தல் கூடும். அப்பணியை மேற்கொண்ட மணிமேகலை, அதைப் பாகியான் சாவகம் வருதற்கு முன்னரே தொடங்கியிருத்தல் கூடும். ஆனால், அப்பணி, அவள் காலத்திலேயே முற்றிலும் பயன் அளிக்காது, அவளைத் தொடர்ந்து பாகியான் காலத்திற்குப் பிறகும் அப்பணியைப் பலர் மேற்கொண்டதன் விளைவாக கி. பி. 671ல் முழுப்பயன் அளித்திருத்தல் கூடும். காஷ்மீர் புத்தன், குணவர்மன் என்பவன், ஜாவாநாட்டு மன்னனையும், அவன் தாயையும், புத்தமதம் தழுவச்செய்தான் என்று பாகியான் என்பானே கூறியுள்ளான்.[2] மணி

1. The Pandyan kingdom —Page 55 (Foot-Note)
2. Sathynathan's History of India. Page 481.

மேகலை சாவகம் சென்றது பாகியான் காலத்துக்குப் பின்னரே என்று கொள்வதற்குரிய சான்று ஒன்றும் கிடைக்கவில்லை. அவள் சாவகம் சென்றாள் என்பதல்லது அவள் சென்ற காலம் இது என்பதை மணிமேகலை அறிவிக்கவில்லை. ஆகவே, மணிமேகலை சாவகம் சென்ற நிகழ்ச்சி ஒன்றையேகொண்டு, அது பாகியான் காலத்திற்கும் இத்சிங் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்திலேயே நிகழ்ந்திருத்தல் கூடும் என்று கற்பனை செய்துகொண்டு, அக்கற்பனையே சான்றாகச் சங்கஇலக்கியத்தின் காலத்தைக்காண முயலுதல், கனவில் கண்டதை நினைவில் அடைய முயற்சிப்பதுபோலாகும்.

6. மணிமேகலையில் அறவணஅடிகள் கொள்ளும் மனவருத்தம், வளர்ந்த புத்தமதம் மீண்டும் அழியத் தொடங்கியதைக் கண்டே என்று கொள்வதினும் தமிழ் நாட்டில் அது விரைவில் பரவத் தொடங்காமை கண்டே என்று கொண்டால், அவர் காலத்தைப் பாகியான் காலத்திற்குப் பின் கொணர வேண்டிய நிலை ஏற்படாது. மாயோன், சேயோன், வருணன், வேந்தன் போன்ற வைதிகக் கடவுள்களின் வரலாறுகளை அறிவிக்கும் அகநானூறு, புறநானூறு போன்ற எட்டுத்தொகையைச் சேர்ந்த சங்கஇலக்கியங்கள், புத்தன்வரலாற்றை அறிவிக்கவில்லை. ஆனால், அப் புத்தன் வரலாறு சங்க இலக்கியங்களோடு ஒருங்கு வைத்து எண்ணப்படும் தகுதியுடையவேனும், காலத்தால், அவற்றினும் சிறிது பிற்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் விளங்க உரைக்கப்பட்டுளது. இதனால், அகம், புறம்போன்ற சங்க இலக்கியங்கள் எழுந்த காலத்தே, அம்மதம் தமிழ் நாட்டில் நுழையவில்லை; அவற்றிற்குப் பிற்பட்ட காலத்திலேயே அது வளரத் தொடங்கிற்று என்பது புலனாம்.

மணிமேகலை காலத்தே அறவணவடிகள் வருந்தினார் எனின், அம்மதம் தமிழ்நாட்டில் விரைந்து பரவாமை கண்டே வருந்தினாரல்லது, தமிழ்நாட்டில் அவர் காலத்துக்குமுன் நன்கு வளர்ந்திருந்த அம்மதம் அவர் காலத்தே அழியத்தொடங்கியது கண்டு வருந்தினாரல்லர். அகம் புறம்போன்ற எட்டுத்தொகை நூல்கள் காலத்தே காணப்படாத ஒரு மதம், அதை அடுத்த அண்மைக்காலத்தில், விரைந்து முழுவளர்ச்சி பெற்று, அந் நூல்களோடு ஏறக்குறைய ஒத்தகாலத்தில் தோன்றிய சிலப்பதிகார, மணிமேகலை காலத்திலேயே அழியவும் தொடங்கிவிட்டது என்று கொள்வது சிறிதும் பொருந்தாது. ஆகவே, தமிழ்நாட்டுப் புத்தமதத்தின் நிலையைக்கொண்டு சங்ககால இலக்கியத்தின் கால நிலையை அறியமுயலுதல் ஆகாத செயலேயாம்.

ஆக, இதுவரை கூறியவாற்றான், சங்க இலக்கிய காலம் ஐந்தாம் நூற்றாண்டே என்று கொள்வார், தமக்கு ஆதாரமாகக் கூறிய சான்றுகள் ஏற்கும் தகுதியற்றன என்பது தெளிவாகவே, தாலமி, பிளினி போன்ற பிறநாட்டு நில நூல் ஆசிரியர்கள் அளிக்கும் குறிப்புக்களும், இலங்கை வரலாறு மகாவம்சமும், சிலப்பதிகாரமும் அளிக்கும் குறிப்புக்களும் சான்றாகக்கொண்டு, சங்ககாலம் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததே என்று முன்பு முடிபு செய்ததே உறுதியாக்கப்பட்டது. எனவே, கரிகாலன் காலம் கி. பி. முதல் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதன்று என்பது துணியப்பட்டது.





*Published by :*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, :: MADRAS, 1.

*Head Office :*

24, EAST CAR STREET :: THIRUNELVELI

அப்பர் அச்சகம், சென்னை-1.